விலை : 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

website : www.valampurii.lk

E-mail: valampurii@yahoo.com

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2044 மார்கழி 09 செவ்வாய்க்கிழமை (24.12.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 005

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

# தனிநாட்டுக்கான நிழல் வடக்கில் தெரிகிறது!

## ஹெல உறுமய தெரிவிப்பு

(கொழும்பு)

**இலங்கையின் வடக்கில் தனி நாட்டுக்கான நிழல்கள் தென்பட ஆரம்பித் துள்ளதாக ஜாதிக ஹெல உறுமயவின் செயலாளரும் அமைச்சருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்தார். கொழும்பில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசும்போதே அவர் இதனை கூறியுள்ளார்.**

ஐக்கிய தேசியக் கட்சி பல்தேசிய சக்திகளின் கைப்பாவையாக மாறி யுள்ளது. நாட்டை பிரித்தாவது ஆட்சி அதிகாரத்தை கைப்பற்ற வேண்டும் என்ற முயற்சியில் அந்த கட்சி ஈடு பட்டுள்ளது.

நாட்டில் பொதுநலவாய நாடுகளின் மாநாடு நடந்த போது, சிங்களவருக் கும், பௌத்தர்களுக்கும் எதிராக குரலகொடுக்கும் அடிப்படைவாத குழுக் களை இணைத்து கொண்டு ஐக்கிய தேசியக் கட்சி கண்காட்சிகளை நடத்தியது.

இப்படியான கூட்டணிகளை ஏற்படுத்தி வடக்கில் சம்பந்தனின் வாக்குகளையும் கிழக் கின் அடிப்படைவாதி

20-ம் பக்கம் பார்க்க

## திருமலை தாக்குதல் அறிக்கை ஐ.நாவிடம் நேற்று கையளிப்பு

(ஜெனிவா)

சர்வதேச மனித உரிமைகள் தினத்தில் திருகோணமலை நகரில் காணாமற் போனோரின் உறவுகள் நடத்திய கவனயீர்ப்புப் போராட்டத்தின் மீது இனந் தெரியாத குழு நடத்திய தாக்குதல் குறித்த அறிக்கை, நேற்று கொழும்பில் உள்ள ஐ.நா. அலுவலகத்திடம்காணா மல்போனோரை தேடியறியும் குழு கையளித்தது.

இந்த ஆவணம், ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கும், ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன், ஐ.நா. மனித உரிமைகள்ஆணையா ளர் நவநீதம்பிள்ளை ஆகியோருக் கும் அனுப்பி வைக்கப்படும். இந்த ஆவணத்தில் திருமலைத் தாக்கு தல் குறித்த விடயங்கள் உள்ளடக் கப்பட்டுள்ளன.

அத்துடன் காணா மற் போனோர மற்றும்

19-ம் பக்கம் பார்க்க

## மீனவர்களுக்கு எதிராக குற்றப்பத்திரிகை

(சென்னை)

தூத்துக்குடி மாவட்டம் தேமல் நகர் பொலிஸார் தாம் கைது செய்த இலங்கை மீனவர்கள் 59 பேர் மீது இராமநாதபுரம் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய் வதற்கான சகல ஒழுங்குகளையும் செய்துள்ளனர்.

இலங்கை அரசாங்கம் தம் வசமுள்ள இந்திய மீனவர்களை விடுவிக்குமென எதிர்பார்த்து இலங்கை மீனவர்களை விடுவித்துவந்த தமிழ்

20-ம் பக்கம் பார்க்க

## வைத்தியசாலைத் தொண்டர்களின் போராட்டம் முடிபுக்கு வந்தது

### அமைச்சர் டக்ளஸின் உறுதிமொழியையடுத்து

(யாழ்ப்பாணம்)


யாழ். போதனா வைத்தியசாலை யில் பணியாற்றும் தொண்டர் ஊழி யர்களினால் கடந்த 12 நாட்களாக முன்னெடுக்கப்பட்டு வந்த போராட் டம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வின் உறுதிமொழியையடுத்து நேற்று மாலை 5 மணியளவில் முடி விற்கு கொண்டுவரப்பட்டது.

தங்களுடைய போராட்டத்திற்கு உரியதீர்வு கிடைக்காவிடில் விபரீத மான முடிவுகளை எடுக்க வேண்டிய நிலையை ஏற்படும் என்று எச்சரித் ததையடுத்து யாழ்.போதனா வைத் தியசாலை வளாகத்தில் பொலிஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்த நிலையில் நேற்றும் போராட்டம் இடம்பெற்றது.

வடமாகாண ஆளுநருடன் கடந்த 21 ஆம்திகதி இடம்பெற்ற சந்திப்பில் தொண்டர்களில் 80 பேருக்கு முதற்கட்டமாக நிரந்தர நியமனம் வழங்குவதாகவும் ஏனை யவர்களுக்கு அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் ஒப்பந்த அடிப்படை யில் பணியில் இணைத்துக் கொள் ளப்படுவதாகவும் உறுதிமொழி யளிக்கப்பட்டது. எனினும் இதனை தொண்டர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை.

19-ம் பக்கம் பார்க்க

## கொழும்பு பேராயர் மீது தேசப்பற்று இயக்கம் சாடல்



(கொழும்பு)

கொழும்பு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் உட்பட பிரிவினை வாத சக்திகள் நாட்டில் இருக்கும் வரை நாடு முன்னோக்கிச் செல்ல சந்தர்ப்பம் கிடைக்காது என தேசப்பற் றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர தெரி வித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறினார். அவர் மேலும் தெரி விக்கையில்,

தமிழ் இனவாதத்திற்கு இலங்கை கத்தோலிக்க

19-ம் பக்கம் பார்க்க

## பொலிஸார் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

நிரந்தர நியமனம் வழங்கக் கோரி பணிப்புறக்கணிப்புப் போராட் டத்தில் ஈடுபட்டு வந்த யாழ்.பிராந் திய சுகாதாரப் பணிமனையின் கீழ் பணிபுரியும்குடும்ப நல உத்தியோகத் தர்களை மூன்று நிமிடங்களில் அங் கிருந்து கலைந்து செல்லுமாறும் இல்லையென்றால் கைது செய்யப் படுவீர்கள் என்றும் பொலிஸார் உத்தரவிட்டனர்.

கடந்த 19-ம் திகதியிலிருந்து நேற்று 5-வது நாளாகவும் யாழ்.பிராந் திய சுகாதார பணிமனையின் கீழ் பணிபுரியும் குடும்ப நல உத்தி யோகத்தர்கள் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை யின் முன்னால் பணிப் புறக்கணிப்புப் போராட்

19-ம் பக்கம் பார்க்க

## கூட்டமைப்பு எம்.பிக்கள் சிலரை ஓரங்கட்ட ஜனாதிபதி ஆலோசனை

### கொழும்புத் தகவல் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து கொண்டு பிரிவினை வாதக கொள்கைகளுடன் செயல்படும் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிறீதரன், அரியநேத்திரன் ஆகி யோரை கட்சியிலிருந்து புறந்தள்ளி வைக்குமாறு மகிந்த ராஜபக்ஷ ஆலோசனை வழங்கியுள்ளதாக கூட்டமைப்பின் உயர்மட்டத் தரப்பு தகவல் ஒன்றின் மூலம் தெரியவரு கிறது.

நாடாளுமன்ற உறுப்பினர் களுக்காக சபாநாயகர் ஒழுங்கு செய்திருந்த விருந்துபசாரத்தில் கலந்து கொண்டபோது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, தமிழ்க் கூட்ட மைப்புத் தலைவரிடம் இந்தக் கோரிக்கையை முன்வைத்ததாகக் கூறப்படுகிறது.

கிளிநொச்சி, இரணைமடுக்குளத் தின் நீரை யாழ்ப்பாணத்திற்குக் கொண்டு செல்லும் திட்டம் தொடர் பாக, சிறிதரன் எம்.பி. உள்ளிட்ட தரப் பினர் கடுமையான நிலைப்பாட்டில் உள்ளதாகவும், இது அவ்வளவு நல்லதல்ல என்றும் மகிந்த ராஜபக்ஷ சம்பந்தனிடம் தெரிவித்துள்ளார்.

இரணைமடு குளம் விவகாரதில சிறிதரன் எம்.பி. உள்ளிட்ட தரப்பினர், உண்ணாவிரதப்போராட்டமொன்றை நடத்தவிருந்த

19-ம் பக்கம் பார்க்க

## தனியார் பேருந்துகள் வெள்ளியன்று பகிஷ்கரிப்பு

(கொழும்பு)

வட இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தினர் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து, எதிர்வரும் 27 ஆம் திகதி வெள்ளிக் கிழமை முழுமையான சேவை புறக்கணிப்பில் ஈடுபடப் போவதாக, சங் கத்தின் தலைவர் எஸ்.கெங்காதரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களுக்கிடையிலான சேவையில் ஈடுபடும் பேருந்துக்களே மேற்படி முழுநேர சேவை புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த 5 ஆம் திகதி வியாழக்கிழமை முல்லைத்தீவு மாவட்டத்தில் 5 மாவட்டங் களுக்கிடையில் நடைபெற்ற கலந்துரையாடலில் எம்மால் வழங்கப்பட்ட கோரிக்கையினை இதுவரை காலமும்

19-ம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேசத்தை ஏமாற்றவே ஜனாதிபதி பேச்சுக்கு அழைப்பு

## லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு விடுத்துள்ள அழைப்பு காலத்தைக் கடத்தும் நடவடிக்கை எனவும், இது சர்வதேச நெருக்கடிகளில் இருந்து தப்புவதற்கான முயற்சி என்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

உள்நாட்டுப் பிரச்சினைகளுக்கு பிறநாடுகளில் தீர்வைத் தேடுவதற்குப் பதிலாக, தேசிய நல்லிணக்கத்துக்கும் அபிவிருத்திக்கும் உள்நாட்டுக்குள்ளேயே தீர்வைக் காண்பதற்கு அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்றில் அழைப்பு விடுத்திருந்தார்.

இந்நிலையில், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இந்த அழைப்புத் தொடர்பில் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

அரசாங்கம் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை இது வரை நடைமுறைப்படுத்தவில்லை. 13-வது திருத்தச் சட்டம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும் என அரசாங்கம் தெரிவித்திருந்தது.

ஆனால், இதுவரை ஐ.நா செயலாளர் நாயகம் பான் கீ மூன் மற்றும் இந்தியா, தமிழ் மக்கள், சர்வதேச நாடுகளுக்கு வழங்கிய உறுதிமொழிகள் எதனையும் அரசாங்கம் நிறைவேற்றவில்லை.

மாறாக ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத் தொடர் நெருங்கி வரும் நிலையில், பேச்சுவார்த்தைக்கு வாருங்கள் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார்.

இது காலத்தை கடத்தும் அரசாங்கத்தின் வழமையான நடவடிக்கை. இங்கு பேசுவதற்கு எதுவுமே இல்லை. அரசாங்கம் வழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்றி நம்பிக்கையை பெற்றுக்கொள்ள வேண்டும்.

1994இல் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தில் நான் இருந்த போது ஜே.வி.பி கிளர்ச்சியால் கணவன்மாரை இழந்த விதவைகளுக்கு நஷ்டஈடு வழங்கினேன். அதேபோன்று யுத்தத்தால் விதவைகளான 80ஆயிரம் பெண்கள் வடக்கில் உள்ளனர். அவர்களுக்கு அரசாங்கம் நஷ்டஈடு வழங்கி நம்பகத் தன்மையை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அதைவிடுத்து சர்வதேச சமூகத்தை ஏமாற்றுவதற்கு நாடகங்களை அரங்கேற்றக் கூடாது.

அரசாங்கம் அரசியலமைப்பை மீறிச் செயல்படுகிறது. வட மாகாணத்தில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரை நியமிக்கும் போது, அரசாங்கமும், ஆளுநரும் மாகாண முதலமைச்சருடன் பேச்சுவார்த்தை நடத்தி இணக்கப்பாடு காண வேண்டியது அவசியமென அரசியலமைப்பில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

ஆனால் அரசாங்கம் அரசியலமைப்பை மீறி தன்னிச்சையாக வடமாகாணத்திற்கான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரை நியமித்துள்ளது என்றும் லக்ஸ்மன் கிரியெல்ல மேலும் தெரிவித்தார். (எ-11)

## காணிப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வு

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிலவும் காணி பிரச்சினைகளுக்கு, அடுத்த ஒரு வருடத்திற்குள் தீர்வு வழங்கப்படும் என காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

2014 ஆம் ஆண்டுக்குள் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிலவும் காணி பிரச்சினைகளுக்கு உரிய தீர்வு வழங்கப்படும் என அமைச்சின் செயலாளர் அசோக பீரிஸ் தெரிவித்தார்.

வடக்கு, மாகாணங்களின் காணி பிரச்சினைகள் தொடர்பில் இதுவரை ஒரு லட்சத்து 32 ஆயிரம் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இவற்றில் 22 ஆயிரம் முறைப்பாடுகளுக்கு தீர்வு வழங்கப்பட்டுள்ளது எனவும் அசோக பீரிஸ் கூறியுள்ளார். (எ-11)

## புதிய தலைவர்கள் நியமனம்

(கொழும்பு)

2014-ம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தை தோற்கடித்த மூன்று உள்ளூராட்சி சபைகளுக்கான புதிய தலைவர்கள் பெயரிடப்பட்டுள்ளனர்.

இதன்படி புதிய தலைவர்களது பெயர்கள் தேர்தல்கள் திணைக்களத்துக்கு நேற்று வழங்கப்பட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்தார்.

வரவு - செலவுத்திட்டம் தோற்கடிக்கப்பட்ட அனைத்து உள்ளூராட்சி சபைகளுக்கும் புதிய தலைவர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

இதேவேளை வரவு - செலவுத் திட்டத்திற்கு எதிராக வாக்களித்த ஆளும் கட்சி உறுப்பினர்கள் தமது செயற்பாடு குறித்து விளக்கமளிக்கு மாறு கடிதம் மூலம் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. (எ-2)

# எரிக்கப்பட்டபின்பே பச்சிளம் குழந்தை புதைப்பு

**மருத்துவப் பரிசோதனையில் கண்டுபிடிப்பு**

(யாழ்ப்பாணம்)

எரித்து கொலை செய்யப்பட்ட பின்பே பச்சிளம் குழந்தை நிலத்தினுள் குழிதோண்டி புதைக்கப்பட்டுள்ளது என கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

நிலத்தினுள் புதைக்கப்பட்ட நிலையில் நேற்றுக்காலை மீட்கப்பட்ட பெண்குழந்தை யாழ். போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கோப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட செல்வபுரம் தெற்கு உரும்பிராய் பகுதியில் கைவிடப்பட்ட பற்றைக்காணியில் பச்சிளம் குழந்தையொன்று நேற்று முன்தினம் புதைக்கப்பட்ட சம்பவம் அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

இதேவேளை குழந்தை புதைக்கப்பட்ட பகுதியில் பொலிஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

குறித்த காணியில் நேற்று முன்தினம் மாலை பெண்ணொருவரினால் குழியொன்று தோண்டப்பட்டு அங்கு ஏதோவொன்று புதைக்கப்பட்டதை அவதானித்த இளைஞர் குழுவொன்று அங்கிருந்து அந்தப் பெண் அகன்றதையடுத்து அந்தக் குழியை தோண்டிப் பார்த்துள்ளனர்.

இந்நிலையில் குறித்த குழியில் குழந்தையொன்றின் கை வெளிப்பட்டதையடுத்து அதிர்ச்சியடைந்த அந்த இளைஞர் குழுவினர் இது தொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர்.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் அங்கு சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டதோடு நீதிபதிக்கும் இது தொடர்பில் அறிவித்தனர்.

குறித்த குழந்தையின் சடலம் உரைப்பையினுள் சுற்றியபடி நேற்று காலை நீதிபதி முன்னிலையில் கோப்பாய் பொலிஸாரினால் மீட்கப்பட்டது. (எ-6)


## வீடு விற்பனைக்கு

மானிப்பாய் வேலக்கை பிள்ளையார் கோவில் அருகில் 15 3/4 பரப்புக் காணியுடன் 100 தென்னை மரங்கள், 3 வாகனம் விடும் செற்றுடன் வீடு விற்பனைக்குண்டு.

**தொடர்புகளுக்கு:**

**0773253610**

(5117)

## தொடர்ந்தும் உங்கள் சேவையில்....

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்

கடிதங்கள் • அன்பளிப்பு பொருட்கள் • உடுபுடவைகள்

• CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-0212225392

WESTERN UNION MONEY TRANSFER

(C-5972)

## இலங்கை நூலகச் சங்கம்

### நூலக தகவல் விஞ்ஞான டிப்ளோமா கற்கைநெறி தரம் 1-2014

நூலக தகவல் விஞ்ஞான டிப்ளோமா கற்கைநெறி தரம் 1ற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இக்கற்கை நெறியானது, நூலக தகவல் விஞ்ஞானத்துறை சார்ந்த பல்வேறு தொழில்களுக்கான புகுமுக தகைமையாக விளங்குகின்றது. மேற்படி கற்கைநெறியானது யாழ்ப்பாணம் உட்பட நாடளாவிய ரீதியில் 6 நிலையங்களில் நடத்தப்படுகிறது.

**புகுமுகத் தகைமைகள் :**

- ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பெற்ற பட்டம் **அல்லது**
- க.பொ.த (உ/த) பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தி **அத்துடன்**
- க.பொ.த (சா/த) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத தடவைகளில் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருப்பதுடன், அவற்றுள் மொழியில் திறமைச் சித்தியும் கணிதம் / தூயகணிதம் மற்றும் ஆங்கிலத்தில் சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும்.

**மொழி மூலம் : தமிழ் (யாழ்ப்பாண நிலையத்தில்)**

**கற்கைநெறிக் கட்டணம் : ரூபா. 12,500.00**

விரிவுரைகளுடன் கூடிய வகுப்புக்கள் வார இறுதி நாட்களில் நடைபெறும்.

கற்கைநெறி தொடர்பான விபரங்களையும் விண்ணப்பப் படிவத்தையும் பெற்றுக்கொள்வதற்கு தயவு செய்து ரூபா. 15.00 பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்டு சுயமுகவரியிடப்பட்ட கடித உறையை (9"X4") இலங்கை நூலக சங்கத்தின் பெரில் பெறப்பட்ட ரூபா 200.00 பெறுமதியான ரொறிங்டன் (Torrington) உபதபால் அலுவலகத்தில் மாற்றக்கூடியதுமான காசுக்கட்டளையுடன் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

Education Officer,
Sri Lanka Library Association,
275/75, The Professional Centre,
Stanley Wijesundera Mawatha,
Colombo -07

விண்ணப்பப் படிவங்களையும் கற்கைநெறி தொடர்பான விபரங்களையும் www.slla.org.lk இணையத்தளத்திலும் பார்வையிடலாம். இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை அனுப்பும்போது, அத்துடன் மேற்குறிப்பிட்ட காசுக்கட்டளையும் இணைக்கப்படல் வேண்டும்.

Tel / Fax : 011-2589103 e.mail : slla@sltnet.lk or slliba@yahoo.com

**விண்ணப்பப் படிவங்களை அனுப்புவதற்கான முடிவுத் திகதி 10.01.2014 ஆகும்.** (5143)

## சுகவாழ்வுக்கான பயணம்

## பதவி வெற்றிடம்

எமது நிறுவனத்தின் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு ஆர்வம் உள்ளவர்களிடம் இருந்து விண்ணப்பங்களை எதிர்பார்க்கிறோம்.

**திட்ட அலுவலர் - 02**

**திட்ட முகாமைத்துவ அலுவலர் - 04**

சுயமாகத் தயாரித்த விண்ணப்பத்துடன் சுயவிபரக் கோவை மற்றும் நற்சான்றிதழ் ஆகியவற்றுடன் **எதிர்வரும் 29-12-2013 ஞாயிறு காலை 10 மணிக்கு** நேரடியாக சமுகமளிக்கவும்.

**கல்வித்தகைமை : G.C.E. A/L**

**வயதெல்லை : 30 வயது வரை**

**தொலைபேசி இல : 021 373 4618**

**3ஆம், ஒழுங்கை, (அன்னசத்திரலேன்)**
**பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**

(C-5977)


## வலிகாமம் தெற்கு பிரதேசசபை சுன்னாகம்
## 2014-ம் ஆண்டுக்கான பகிரங்க ஏல அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட சுன்னாகம் மத்திய சந்தை, கருவாட்டுக் கடைகள் என்பவற்றை 01.01.2014 தொடக்கம் 31.12.2014-ம் திகதிவரை குத்தகைக்கு வழங்குதலை பகிரங்க ஏலததில் விடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஏலத்தில், பங்குபற்ற விரும்புபவர்கள் தலைமை அலுவலகத்தில் கேள்வி வைப்புப் பணத்தைச் செலுத்தி பற்றுச்சீட்டை 24.12.2013 தொடக்கம் 27.12.2013 காலை 9.30 மணி வரை பெற்றுக் கொள்ளவும்.

| தொ இல | விபரம் | கேள்வி வைப்பு | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (வற் வரி தவிர) | மாத வாடகை (வற் வரி தவிர) |
|---|---|---|---|---|
| | சுன்னாகம் உப அலுவலகம் | | | |
| 1 | சுன்னாகம் மத்திய சந்தை (சுன்னாகம் மரக்கறிச் சந்தை. மீன் சந்தை. மீன் வெட்டுமிடம். வாகன தரிப்பிடம் உட்பட) | 30000.00 | 7500000.00 | |
| 2 | சுன்னாகம் ஆட்டிறைச்சிக் கடை 05 | 10000.00 | 245000.00 | 250.00 |
| 3 | கருவாட்டுக் கடை இல 03 | 7500.00 | 39700.00 | 250.00 |
| 4 | சுன்னாகம் மாட்டிறைச்சிக் கடை இல 02 | 10000.00 | 1110000.00 | 250.00 |
| 5 | கோழிக்கடை இல 06 | 7500.00 | 176800.00 | 250.00 |
| | உடுவில் உப அலுவலகம் | | | |
| 6 | இணுவில் சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 5000.00 | 74500.00 | 250.00 |
| 7 | மருதனார்மடம் சந்தை பொது மலசலகூடம் | 7500.00 | 50000.00 | |

காலம் : 27.12.2013 காலை 10.00
இடம் : சுன்னாகம் உபஅலுவலகம்.

ஏலம் சம்பந்தமான மேலதிகமான விபரங்களை 2013.10.23-ம் திகதிய உதயன், தினக்குரல், வலம்புரி பத்திரிகைகளிலும், எமது அலுவலகத்தில் அலுவலக நேரத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

தி.பிரகாஷ்,
தவிசாளர், வலி தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்.

(C-5978)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## ஓர் அரசியல் பாடம்

சந்திரகுப்த மௌரியர் என்பவர் சரித்திர பாட புத்தகம் படிக்கும் போது கேள்விப்பட்ட ஒருவர்.

சாணக்கியரின் அறிமுகம் அவருக்குக் கிடைப்பதற்கு முன்னர் நடந்த ஒரு நிகழ்ச்சி இது. பாடலிபுத்திரம் ஒரு தலை நகரம். அங்கே நந்தர்கள் ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது.

அவர்களுடையஒன்றுவிட்டசகோதரர்சந்திரகுப்தமௌரியர்.

ஆனால் இவருக்கு காடுகளிலே ஒளிந்து வாழ வேண்டிய நிலைமை. ஆட்சியிலே தனக்குள்ள உரிமையை நிலை நாட்ட வேண்டும் என அவர் ஆசைப்பட்டார். அதனாலே காடுகளிலே இருந்த படியே சிறியதாக ஒரு படையைத் திரட்டினார்.

அப்போது அவர் பாடலிபுரத்தை நோக்கிப் படையெடுத்துக் கொண்டு போனார். ஆனால் என்ன நடந்தது தெரியுமா? அது தலைநகரம். அதனாலே அதிகளவான வீரர்கள் பாதுகாப்புக்காக அங்கே அணிவகுத்து தயாராக நின்று கொண்டிருந்தார்கள். நந்தர்களின் படை சந்திரகுப்தரின் படையை சுலபமாக விரட்டி அடித்தது.

அப்போது சந்திரகுப்தரையும் சிறை பிடித்தார்கள். இருப்பினும் சகோதரன் என்பதால் மன்னித்து உயிர்ப்பிச்சை கொடுத்துத் துரத்தி விட்டார்கள். அப்படியிருந்தும் சந்திரகுப்தர் ஓய்ந்து போகவில்லை. திரும்பத் திரும்ப சின்னச் சின்ன படைகளைத் திரட்டிக் கொண்டு போனார். ஒவ்வொரு முறையும் தோல்விதான்! ஆனாலும் இவரால் அமைதி யாக இருக்க முடியவில்லை. இந்தத் தடவை மாறு வேடத்திலே அங்கேயும் இங்கேயுமாக திரிந்து படை திரட்ட ஆரம்பித்தார்.

அந்தச் சமயத்திலே ஒரு நாள்... மிகவும் சோர்ந்து ஒரு வீட்டுத் திண்ணையிலே போய் உட்கார்ந்தார். மிகவும் பசியோடு இருந்தார். அவரது முகம் வாடிக் காணப்பட்டது.

அந்த வீட்டுக்குள்ளே இருந்த பாட்டியம்மா வெளியே வந்தபோது இவரைக் கண்டார்.

இவர்தான் சந்திரகுப்தர்என்பது அவர்களுக்குத் தெரியாது. யாரோ வழிப்போக்கர் பசியோடு இருக்கிறார் என்பதைப் புரிந்து கொண்டு உள்ளே அழைத்து உட்கார வைத்து சாப்பாடு கொடுத்தார்.

அருகிலே அந்தப் பாட்டியின் பேரனும் சாப்பிட உட்கார்ந்தான்.

அவர் சுடச்சுட சாப்பாடு பரிமாறினார்.

பசியோடு இருந்த அந்தப் பையன் அவசரமாக சாதத்தின் நடுவுலே கையை வைத்தான். சுட்டு விட்டது. சூட்டை தாங்க முடியாமல் ''ஐயோ! அம்மா!'' என்று சத்தம் போட்டுக் கொண்டு... கையை உதறினான்.

இப்போது அந்தப் பாட்டி, பேரனைப் பார்த்து சொன்னார்; ''என்னப்பா இது... சந்திரகுப்தனைப் போல முட்டாளாக இருக்கிறியே!'' என்றார்.

இதைக் கேட்டதும் மாறு வேடத்திலே இருந்த சந்திரகுப்தனுக்குத் 'திடுக்' குன்னு தூக்கிப் போட்டது.

''ஒரு வேளை நாம் யார் என்பது இந்தப் பாட்டிக்கு புரிந்து விட்டதோ'' என்று யோசித்தார். ஆனாலும் அப்படி இல்லையென்பது தெரிந்து விட்டது. அதன்பின் அந்தப் பாட்டியைப் பார்த்துக் கேட்டார்.

''ஏன் பாட்டி... இந்தப் பையனை அப்படித் திட்டினீர்கள்... சந்திரகுப்தன் என்ன அவ்வளவு முட்டாளா?'' என்று கேட்டார். இப்போது அந்தப் பாட்டி சொன்னார்;

''ஆமாம்ப்பா! இப்போது என் பேரன் சுடு சாதத்தின் மையப் பகுதியிலே கையை வைத்து விட்டு அலறான்! சுடு சாதத்தின் ஓரமான பகுதிகளை முதலில் சாப்பிட்டால் அங்கே சூடு குறைவாக இருக்கும். பிறகு மையப் பகுதிக்கு வரும்போது அங்கே சூடு ஆறிவிடும்.

இது அவனுக்குத் தெரியவில்லை.

சந்திரகுப்தனும் அதேமாதிரி தான்...

நந்தர்கள் முழுப்பலத்தோடு இருக்கின்ற தலை நகரத்தைத் தாக்க வேண்டும் என நினைக்கிறான். கையைச் சுட்டுள்ளான். அதுதான் தொடர்ந்து தோல்வியே சந்திக்கிறான்.

படைஎண்ணிக்கை குறைவாக உள்ள எல்லைப் பகுதிகளை அவர் தாக்கியிருந்தால் இந்நேரம் அவன் கொஞ்சம் கொஞ்சமா முன்னேறியிருக்கலாம்.

பலமும் அதிகரித்திருக்கும்.

கடைசியா தலை நகரத்தையும் கைப்பற்றியிருக்கலாம்'' அப்படியென்றார் அந்தப் பாட்டியம்மா.

சந்திரகுப்தன்கற்றமுதல்அரசியல்பாடம்இது. அதனாலே உடல் பலம் மட்டும் போதாது... அறிவுப்பலமும் வேணும் அதுதான் இந்தத் தகவலிலேயிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டிய பாடம்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

---

### வரவு செலவு திட்ட அங்கீகாரத்தை

# வர்த்தமானியில் வெளியிடுவதற்கு பேரவை செயலகம் நடவடிக்கை

வடமாகாண சபையின் வரவு செலவுத்திட்டத்திற்கு ஆளுநரின் அங்கீகாரம் பற்றி வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுவதற்கான நடவடிக்கைகளை பேரவை செயலகம் மேற் கொண்டு வருகின்றது.

டிசெம்பர் மாதம் 2ஆம் திகதி அமைச்சரவை வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்ட வடக்கு மாகாண சபையின் 2014 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டமும்.நிதி நியதி சட்டமும் பிரதம செயலாளர் ஆளுநரின சிபார்சுக்காக சமர்பிக்கப்பட்டது.

ஆளுநரின் சிபார்சுகளுடான இந்த ஆவணங்கள் பிரதம செயலாளரால் வடக்கு மாகாண அவை தலைவருக்கு சபையின் அங்கீகாரம் பெற அனுப்பி வைக்கப்பட்டது.

இவற்றின் மீது மேற்கொள்ள வேண்டிய தேவையான நடவடிக்கைகள் எடுத்த பின்பு டிசெம்பர் மாதம் 10ஆம் திகதி நடைபெற்ற வடக்கு மாகாணசபையின் மூன்றாவது அமர்வில் வடக்கு மாகாண முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரனால் முன் மொழியப்பட்டது.

அவ்வாறு முன் மொழியப்பட்ட வரவு செலவு திட்டமும்.நிதிநியதி சட்டமும் 10.11.12 ஆம் திகதிகளில் குழு நிலை விவாதம் இடம்பெற்று டிசெமபர் மாதம் 12 ஆம் திகதி மாலை முழு வரவு செலவு திட்டமும் 2013 ஆண்டின் ஓராம் இலக்க நிதி தியதி சட்டமும் சபை அங்கீகாரம் வழங்க வேண்டும் என்ற முதலமைச்சரின் முன்மொழிவை எதிர்க்கட்சி உறுப்பினர் வழிமொழிய நிதி நியதி சட்டமும்.வரவு செலவு திட்டமும் எவ்வித திருத்தமும் எவ்வித எதிர்ப்பும் இன்றி சபையால் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து உரிய ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு 18.12.2013 ஆம் திகதி இது சம்பந்தமான தகவல் கடிதம் பிரதம செயலாருக்கு அனுப்பிவைககப்பட்டது.

இதனைத் தொடர்ந்து 19.12.2013 ஆம் திகதி 2014 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டமும், 2013 ஆம் ஆண்டுக்கான நிதி நியதி சட்டமும் அவை தலைவரினதும் செயலாளரினதும் உறுதி சான்றிதழ்களுடன் ஆளுநரின் அங்கீகாரத்தை பெறும் பொருட்டு பேரவை செயலகத்தினால் பிரதம செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இவற்றுக்கான ஒப்புதல் அங்கீகாரம் ஆளுநரால் 21.12.2013 ஆம் திகதி வழங்கப்பட்டிருந்தது.

இவ் ஆவணங்கள் 22.12.2013 ஆம் திகதி காலை பிரதம செயலாளர் செயலகத்தின் உயர் அதிகாரி ஒருவரினால் பேரவை செயலகத்தில் வைத்து பேரவை தலைவரிடம் கையளிக்கப்பட்டது.

அபபொழுது பேரவை செயலாளரும் உடன் இருந்தார். இதன் மீதான அடுத்த நடவடிக்கையாக ஆளுநரின் அங்கீகாரம் பற்றிய வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுவதற்கான நடவடிக்கைகளை பேரவை செயலகம் மேற்கொண்டு வருகின்றது. (அ-4)

# விசேட தேவையுள்ளோர் ஒன்றுகூடல் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

பெதஸ்தா விஷன் விசேட தேவையுள்ளோர் ஸ்தாபனம் கடந்த மூன்று வருடங்களுக்கு மேலாக யாழ்.மாவட்டத்தில் விசேட தேவையுள்ளோர் மத்தியில் பணியாற்றி வருகின்றது.

விசேட தேவையுள்ளோருக்கு வருட இறுதியில் ஒன்றுகூடலை நடத்தி கௌரவித்து சிறு பரிசில்களையும் வழங்கி வருகின்றது.

இவ்வொன்று கூடல் நிகழ்வு எதிர்வரும் 26 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணி முதல் பி.ப. 2 மணிவரை கொக்குவில் ஆடியபாதம் வீதி, கருவேலடி ஒழுங்கையிலுள்ள அதன் பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது. (அ)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 60 | 40 | 60 |
| உருளைக்கிழங்கு | 90 | 100 | 100 | 90 |
| பச்சைமிளகாய் | 90 | 90 | 40 | 100 |
| தக்காளி | 60 | 60 | 60 | 100 |
| மரவள்ளிக் கிழங்கு | 40 | 30 | 30 | 40 |
| கோவா | 20 | 20 | 35 | 40 |
| கரட் | 40 | 40 | 40 | 60 |
| பூசணி | 25 | 30 | 30 | 40 |
| புடோல் | 40 | 40 | 35 | 50 |
| வாழைக்காய் | 30 | 30 | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 80 - 190 | 160 | 200 | 120 - 200 |
| பெரிய வெங்காயம் | 60 - 100 | 180 | 140 | 100 |
| பாகற்காய் | 140 | 160 | 100 | 140 |
| வெண்டிக்காய் | 60 | 40 | 40 | 60 |
| கருணைக் கிழங்கு | 30 | 30 | 30 | 50 |
| பயற்றங்காய் | 50 | 100 | 100 | 60 |
| லீக்ஸ் | 70 | 60 | 100 | 100 |
| பீற்றூட் | 60 | 60 | 60 | 80 |
| கறிமிளகாய் | 100 | 100 | 130 | 60 |
| முருங்கைக்காய் | - | - | - | 280 |
| போஞ்சி | 80 | 80 | 100 | 80 |
| கத்தரி தம்புள்ள | 30 | - | - | - |
| கீரை - 1 பிடி | 30 | 30 | 20 | 35 |
| தேசிக்காய் | 50-70 | 60 | 75 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 30 - 50 | 40 - 50 | 40 | 30 - 40 |
| இராசவள்ளி | 100 | 120 | 200 | 150 |

# இராசி பலன்

24.12.2013

(மார்கழி 09, செவ்வாய்க்கிழமை)

சூரிய உதயம் காலை 6.18 மணிக்கு

சப்தமி பின்னிரவு 2.55 மணிவரை

பூரம் பிற்பகல் 2.53 மணிவரை

இராகுகாலம் 3.26-4.56 மணிவரை

சுப்நேரம் 10.56-12.26 மணிவரை

**மேடம்** அஜீரண ரோக பயமுண்டு, தாழ்ந்த சுபாவங்கள் ஏற்படலாம், எடுத்த காரியங்களில் சில தாமதங்கள் ஏற்படலாம், வியாபார விருத்தியுண்டு.

**இடபம்** மனச்சஞ்சலங்கள் கூடும், ரோகங்கள் ஏற்படும் வாய்ப்புண்டு, சுப செலவுகள் அதிகரிக்கலாம், கல்வியில் ஆர்வம் காட்டுவீர்கள், புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும்.

**மிதுனம்** மனோதைரியம் கூடும், மாதர் நட்புண்டு, கௌரவமான நாள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், அந்நியர் சந்திப்புண்டு.

**கடகம்** எடுத்த காரியங்களை முடிக்க அதிக பிரயாசை எடுக்கும் சூழ்நிலை உருவாகும், தேவையற்ற விவாதங்கள் ஏற்படலாம், செலவுகள் அதிகமாகும்.

**சிங்கம்** கற்பனை மிகுதியான நாள், சயன சுகமான நாள், புதிய முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள், வருமானங்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**கன்னி** சேமிப்பை விலக்குவது நல்லது, சிந்தனைகள் அதிகமாகும், பிறரது பொறுப்புகளையும் ஏற்கும் சூழ்நிலை உருவாகும், பயணங்களால் பலனுண்டு.

**துலாம்** நண்பர்கள் வருகையுண்டு, மனமகிழ்ச்சிக்குரிய சம்பவங்கள் இடம் பெறலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு, வருமானம் திருப்தி தரும், கௌரவமான நாள்.

**விருச்சிகம்** எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், தூரதேசச் செய்திகள் வந்து சேரும் நாள், தொழிலில் ஆர்வத்துடன் செயற்படுவீர்கள், போசன சுகமுண்டு.

**தனுசு** எதிர்பாராத செலவுகள் இடம் பெறலாம், தொழில் வளர்ச்சி கருதி முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், பிதா சிந்தையுண்டு, எதிலும் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**மகரம்** ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய நாள், குடும்பத்தில் கோபமாகப் பேசி பின்னர் மனம் வருந்த நேரிடலாம், செலவுகள் அதிகமாகும்.

**கும்பம்** குடும்பத்தில் அந்நியோன்னியம் அதிகரிக்கும், காரிய அனுகூலமுண்டு, அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், செய்தொழில் மேன்மையுண்டு.

**மீனம்** சுவாரஸ்யமான நாள், குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும், உடல்நலம் சீராகி உற்சாகமடைவீர்கள், முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள்.

வளவன்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வடமராட்சி கிழக்கில் மக்களுக்கு மின்சாரம் வழங்குவதில் பாரபட்சம்

(பொற்பதி)

வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணி, முள்ளியான் ஆகிய கிராமங்களிற்கு வடக்கின் வசந்தம் திட்டத்தினூடாக நேற்றைய தினம் வழங்கப்பட்ட மின் விநியோகத்தில் பாரபட்சம் காட்டப்பட்டுள்ளதாக கிராம மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

மேற்படி கிராமங்களிற்கு மின்சாரம் விநியோகிப்பதற்கான ஆரம்பகட்ட வேலைகள், வடமாகாண சபைத் தேர்தலுடன் ஆரம்பமாகி தற்போது முடிவடைந்துள்ளன.

இந்நிலையில், நேற்றைய தினம் மின் விநியோக நிகழ்வு யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் தலைமையில் இடம் பெற்றது.


இக்கிராம மக்கள் குடியேறிய காலப்பகுதியிலிருந்து மின்சாரமின்றியே வாழ்ந்து வந்தனர்.

ஆயினும், தற்போது வெற்றிலைக்கேணியிலுள்ள 10பேருக்கும் முள்ளியானைச் சேர்ந்த 10 பேருக்குமே மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே, சுமார் நூறு பேருக்கு மேற்பட்டவர்கள் மின்சாரம் பெறுவதற்கான முன்னாயத்தங்களை செய்துள்ள போதிலும் அவருக்கு மின்சாரம் கிடைக்கவில்லை.

அத்தோடு, மின்சாரம் வழங்கப்பட்டுள்ள 20 பேருக்கான மின்னிணைப்பு வேலைகளை கடந்த சில நாட்கள் மின்சார சபையினர் மேற்கொண்டதாக தெரிவிக்கும் அப்பகுதி மக்கள், தம்மை ஏன் பாரட்சம்காட்டி அதிகாரிகள் செயற்படுகின்றனர் எனக் கேள்வி எழுப்பியுள்ளனர்.

எனவே, இக்கிராமங்களிலுள்ள அனைத்து மக்களும் மின்சாரத்தைப் பெற்றுக் கொள்ள உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென கிராமத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-9-64)




# வரவு செலவுத்திட்டம் நிறைவேறியது

ஊர்காவற்றுறை பிரதேச சபையின் 2014ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

பிரதேசசபைத்தவிசாளர் ம.ஜெயகாந்தனால் கடந்த 13 ஆம் திகதி நடைபெற்ற விசேட கூட்டத்தில் வரவு செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்ட போது ஆளும் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அனைவரும் வரவு செலவுத் திட்டத்தை ஏற்று அங்கீகரித்தனர். (அ)

# இளைஞர்களின் எதிர்காலத்தை வலியுறுத்தி நேற்று கவனயீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

**வன்முறைகளூடாக இளைஞர்களின் எதிர்காலத்தை நசுக்காதே என்று** கோசமிட்டபடி யாழ்.மாவட்ட இளைஞர் கழக சம்மேளனத்தின் ஏற்பாட்டில் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ்.மாவட்டக் காரியாலயத்துக்கு முன்பாக இளைஞர் யுவதிகள் கவனயீர்ப்பு போராட்டமொன்றை நேற்று முற்பகல் முன் னெடுத்துள்ளனர்.

இளைஞர்கள் மீதான படுகொலைகள், பாலியல் வன்முறைகள், போதைப்பொருள் பாவனை, இலஞ்ச ஊழல் மற்றும் அண்மையில் திருடர்களின் தாக்குதலில் மரணமடைந்த யாழ். இந்துக் கல்லூரியில் க.பொ.த. உயர்தரத்தில் கல்வி கற்று வந்த மாணவன் யதுஷனின் கொலை தொடர்பாக நீதியான விசாரணை நடத்தக் கோரியுமே இந்தக் கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

**இதில் இளைஞர்களே எதிர்காலத் தூண்கள் அவர்களை அழிக்காதீர்கள், வன்முறைகளூடாக இளைஞர்களின் எதிர்காலத்தை நசுக்காதே, வருங்கால விருட்சங்களை கருக்காதே** போன்ற சுலோகங்களைத்தாங்கியவாறு கவனயீர்ப்புபோராட்டத்தில் ஈடுபட்டனர்.

மேற்படி விடயங்கள் சம்பந்தமாக பேரணியொன்று நடத்தப்படவிருந்தாலும் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற தலைமைக் காரியாலயம் மற்றும் பாதுகாப்புத் தரப்பினரின் அனுமதியின்மை காரணமாகவே கவனயீர்ப்பு போராட்டமாக நடத்தப்பட்டதாக போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.





தொடர்ச்சியாக இது சம்பந்தமான மகஜர்கள் இளைஞர் விவகார திறன்கள் அபிவிருத்தி அமைச்சரூடாக ஜனாதிபதிக்கும் வடமாகாண சபை முதலமைச்சர், வடமாகாண இளைஞர் விவகார அமைச்சர், இளைஞர்கள் தொடர்பான அதிகாரிகள் ஆகியோருக்குவழங்கப்படவுள்ளதாக தெரிவித்தனர்.

இப்போராட்டத்தில் மாவட்ட இளைஞர் கழக சம்மேளன நிர்வாகசபை உறுப்பினர்கள், பிரதேச இளைஞர் கழக சம்மேளனங்களின் பிரதிநிதிகள், தேசிய சம்மேளனப் பிரதிநிதிகள், இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (அ-6-23)

# ஒளிவிழா

யாழ்.கச்சேரி கிழக்கு ஒழுங்கை இல.35 இல் அமைந்துள்ள ஸ்ரீ கல்கி இல்லத்தில் நாளை புதன்கிழமை பிற்பகல் 3 மணியளவில் நத்தார் தினத்தை முன்னிட்டு விசேட பூஜை பஜனையும் ஒளி விழாவும் இ.சுவாமிநாதன்ஜியின் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் இல்ல சிறுவர்களின் இயல், இசை,நாடகம் போன்ற நிகழ்வுகளும் இடம் பெற்று நத்தார் பாப்பாவினால் பரிசில்களும் வழங்கப்பட்டவுள்ளன. (அ)




# சுகாதார சேவை தொண்டர்கள் 5 ஆவது நாளாகவும் போராட்டம்



(யாழ்ப்பாணம்)

நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி யாழ்.பிராந்திய சுகாதார சேவை தொண்டர்கள் நேற்றைய தினமும் ஐந்தாவது நாளாகவும் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

யாழ்.பிராந்தியத்திலுள்ள 21 சுகாதார சேவைகள் பிரிவில் தொண்டரடிப்படையில் பணியாற்றிய சுமார் 300பேர் வரையிலான தொண்டர்களே தமக்கு நிரந்தர நியமனத்தை வழங்கக்கோரி கடந்த 19 ஆம் திகதி தொடக்கம் வீதி மறியல் போராட்டத்தில் கடந்த ஐந்து நாட்களாக ஈடுபட்டு வருகின்றனர். அத்தோடு பெருமளவு பொலிஸாரும் குவிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் முன்பாக இடம்பெற்று வரும் இந்தப் போராட்டம் குறித்து தெரிவிக்கையில்,

நாம் கடந்த 1997 ஆம் ஆண்டு முதல் 6 ஆயிரம் ரூபா சம்பளத்தை மட்டுமே பெற்று சேவையடிப்படையில் பணியாற்றி வருகின்றோம்.

கடந்த ஜூலை மாதமும் சுகாதாரத்துறையோடு தொடர்பில்லாத 589 பேருக்கு எம்மை புறக்கணித்து விட்டு நியமனங்களை வழங்கியுள்ளனர்.

இது வரை காலமும் சுமார் 10-15 வருடங்கள் பணியாற்றி வந்துள்ளோம். ஆனால் எமது நலன்களினை, சேவைக்காலத்தை கருத்திற் கொள்ளாது புதியவர்களுக்கு நியமனம் வழங்குவது எவ்வகையில் நியாயம்?

இனியும் எமக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படுவது தாமதிக்கப்பட்டால் நாம் வயோதிபர்களாகி விடுவோம். எம்மால் பணியாற்றவும் முடியாது.

ஆகவே இவ் வருடத்துக்குள் எமக்குரிய தீர்வு வழங்கப்படாவிட்டால் நாம் தொடர் போராட்டத்தை முன்னெடுப்போம் என்றும் தெரிவித்துள்ளனர். (அ-6)

# சமுர்த்தி காரியாலயம் அமைக்கும் பணி ஆரம்பம்

(கரணவாய்)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட சமுர்த்தி தலைமைக் காரியாலயத்திற்கு நிரந்தரகட்டம் அமைக்கும்பணிகள் நேற்று முன்தினம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.



மேற்படி சமுர்த்தி காரியாலயத்திற்கு நிரந்தர கட்டடமின்மையால் பல சிரமங்களின் மத்தியிலே பணிகளைத் தொடர்ந்து வந்தனர்.

இந் நிலையில் கரவெட்டி பிரதேச செயலர் எஸ். சிவசிறியின் முயற்சியினால் ஒரு மாடிக் கட்டடத்தைக் கொண்ட சமுர்த்தி தலைமைக் காரியாலயம் அமைக்கப்படுவதற்கான ஆய த்த வேலைகள் நடை பெற்று வருகின்றன.

அத்தோடு குறித்த கட்டடத்திற்கான நிதிப் பங்களிப்பில் ஒரு தொகையை பிரதேச மக்களும் வழங்கியுள்ளனர்.

இதற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் நேற்று முன்தினம் நடைபெற்றுள்ளதோடு கட்டட வேலைகள் யாவும் அடுத்த வருடம் ஓகஸ்ட் மாதத்தினுள் முடிவடையவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ-9-60)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பிரேரணை நிறைவேற்றுவது மட்டும்தான் வடக்கு மாகாண சபையின் வேலையா?

## விரைவில் செயல்வடிவம் கொடுப்பது யார்?

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையில் நிறைவேற்றப்பட்ட பிரேரணை செயல்வடிவம் பெறுவதற்கு முன்னர் வலி.வடக்கிலுள்ள வீடுகள் அனைத்தும் இராணுவத்தினரால் அழித்து விடக்கூடும் என அப்பகுதி மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

இதனால் வடக்கு மாகாண சபை இவ்வீடழிப்பு விடயத்தில் விரைந்து நடவடிக்கையெடுக்க வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வலி.வடக்கிலுள்ள பொதுமக்களின் காணிகள் உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில், ஆறாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை இராணுவத்தினர் அபகரித்துள்ளனர்.

இவ்வாறு இராணுவ கட்டுப்பாட்டிலுள்ள காணியில் உள்ள பொது மக்களின் வீடுகளை இராணுவத்தினர் இடித்தழிக்கும் நடவடிக்கையை நீண்ட நாட்களாக மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்வீடழிப்பு தொடர்பில் பலரும் கண்டனங்களை வெளியிட்ட போதிலும் இராணுவத்தினர் மேற்கொண்டு வரும் வீடழிப்பு நிறுத்தப்படவில்லை.

எனினும் இவ்வீடழிப்பை நிறுத்தக் கோரி வலி.வடக்கு மக்களினால் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் முன்றிலில் தொடர் உண்ணா விரதப் போராட்டமொன்றும் நடத்தப்பட்டது.

இவ் உண்ணாவிரதப் போராட்டத்தையடுத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் ஜனாதிபதிக்கு விடுத்த கோரிக்கையினையடுத்து இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட வீடழிப்பு ஒரு சில தினங்களிற்கு நிறுத்தி வைக்கப்பட்டது.

எனினும் கொழும்பில் நடைபெற்ற பொதுநலவாய மாநாடு நிறைவுற்ற பின்னர் நிறுத்தப்பட்டிருந்த வீடழிப்பு மீண்டும் தொடர்ந்தது.

இதனையடுத்து வடக்கு மாகாண சபையின் இரண்டாவது அமர்வில் வலி.வடக்கில் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்படுகின்ற வீடழிப்பை நிறுத்தக்கோரி பிரேரணையொன்றும் நிறைவேற்றப்பட்டது.

இப் பிரேரணை நிறைவேற்றப்பட்ட பின்னரும் கூட இராணுவத்தினரால் வீடழிப்பு நடவடிக்கைகள் தற்போது வரை(நேற்று வரை) தொடர்கின்றன.

எனினும் வடக்கு மாகாண சபை, பிரேரணையை மட்டும் நிறைவேற்றி விட்டு வீடழிப்பு தொடர்பில் மௌனம் காத்து வருகின்றது.

வடக்கு மாகாண சபைக்கு எமது வீடழிப்பு தொடர்பில் மீண்டும் நினைவுக்கு வருவதற்கு முன்னர் எமது வாழ்விடங்கள் முழுவதனையும் இராணுவம் இடித்து தரைமட்டமாக்கி விடும் எனவும் அம் மக்கள் தெரிவிக்கின்றனர்.

ஆகவே வடக்கு மாகாண சபை பிரேரணை இயற்றுவதில் மட்டும் நின்று விடாது இப் பிரேரணைக்கு செயல் வடிவம் கொடுத்து எமது வாழ்விட அழிப்பினை நிறுத்த விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென அம் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-4)


SCIENCE HALL & அமுதன் கல்வி நிலையம்
(வைத்தியசாலை முன்பாக)
சிவநகர் 7 ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு
தரம் 3 தொடக்கம் A/L வரையான அனைத்து வகுப்புகளுக்குமான புதிய பிரிவுகள் ஆரம்பம்
2016 இற்கான A/L விஞ்ஞான/ கணிதப் பிரிவு
ஆரம்பம் 26.12.2013 நேரம் காலை 9.00 மணி
உயிரியல்-A .டில்சான் (B.Sc) வ.வஜிந் (B.Sc HONS)
பௌதீகவியல்:-T.தேவதாஸ் (B.Sc MED) SLES)
S.K.கைறேகன் (B.Sc HONS)
இணைந்த கணிதம்:-K. சுதன் (B.Sc, M.Sc)
S. மயூரன் (B.Sc)
இரசாயனவியல்:- K. வாணிமுகுந்தன் (B.Sc,M.Sc)
S. மகேஸ்வரன் (பிரபல ஆசிரியர் SP.Trd.Sci)
விவசாய விஞ்ஞானம் :- N. சாந்தகிரி (SP.Trd. Agri)
கலைப் பிரிவு 2016
தமிழ் S.S மோகன் ( BA HONS)
இந்துநாகரிகம் S. துஸ்யந்தன் (பிரபல ஆசிரியர்)
புவியியல் T. கேசவன் BA HONS
வரலாறு R.R. ஆனந்தன் (BA FINAL)
அரசியல் S. சந்திரகுமார் ( BA HONS)
* 2014, 2015 க்கான விஞ்ஞான, கணித, கலைப் பிரிவு வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
* தரம் 3 தொடக்கம் 11 வரையான வகுப்புக்கான அனைத்து பாடங்களும் வழமையான ஆசிரியர் குழாமால் கற்பிக்க ப்படுகின்றது.
* தரம் 5 க்கான புலமை பரீட்சை விசேட வகுப்புக்கள் நடைபெறுகிறது.
* அனைவருக்குமான சிங்கள வகுப்பும் நடைபெறுகின்றது.
(5131) நிர்வாகி


# தேசிய ஒற்றுமைக்கான மக்கள் மாநாடு கொழும்பில்

(கொழும்பு)

இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தை வலுப்படுத்தும் விதமாக தேசிய ஒற்றுமைக்கான மக்கள் மாநாடொன்றினை கொழும்பில் நடத்த திட்டமிட்டிருப்பதாக தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இதற்கிணங்க பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் எதிர்வரும் 2014 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 26 ஆம் திகதியன்று தேசிய ஒற்றுமைக்கான மக்கள் மாநாடு நடத்த ஏற்பாடாகியுள்ளது.

மாநாட்டின் இறுதியில் நாட்டிற்குள் பிரிவினைவாதத்தை உருவாக்க முயற்சிக்கும் சில சதிகார கும்பல்களை முறியடிக்கும் வகையில் தேசிய ஒற்றுமைக்கான பிரகடனமொன்று வெளியிட்டு வைக்கப்படுமெனவும் அவர் கூறினார்.

இந்த மாநாட்டில் நான்கு இனங்களையும் சேர்ந்த கல்விமான்கள், கலைஞர்கள், பேராசிரியர்கள், சமையத் தலைவர்கள், சிவில் சமூகத்தினர், வர்த்தகர்கள், ஆசிரியர்கள், பல்கலைக்கழக மாணவர்களென அனைத்து தரப்பையும் சேர்ந்த சுமார் ஆயிரம் பேர் பிரதிநிதித்துவப்படுத்தவுள்ளனர்.

இவர்கள் மாநாட்டின் முடிவில் இலங்கையில் இனிமேலும் ஒரு யுத்தம் வேண்டாமென்ற உறுதியான பிரகடனத்தை வெளியிடுவரெனவும் அமைச்சர் கூறினார். (அ-2)


If you want to be a qualified PHARMACIST
மருந்தாளர் (வெளிவாரி) பரீட்சை
Pharmacist (External) examination conducted every year by the Ceylon medical college council, Faculty of medicine, University of Colombo. After two years of apprenticeship, the candidate is eligible to sit for the above examination, which qualifies for registration as a pharmacist.
AGE:- No Limit (வயது எல்லை இல்லை)
Qualifications :- G.C.E. O/L Pass including English Language
G.C.E. A/L Ordinary Pass In three Science Subjects including Chemistry
03.01.2014 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு Admission- Registration பதிவுகள் நடைபெறும்.
04.01.2014 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு புதிய பிரிவு ஆரம்பம்
05.01.2014 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 2014/2015 ஆம் ஆண்டு பரீட்சைக்கு தோற்றவுள்ளவர்களுக்கு பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பம்.
Venue :- Jaffna college (under Graduate Dept) 464, Hospital Road, Jaffna.
Course fees Monthly Rs.1500/= T.P:- 0776256292
மேலதிக விபரங்கள் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் பார்மசி வகுப்பில் பகல் 12 மணிக்கு நேரடியாக அறிந்து கொள்ளலாம்.
(5120)



கல்யாண மாலை
இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1975 இந்து (V)
நட்சத்திரம்: அனுசம் 4
கி.பா: 55
உயரம்: 5’10"
தகைமை/தொழில்: A/L / நிரந்தர வேலை (கனடா - PR)
தொ.இ: B/2681

பிறப்பு: 1981 இந்து (V)
நட்சத்திரம்: உத்ராடம் 2
கி.பா: 10உயரம்: 5’
தகைமை/தொழில்: பொறியியலாளர் (UK - PR)
தொ.இ: B/2682

பிறப்பு: 1976 இந்து (V)
நட்சத்திரம்: ஆயிலியம் 2
கி.பா: 47 உயரம்: 5’3"
தகைமை/தொழில்: BSc / வங்கி (குவைத்)
தொ.இ: B/2684

பிறப்பு: 1983 இந்து (V)
நட்சத்திரம்: ஆயிலியம் 4
கி.பா: 33 ¼ சூரி செவ் 1 ல்
தகைமை/தொழில்: கணக்காளர் (அமெரிக்கா - PR)
தொ.இ: B/2686

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1982 இந்து (V)
நட்சத்திரம்: அச்சுவினி 2
கி.பா: 46 ½ செவ் 8 ல்
உயரம்: 5’2"
தகைமை/தொழில்: Chartered Accountancy / கணக்காளர்
தொ.இ: G/658

பிறப்பு: 1982 இந்து (V)
நட்சத்திரம்: பரணிகி.பா: 17
உயரம்: 5’4"
தகைமை/தொழில்: A/L, BIT (Following) / முகாமைத்துவ உதவியாளர்
தொ.இ: G/703

பிறப்பு: 1973 இந்து (V)
நட்சத்திரம்: ரோகினி
கி.பா: 12 ¾ செவ் 7 ல்
உயரம்: 5’
தகைமை/தொழில்: BA / ஆசிரியர்
தொ.இ: G/706

பிறப்பு: 1976 இந்து (V)
நட்சத்திரம்: மூலம் 2
கி.பா: 58 உயரம்: 5’4"
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு: சைவபோசனம்
தொ.இ: G/707

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
(ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்)
ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடு முழுவதும் நேற்று முதல் திடீர் சோதனை

(கொழும்பு)

உணவுப் பொருட்களின் உற்பத்தி, விநியோகம், விற்பனை மற்றும் தயாரிப்பு என்பன தொடர்பாக நேற்று முதல் நான்கு நாட்களுக்கு விரிவான அடிப்படையில் திடீர் சோதனைகளை நடத்துவதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

நத்தார் பண்டிகை மற்றும் புத்தாண்டுக்காக மக்கள் ஆயத்தமாகிக்கொண்டிருக்கும் தற்போதைய சூழலில் உணவுப் பொருட்களின் உற்பத்தி, விநியோகம், விற்பனை மற்றும் தயாரிப்பு என்பவற்றின் போது உணவு பாதுகாப்பு விடயத்தில் பெரும்பாலானவர்கள் கவனம் செலுத்தாது செயற்படுவதாகக் கிடைக்கப்பெற்றிருக்கும் புகார்களின் அடிப்படையிலேயே சுகாதார அமைச்சு இந்நடவடிக்கையை முன்னெடுக்கின்றது.

என்றாலும், நாட்டில் எங்காவது உணவுப் பாதுகாப்பு முறை பேணப்படாமல் உணவு உற்பத்தி, விநியோகம், விற்பனை, தயாரிப்பு என்பன இடம்பெற்றால், அவை தொடர்பாக உடனுக்குடன் அறிவிக்கவும் மூன்று தொலைபேசி இலக்கங்களும் இத் திட்டத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

இதன்படி, சுகாதார அமைச்சின் 0113071073 என்ற தொலைபேசி இலக்கத்திற்கோ, நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் 1977 என்ற இலக்கத்திற்கோ, கொழும்பு மாநகர சபையின் மத்திய உணவு கட்டுப் பாட்டுப் பகுதியின் 0112676161 என்ற இல க்கத்திற்கோ தகவல்களை வழங்க முடியும்.(அ)

# சம்பந்தன், சீ.வியை இவ்வாரம் சந்திப்பாராம் ஜனாதிபதி மஹிந்த

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற குழுக்களின் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் வட மாகாண முதலமைச்சர் ஆகியோருக்கு இடையில் முக்கிய சந்திப்பொன்று இந்த வாரம் இடம்பெறும் என அரசாங்க தகவல்கள் தெரிவிக்கின்றன.

வடமாகாண சபை மற்றும வடமாகாண ஆளுநர் உள்ளிட்ட பல விடயங்கள் இச் சந்திப்பின் போது கலந்துரை யாடப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. வடமாகாணத்தை அபிவிருத்தி செய்யும் அரசாங்கத்தின் வேலைத் திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அழைப்பு விடுத்துள்ளார்.

2014 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் மூன்றாம் வாசிப்பு மீதான விவாதத்துக்கு கடந்த வெள்ளிக்கிழமை பதிலளித்து உரையாற்றும் போதே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மேற்கண்ட அழைப்பை விடுத்துள்ளார். இந்த நிலையிலேயே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் முக்கியஸ்தர்களுக்கும் இடையிலான சந்திப்பு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (அ-2)

# விழிப்புணர்வும் ஒத்திகையும்

யாழ்.மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் முன்னெச்சரிக்கை விழிப்புணர்வும் ஒத்திகைப் பயிற்சியும் இடம் பெறவுள்ளதாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய குறித்த நிகழ்வு பருத்தித்துறை பிரதேச செயலகப்பிரிவில் பருத்தித்துறை தெற்கு ஜே/401, பருத்தித்துறை கிழக்கு ஜே/403 ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை மட்டும் உள்ளடக்கி இன்று செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3 மணிக்கு அனர்த்த முகாமைத்துவ பிரிவினரால் முன்னெச்சரிக்கை விழிப்புணர்வும் ஒத்திகை பயிற்சி செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படும் என அவர் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் பொது மக்கள் அமைதியாக இருக்குமாறும் இது ஒரு ஒத்திகை செயற்பாடு என்பதால் எவரும் குழப்பமடைய தேவையில்லை எனவும் அவர் கேட்டுள்ளார். (அ-2)

# க.பொ.த. உயர்தரப் பரீட்சையின் முன்னணிப் பெறுபேறுகள்

க.பொ.த உயர்தரப் பரீட்சை முடி வுகள் வெளியாகியுள்ளன. இவ் முடிவுகளில் முன் னணிப் பெறு பேறுகளை பாடசாலை அதி பர்கள் அறிவித்துள்ளனர். முன்னணிப் பெறு பேறுகளைப் பெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு,

**சென்.ஜோன்ஸ் கல்லூரி**

**உயிரியல்**

கந்தசாமி திவாகரன்-3ஏ, ஜோசப் அன்ரவ் வசந்தன்- 3ஏ, நவரத்தினராஜா வீரடினேஷ்- 2ஏபி, சிதம்பரநாதன் யசோதர கிருஷ்ணா- 2ஏபி, சிவநேசன் சிவராம்- ஏ2பி, ரகு சரவணன்- 3பி

**கணிதம்**

தேவராஜ் பிரஜன்எறிக்- 3ஏ, சிவலோகநாதன் குணேசன்- 3ஏ, சோமசுந்தரம் நிசாந்தன்-3ஏ, சரவணபவன் கௌமாறன்-2ஏபி, நாகேந்திரன் சுகாஷனன் -2ஏபி, தயாபரராஜ் சாம்நிரோஷன்-2ஏபி, சத்தியசீலன் நிபாயன்- 2ஏபி, சாந்தகுமார் லெஸ்லிலவன்-3பி

**வர்த்தகம்**

மகேஸ்வரன் விந்தரகன்-3ஏ, துரைசிங்கம் அனோஜிதன்- 2ஏபி, சிதம்பரநாதன் யசோகுலன்- 2ஏசி, செல்வரட்ணம் குமரேஷன்- ஏ2பி.

**கலை**

சிறிகாந்தன் சிறிநாத்-ஏ2பி, கிரிதரன் மரினோ விஜிதரன்- 2ஏபி, தர்மகுலசிங்கம் சிவநாதன்- ஏபிசி

**அருணோதயக் கல்லூரி**

**கணிதம்**

இ.கீர்த்தனா- 2ஏபி, அ.தவக்குமார்- ஏ2பி, இ.அனுசன்-ஏபிசி

**உயிரியல்**

கே.சோபனா- ஏபிசி

**வர்த்தகம்**

பா.பரதன்- 3ஏ, வி.மதுசாளினி- ஏ2சி

**கலைப்பிரிவு**

உ.சுகந்தன்- 3ஏ, வி.கலாகரன்- 2ஏபி, யு.நிக்சன்- 2ஏபி, யோ.டிலீப்குமார்- 2ஏசி, பா.தர்சன்- ஏ2பி, உ.அகிலன்-ஏ2சி, ந.சிறீசாந்- ஏபிசி, ந.மகதீபசர்மா- 2பிசி, த.துலக்சி- 2பிசி

## கண்ணீர் அஞ்சலி

**அமரர் அம்பலவாணர் தம்பித்துரை**

**(ஓய்வு பெற்ற உடற்பயிற்சி ஆசிரியர்)**



யா/உரும்பிராய் இந்துக் கல்லூரியில் உடற்பயிற்சி ஆசிரியராக தொடர்ச் சியாக 9 வருடங்கள் சிறப்பாக பணியா ற்றி யாழ். மாவட்டத்தில் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற உடற்பயிற் சிப் போட்டியில் எமத கல்லூரி அணியை தொடர்ச்சியாக 9 வருடங்கள் வெற்றிபெற செய்த முன்னைணாள் ஓய்வு பெற்ற உடற்பயிற்சி ஆசிரியர் அமரர் அம்பலவாணர் தம்பித்துரை அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு ஆழ்ந்த கவலை அடைகின்றோம்.

அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எல்லாம் வல்ல இறைவன் அமைதியும் சாந்தியும் வழங்குவதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தகவல்:
ஆசிரியர் கழகம்
யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி


# PATRICIAN INSTITUTES

## பற்றீசியன் தொழிற்பயிற்சி நிறுவனங்கள்
## புதிய பயிற்சி நெறிகள் ஆரம்பமாகின்றன

**ஆரம்பம் 07.01.2014**

## 1. COMPUTER COURSES (கணனி பயிற்சி நெறி)

| | |
|---|---|
| A. Advanced in Computer programming | Duration 8 Months |
| B. Diploma in Microsoft Office | Duration 4 Months |
| C. Diploma in Desk top Publishing | Duration 4 Months |
| D. Diploma in Video Editing | Duration 4 Months |
| E. Diploma in Type Setting | Duration 3 Months |
| F. Diploma in Computerized Accounting | Duration 4 Months |
| G. Diploma in Software Engineering | Duration 6 Months |
| H. Diploma in Micro media | Duration 4 Months |
| I. Diploma im web Multimedia | Duration 4 Months |
| J. Professional Diploma in Graphic Design | Duration 6 Months |
| K. Computer Hardware Technology | Duration 4 Months |
| L. Internet & E.mail | Duration 1 Month |
| M. General Information Technology (GIT) | Duration 4 Months |
| N. Information & Communication Technology (ICT) | Duration 4 Months |
| O. Children's Kids | Duration 4 Months |

2. Short Hand Typing (English) சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் (ஆங்கிலம்) கணனி மூலம் தட்டெழுத்து பயிற்சி அளிக்கப்படும்.
3. Short Hand Typing (Tamil) சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் (தமிழ்) கணனி மூலம் தட்டெழுத்து பயிற்சி அளிக்கப்படும்.
4. Sewing (தையல்)
5. General Moto Mechanism (மோட்டார் வாகனம் திருத்துதல்)
6. General Electrician (ஜெனரல் எலெக்ரீசியன்)
7. Lathe Machine Operation (கடைச்சல் இயந்திரப் பயிற்சி)
8. Arc Welding (மின் ஒட்டுநர் பயிற்சி)
9. Carpentry (மரவேலை)
10. Refrigeration and Air Conditioning (குளிர்சாதனப் பெட்டி திருத்துதல்)
11. General motor cycle Mechanism (மோட்டார் சைக்கிள் திருத்தல்)

**VACANCY பதவி வெற்றிடம்கணனி போதனாசிரியர் COMPUTER INSTRUCTOR**

மேற்படி பதவிக்கு தகைமை உள்ளவர்கள் 07.01.2014 ஆம் திகதிக்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமோ விண்ணப்பங்களை அனுப்பவும். யாழ். மாநகரசபை எல்லைக்கு உட்பட்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

பின்வரும் பாடநெறிகள் கற்பிக்கக் கூடியனவராக இருத்தல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| 1. Computer Programming | 2. Microsoft Office | 3.DTP |
| 4.Type Setting | 5.Computer Accounting | 6.Web Multimedia |
| 7.Video Editing | 8. Graphic Design | 9. Internet and Email |

## வாகன உரிமையாளர்களுக்கான அறிவித்தல்
## வாகன தகுதிச் சான்றிதழ்: 2014

**2014 ஆம் ஆண்டுக்கான வாகனத் தகுதிச் சான்றிதழ் எமது நிறுவனத்தினால் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதை அறியத்தருகின்றோம்.**

குறிப்பு:-
1. பயிற்சிக் கட்டணங்களைத் தவணை முறையில் செலுத்தலாம்.
2. பயிற்சி நெறிகள் சம்பந்தமான சகல விபரங்களையும் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு
Registrar,
Patrician Institute,
61, (59), St.Patrick"s Road,
Jaffna.
T.P:- 021 222 6148,
Fax:- 021 222 6140
Email:- Spitee@ Sltnet.lk.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தென்பகுதி வர்த்தகர்களை தடைசெய்வது எவ்வளவு தூரம் சாத்தியமானது?


Dr.எஸ்.கண்ணதாசன்

"தென்பகுதி வர்த்தகர்களை எமது பிரதேசத்தில் தடைசெய்ய வேண்டும்" என்ற யாழ்ப்பாண வர்த்தகர் சங்கத்தினரின் வேண்டுகோளை கடந்த திங்களன்று வெளியான வலம்புரி பத்திரிகை வாயிலாக அறியமுடிந்தது.

உண்மையிலே நான் ஒரு பொருளாதார நிபுணராக இல்லாத போதிலும் எமது சமூகத்தில் நடப்பவைகளை அவதானித்து வருபவன் என்ற ரீதியில் எனது எண்ணக்கருக்களை வலம்புரி வாசகர்களுடன் பகிரலாம் என நினைக்கிறேன்.

கல்வி, பண்பாடு, கலாசாரம் மற்றும் வர்த்தகம் என இன்னோரன்ன பல துறைகளிலும் தலைசிறந்து விளங்கிய நாம் இன்று ஒரு சவாலான கால கட்டத்திற்கு முகங்கொடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதே மறுக்க முடியாத உண்மை.

குறிப்பாக வர்த்தகத்துறையின் எழுச்சியும் வீழ்ச்சியும் எமது பிரதேச பொருளாதாரத்தில் நேரடியான தாக்கத்தினைச் செலுத்துவதோடு மட்டுமல்லாது ஏனைய அனைத்துத் துறைகளிலும் மறைமுகமான தாக்கத்தினைச் செலுத்துமென்பது யாவரும் அறிந்ததே.

பட்டதாரிகளான ஒரு சிலர் அரச தொழிற் துறையை நாட இன்னும் சிலர் வங்கிகள் மற்றும் தனியார் நிறுவனங்களைத் தேடிச் செல்ல, மேலும் சிலருக்குத் தொழில் வாய்ப்பினை வழங்கி வருவது எமது யாழ்ப்பாணத் தொழிலதிபர்களே.

மேலும் இத்தொழிலதிபர்களிற் பலர் கோவில்கள், அநாதை ஆசிரமங்கள், முதியோர் இல்லங்கள் மற்றும் பாடசாலைகள் போனற பல்வேறு தருமகாரியங்களிற்கு நிதியுதவி புரிந்து வருவதும் நாமறிந்ததே.

ஆனால், அவர்களது தற்போதைய நிலை மிகவும் கவலைக்கிடமானதாக உள்ளது. வியாபாரம மிகவும் மந்த நிலை; கழுத்தை மீறிய கடன்; பெரும்பாலானோர் தொழிலைக் கைவிடும் நிலை; ஒரு சிலர் தலை மறைவு; இவற்றின் உச்சக்கட்டமாக சிலரது தற்கொலைகள்.

இந்த சந்தர்ப்பத்திலே எமது வர்த்தக நடவடிக்கைகளை மீளாய்வு செய்து காலத்திற்கேற்ற வகையில் எமது வர்த்தக நடவடிக்கைகளை மறுசீரமைக்கவில்லையெனில் மீளமுடியாத அழிவைச் சந்திப்பது தவிர்க்க முடியாது.

அந்தவகையிலேயே யாழ்ப்பாண வர்த்தகர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சங்கமானது மேற்படி வேண்டுகோளை விடுத்துள்ளது.

அவர்களைப் பொறுத்தவரையில் யாழ்ப்பாணத்தை நோக்கிய தென்னிலங்கை வர்த்தகர்களது படையெடுப்பானது தமது வர்த்தக நடவடிக்கைகளில் பாரிய விழுக்காட்டை ஏற்படுத்தியுள்ளதாகக் கருதுகின்றனர். யாழ்ப்பாணத்தில் வர்த்தகத்துறையின் வீழ்ச்சிக்குக் காரணமான பல காரணிகளில் அதுவும் ஒன்றாக இருக்கலாம்.

அவர்களது வருகைக்கு முன் தமது தொழிற்றுறை மிக நன்றாக நடந்ததை நினைவு கூருகின்றனர். ஏனையோரது போட்டி இல்லாதவிடத்து அவ்வாறு நடந்தது வெளிப்படையே.

ஆனால் இன்றோ நிலைமை மாறிவருகிறது. யாழ்ப்பாணமானது இலங்கையின் பெருநிலப்பரப்புடன் எவ்வித தடையுமின்றித் திறந்து விடப்பட்டதும் ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமாக அதனை நோக்குவதுடன் பல்வேறு வழிகளில் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த முயல்கினறனர். அதன் ஒரு வெளிப்பாடே யாழ்ப்பாணத்தினைத் திறந்துவிடப்பட்ட மாபெரும் சந்தையாகத் தென்னிலங்கை வர்த்தகர்கள் கருதுகின்றனர்.

கூறிய விலைக்கே எவ்வித மறுபேச்சுமின்றி வாங்கிக் கொள்கின்ற தன்மை; எவ்விலை கொடுத்தாவது குறித்த பெயருடைய பொருட்களையே (branded items) கொள்வனவு செய்யவேண்டும் என்ற மனப்பாங்கு; வெளிநாட்டுப் பணம்தாராளமாகப் புரள்கிறது போன்றவை யாழ்ப்பாண மக்களைப்பற்றிய தென்னிலங்கை மக்களது விம்பமாகும். இதுவே யாழ்ப்பாணத்தினை அவர்களுக்கு ஒரு சிறந்த சந்தையாக, சந்தர்ப்பமாக தோற்றுவித்துள்ளது.

மேலும் நீண்டகாலமாக நாடடின் பிரதான பகுதியிலிருந்து துண்டிக்கப்பட்டிருந்த மக்களுக்கு கொழும்பினை அங்கலாய்த்துப் பார்த்துக் கொண்டிருந்த மக்க ளுக்கு யாவும் தமது காலடியில் வருகின்றபோது அதனை நாடிச் செல்வது இயல்பானதே.

இதனைத்தான் எமது வர்த்தகர்கள் புரிந்துகொள்ளவேண்டும்; சுதாகரித்துக்கொள்ளவேண்டும்.

இதன் வெளிப்பாடான தென்னிலங்கை வர்த்தகர்களைத் தடைசெய்தல் என்பது எவ்வளவு தூரம் சாத்தியமானது?

சட்டரீதியாகவும் வர்த்தக மற்றும் மனுதர்ம ரீதியாகவும் சாத்தியமா? முடியுமாயின் தடைசெய்யும் பொறுப்பு யாருடையது? பொறிமுறை எத்தகையது? என்பது பற்றிய தெளிவான முடிவுகள் எடுக்கப்பட வேண்டும்.

அதேவேளை எமது தொழிலதிபர்கள் தம்மை நிலைப்படுத்திக் கொள்ள தம்மீதான ஒரு மீள் பார்வை அவசியம்.

பலருடன்கலந்துரையாடிய வகையிலும் எனது அனுபவத்திலும் வாடிக்கையாளர்களுடனான தொடர்பாடலில் நாம் முன்னேறியே ஆக வேண்டும என்பது எனது கருத்தாகும். இந்த இடத்திலே நான் வாசித்த ஒரு வாசகம் ஞாபகத்திற்கு வருகிறது "வாடிக்கையாளரே எமது மிக முக்கிய நபர் (customer is the most important person)". இது மகாத்மா காந்தியினது வாக்கு. எமது அடிமனதிலே எப்போதுமே உச்சரிக்கப்பட்டுக் கொண்டிருக்க வேண்டிய மந்திரச் சொல் இதுவாகும்.

மிகச்சிறிய இலாபமாக இருந்த போதிலும் "வாடிக்கையாளரைத் திருப்திப்படுத்துவது" என்பது நீண்ட நாளில் மாபெரும் இலாபத்தை ஈட்டித்தரும்.

போராட்டகாலத்தில் போட்டியிருக்கவில்லை. குறைந்த எண்ணிக்கையான தொழிற்றுறைகளே இருந்தன. சுலபமாக தொழில் நடந்தது. ஆனால் இன்று அவ்வாறில்லை.

வாடிக்கையாளர் நல்லுறவிற்கு மேலதிகமாக புத்தாக்க (creativity) முயற்சிகள் அவசியம். எல்லோருமே ஒரேவகையான சேவையையோ பொருட்களையோ வழங்கினால் பத்தோடு பதினொன்றாகவே இருப்போம். தென்னிலங்கை வர்த்தகர்களும் எம் பிரதேசத்திலேயே வந்து எமக்குப் போட்டியாக விளங்குகிறார்கள் என்றால் வித்தியாசமாகச் செய்தேயாகவேண்டும்.

தென்னிலங்கை முழுவதும் வர்த்தக நிலையங்களும் பல்வேறு சேவைகளும் வழங்கி கொடிகட்டிப் பறந்தவர்கள் பறக்கிகின்றவர்கள் நாம். ஏன் உலகம் முழுவதுமே இத்தகைய நிலை. ஆனால் எமது சொந்த மண்ணிலே எம்மால் சாதிக்க முடியவில்லை. ஏன் இந்த நிலை?

தற்காலத்திலே தொழிற்றுறையில் வெற்றி பெறுவதற்கு வர்த்தக, முகாமைத்துவ , அரசியல் மற்றும் பொருளாதார பட்டறிவு மட்டும் இருந்தாற் போதாது. சுய நிர்வாகம் மிக முக்கியமானதாகும். அதிக ஆசையை விடுத்து சாதித்துக் காட்ட வேண்டும் என்ற எண்ணம் அடிமனதில் இருக்க வேண்டும். மற்றவர் செய்து அதிகலாபம் சம்பாதிக்கிறார் என்றவுடன் அனுபவமில்லாது அத்தொழிலினைத் தொடங்கி அவரது வியாபாரத்தினையும் குறைத்து பின்னர் தமது முதலையுமே மீட்க முடியாது போனதே அண்மைக் கால மாகப் பலரது வரலாறு.

தொழிற்றுறை ஒரு கலை; ஒரு விஞ்ஞானம் எப்பொழுதும் பதிது புதிதாகச் சிந்திக்கவேண்டும். மற்றவருக்கு ஒரு படி மேலாகச் சிந்திக்க வேண்டும். ஆராய்ச்சியில் ஈடுபடவேண்டும். வாடிக்கையாளரின் உண்மையான கருதத்துக்களைக் கண்டறிய வேண்டும்.

சர்வதேச, தேச மற்றும் பிராந்திய வர்த்தக, பொருளாதார அரசியல் மாற்றங்களை உடனுக்குடன் அறிந்து அவற்றிற்கேற்ப எம்மைத் தயார்படுத்த வேண்டும். விஞ்ஞான ரீதியாக எதிர்வு கூறும் ஆற் றலை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

மேற்படி அனைத்து விடயங்களிலும் வர்த்தகர் யாவருமே தேர்ச்சிபெற வர்த்தக சங்கமானது பொது நலத்துடன் துறைசார் வல்லுநர்களின் உதவியுடன் செயலமர்வுகள், பயிற்சிப் பட்டறைகள் போன்றவற்றை நடத்தி, சோர்ந்து போயுள்ள எமது வர்த்தத் துறைக்கு புது இரத்தம் பாய்ச்ச வேண்டும.

இறுதியாக கடந்து வந்த கசப்பான அனுபவங்களிலிருந்து கற்ற பாடங்களிலிருந்து எமது வர்த்தகத துறையை வழிநடத்தி எமது சமுதாயத்தை முன்னேற்ற வேண்டிய பாரிய பொறுப்பு யாழ்ப்பாண வர்த்தக சங்கத்திற்குள்ளது.

# பயங்கரவாதத்தை போற்றி புகழும் அமைப்புக்களை தடைசெய்ய வேண்டும்

## ரொஹான் குணரட்ன வலியுறுத்து

**இலங்கையின் குற்றவியல் சட்டங்களில் மாற்றம் கொண்டுவரப்பட வேண்டுமென பயங்கரவாத ஒழிப்பு தொடர்பான பேராசிரியர் ரொஹான் குணரட்ன தெரிவித்துள்ளார். ஜேர்மனியின் நாசீ விரோத சட்டங்களுக்கு நிகரான வகையில் இலங்கையின் குற்றவியல் சட்டத்தில் திருத்தம் செய்யப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.**

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்.

பயங்கரவாத ஒழிப்பு தொடர்பில் தற்போது காணப்படும் சட்டங்கள் போதுமானதல்ல தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரோ அல்லது வேறு தரப்பினரோ பயங்கரவாதத்திற்கு ஆதரவளித்தால் அவர்களைத் தண்டிக்க வேண்டும். பயங்கரவாதிகள் அல்லது அவர்களது குடும்ப உறுப்பினர்கள் தேர்தலில் போட்டியிட அனுமதித்தமை அரசாங்கம் விட்ட தவறாகவே கருதப்பட வேண்டும்.

பயங்கரவாதிகள் மற்றும் அவர்களது உறவினர்கள் தேர்தலில் போட்டியிட அனுமதித்ததன் மூலம் பயங்கரவாத பிரசார நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

பயங்கரவாதத்தை போற்றி புகழ்ந்து ஆற்றும் உரைகளை தடை செய்யக் கூடிய வகையில் நாட்டில் சட்ட திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும். நேரடியாகவோ மறைமுகமாகவோ பயங்கர வாதத்தை போற்றும் நடவடிக்கைகள் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல. சில தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் தேசிய கொடி, தேசிய கீதம் தொடர்பில் கருத்து வெளியிட்டிருந்தனர்.

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் அரசியல் சாசனத்திற்கு புறம்பான வகையில் செயற்படுவதனை அனுமதிக்க முடியாது; பயங்கரவாதிகளுக்கு புகழாரம் சூட்டும் நடவடிக்கைகள் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல எனவும் அவ்வாறு மேற்கொள்வதனால் பயங்கரவாதம் மீள உருவாகக் கூடிய சாத்தியங்கள் ஏற்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்புகளைப் பேணும் அரசியல்வாதிகள் தொடர்பில் விசாரணை நடத்தி தண்டிக்க வேண்டும். வெளிநாடுகளில் தொடர்ந்தும் தமிழீழ விடுதலைப் புலிகள் செயற்பட்டு வருவதாகவும் பல்வேறு வழிகளில் தமிழ் அரசியல்வாதிகளுக்கு அழுத்தங்களை பிரயோகித்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளாரா.

அமெரிக்கா, இந்தியா, கனடா, ஐரோப்பிய ஒன்றியம் போன்ற தமிழீழ விடுதலைப் புலி ஆதரவு அமைப்புக்களை தடை செய்ததனைப் போன்று இலங்கை அரசாங்கமும் தடை செய்ய வேண்டும் .

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் புலிகளும் இணைந்து செயற்படுவதாகவும் அவர்களுக்கு எதிராக அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார். பிரிவினைவாதத்திற்கு எதிராக அரசாங்கம் நிலையான தீர்வுத்திட்டமொன்றை முன்வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

13ஆவது திருத்தச் சட்டம் நாட்டுக்கு பொருத்தமற்றது எனவும் அதனை இரத்து செய்ய வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். மத்திய அரசாங்கத்தின் ஊடாக அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட வேணடும் உதாரணமாக தமிழ், முஸ்லிம் பிரதமர்களை நியமிக்க முடியும். அனைத்து இனங்களை ஒருங்கிணைந்து இலங்கை தேசிய அடையாளத்தை உருவாக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# புத்திசாலி பூனை!

இடத்தைச் சொல்லிவிட்டு ஓட்டம் பிடிததது முயல். நண்பர்களிடம் வந்து நடந்தைச் சொன்னது. பயந்து போன நான்கும் என்ன செய்வது என்று சிந்தித்தன.

"நான் அந்த மரத்தில் ஏறிக் கொள்கிறேன்" என்றது கரடி.

"அந்தப் புதரில் நான் ஒளிந்து கொள்கிறேன்" என்றது ஓநாய்.

"உன் அருகிலேயே நானும் பதுங்கிக் கொள்கிறேன்" என்றது முயல்

"அடர்ந்த அந்த மரங்களுக்குப் பின்னால் நான் மறைந்து கொள்கிறேன்" என்றது பன்றி.

பூனை பிரபுவும் நரியும் வரும் ஓசை கேட்டது. நான்கும் பதுங்கிக் கொண்டன.

பலவிதமான உணவுப் பொருள்களைப் பார்த்தது பூனை. அதற்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. "மியாவ், மியாவ்" என்று கத்திக் கொண்டே சாப்பிடத் தொடங்கியது.

புதரில் இருந்த ஓநாய், "எவ்வளவு பயங்கரமான விலங்கு? என்ன கொடூரமான் குரல்? சாப்பிடும் வேகத்தைப் பார்த்தால் நம் விருந்து அதற்குப் போதாது. நம்மையும் கொன்று தின்னும் போல இருக்கிறது" என்றது.



"ஆமாம்" என்று நடுங்கிக் கொண்டே சொன்னது முயல்.

மரத்தில் இருந்த கரடியும் மறைந்து இருந்த பன்றியும் நடுங்கின.

பூனை விருந்தை வயிறார உண்டது. மேடையின் மேல் படுத்துத் தூங்கத் தொடங்கியது.

மரத்தின் மறைவில் பதுங்கி இருந்த பன்றியின் வாலைக் கொசு ஒன்று கடித்தது. உடனே பன்றி தன் வாலை அசைத்தது.

சத்தம் கேட்டு விழித்தது பூனை. பன்றியின் வாலை எலி என்று தவறாக நினைத்தது அது.

"மாட்டிக் கொண்டாயா?" என்று கத்திக் கொண்டே எலியைப் பிடிக்கப் பாய்ந்தது. நேராகப் பன்றியின் முகத்தில் போய் மோதியது அது.

எதிர்பாராமல் நடந்ததைக் கண்டு அதிர்ச்சி அடைந்தது பன்றி. அங்கிருந்து "தப்பித்தேன்" என்று கத்திக் கொண்டே ஓட்டம் பிடித்தது அது.

பன்றியைக் கண்டு பயந்த பூனை ஒரே பாய்ச்சலில் அருகில் இருந்த மரத்தில் ஏறியது.

அங்கிருந்த கரடி தன்னைத்தான் பூனை பிரபு கொல்ல வருகிறார் என்று பயந்தது. விரைந்து மரத்தின் உச்சிக் கிளைக்குச் சென்றது. அதன் எடை தாங்காமல் கிளை முறிந்தது. புதரில் மறைந்திருந்த ஓநாயின் மேல் விழுந்தது அது.

அலறி அடித்துக் கொண்டு ஓநாயும் ஓட்டம் பிடித்தது. முயலும் அதைத் தொடர்ந்து ஓடியது. வலியைத் தாங்கிக் கொண்டு "தப்பித்தோம் பிழைத்தோம்" என்று கரடியும் ஓடியது.

நீண்ட நேரத்திற்குப் பிறகு நான்கும் சந்தித்தன.

"பூனை பிரபு பார்ப்பதற்குச் சிறியவராக இருக்கிறார். நம் நால்வரையும் கொன்று தின்றிருப்பார். நல்ல வேளை தப்பித்தோம்" என்றது கரடி.

மற்ற மூன்றும் "ஆமாம்" என்றன.

அதன் பிறகு பூனை பிரபுவின் வழிக்கே அவை செல்லவில்லை. வயதானாலும், அதிஷ்டத்தாலும், தன் வாய்சொல் திறமையாலும் பூனையானது மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தது.

(முற்றும்)




- 1690- யாழ்ப்பாணத்தில் கிறிஸ்துமஸ் இரவு ஆராதனைக்காகக் கூடியிருந்த சுமார் 300 கத்தோலிக்கர்கள் டச்சுப் படைகளினால் அடித்துத் துன்புறுத்தப்பட்டனர்.
- 1715-சுவீடனின் துருப்புக்கள் நோர்வேயை ஆக்கிரமித்தன.
- 1777-கிரிட்டிமட்டி தீவு ஜேம்ஸ் குக்கினால் கண்டறியப்பட்டது.
- 1851-வாஷிங்டன் டிசியில் காங்கிரஸ் நூலகம் தீப்பிழ்த்ததில் பெறுமதியான நூல்கள் அழிந்தன.
- 1906-ரெஜினால்ட் ஃபெசெண்டென் உலகின் முதலாவது வானொலி நிகழ்ச்சியைத் தயாரித்து வழங்கினார்.
- 1941- இரண்டாம் உலகப்போர்: ஹொங்கொங் ஜப்பானியப் படைகளிடம் வீழ்ந்தது.
- 1941-இரண்டாம் உலகப்போர்: மலேசியாவின் சரவாக் மாநிலத் தலைநகர் கூச்சிங் ஜப்பானியரிடம் வீழ்ந்தது.
- 1951-லிபியா இத்தாலியிடம் இருந்து விடுதலை பெற்றது. முதலாம் ஐட்ரிஸ் லிபிய மன்னனாக முடிசூடினார.
- 1954-லாவோஸ் விடுதலை பெற்றது.
- 1968-மூன்று விண்வெளி வீரர்களை ஏற்றிச்சென்ற அப்பல்லோ 8 விண்கலம் சந்திரனின் சுற்றுவட்டத்தில் நுழைந்தது.
- 1979-ஆப்கானிஸ்தானின் கம்யூனிச அரசைக் காப்பதற்காக சோவியத் ஒன்றியம் ஆப்கானிஸ்தானை முற்றுகையிட்டது.
- 1979-ஐரோப்பாவின் முதலாவது விண்கலம் ஆரியான், விண்ணுக்கு அனுப்பப்பட்டது.
- 2005-யோசப் பரராஜசிங்கம் படுகொலை: இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினர் யோசப் பரராஜசிங்கம் மட்டக்களப்பு தேவாலயம் ஒன்றில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டார்.

**பிறப்புக்கள்**

- 1837-பவேரியாவின் எலிசபெத், ஆஸ்திரியா மற்றும் ஹங்கேரியின் அரசி (இ.1898)
- 1957-ஹாமித் கர்சாய், ஆப்கானிஸ்தான் குடியரசுத் தலைவர்

**இறப்புக்கள்**

- 1524-வாஸ்கோ ட காமா, போர்த்துக்கீச மாலுமி (பி.1460)
- 1950-பி.ஜி.வெங்கடேசன், திரைப்பட நடிகர்
- 1973-ஈ.வெ.ராமசாமி, திராவிடர் கழகத்தினை தோற்றுவித்தவர் (பி.1879)
- 1987-எம்.ஜி. இராமச்சந்திரன், தமிழ்நாட்டின் முதலமைச்சர், திரைப்பட நடிகர் (பி.1917)
- 2005-பி.பானுமதி, தமிழ்த் திரைப்பட நடிகை (பி.1925)

**ம.கோ.இராமச்சந்திரன்**



எம்.ஜி.ஆர் என்ற பெயரில் புகழ்பெற்ற, மருதூர் கோபாலமேனன் இராமச்சந்திரன் 1917 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 17 ஆம் திகதி பிறந்தார். தமிழ்த் திரைப்பட நடிகராகவும் 1977 முதல் இறக்கும் வரை தமிழ்நாட்டின் தொடர்ந்து மூன்றுமுறை முதலமைச்சராகவும் இருந்தவர்.

இவர் உயரிய விருதுகளில் ஒன்றான பாரத ரத்னா விருதினை பெற்றவர். இராமச்சந்திரன் இலங்கையின் கண்டிக்கு அருகேயுள்ள நாவலப்பிட்டியில் மருதூர் கோபால மேனனுக்கும் சத்தியபாமாவுக்கும் மகனாகப் பிறந்தார்.

நாடகத்துறையில் நன்கு அனுபவமான நிலைமையில் திரைப்படத் துறைக்குச் சென்றார். திரைப்படத்துறையில் தனது அயராத உழைப்புக் காரணமாக முன்னேறி முதன்மை நடிகரானார். இவரது நடிப்பு பெரும் எண்ணிக்கையிலான மக்களைக் கவர்ந்தது.

விடுதலைப் புலிகளுக்கும் பிரபாகரனுக்கும் வெளிப்படையான ஆதரவு அளித்தார். எம்.ஜி.ஆர்.- ஆயுதம் வாங்கி இலங்கைக்கு கொண்டு வந்து தமிழ்மக்களை காப்பாற்ற, முதலில் இரண்டு கோடி ரூபாயை த.வி.புகளுக்கு வழங்கினார். அந்த உதவி இல்லையென்றால் இந்தளவிற்கு இயக்கம் வளர்ந்திருக்க இயலாது என்று பிரபாகரன் பேட்டியில் கூறியிருக்கிறார். மேலும் எம்.ஜி.ஆரை அண்ணன் என்றே அழைத்ததாகவும் கூறியிருக்கிறார். மத்திய அரசு விடுதலைப்புலிகளுக்கு நெருக்கடி கொடுத்த காலகட்டத்திலும் பெரிய தொகையை கொடுத்து உதவி செய்தார்.

எம்.ஜி.ஆரின் மறைவிற்கு பிரபாகரன் வெளியிட்ட இரங்கல் செய்திகள் தமிழீழ மக்கள் சுதந்திரமாக வாழவேண்டுமென விரும்பிய மாண்புமிகு முதலமைச்சர் எம்.ஜி.ஆர் அவர்களுக்குத் தமிழீழ விடுதலைப் புலிகள் கண்ணிர் அஞ்சலி செலுத்துகின்றனர் என்று கூறியுள்ளார்.

தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். நினைவாக சென்னையில் மெரினா கடற்கரையில் அண்ணா நினைவிடத்துக்கு அருகில் அவரது உடல் புதைக்கப்பட்டது. அந்த இடத்தில் இவரின் நினைவிடம் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு எம்.ஜி.ஆரின் மார்பளவுச்சிலை அமைக்கப்பட்டுள்ளது. எம்.ஜி.ஆரின் அரிய புகைப்படங்களும், அவருடைய சில பொருட்களும் மக்களின் பார்வைக்கு தனி கட்டடத்தில் வைக்கப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகம் உணரட்டும்! ஆனந்தம் பரவட்டும்!



## ஆன்மீகம் 75

இன்று பெண்மையை இரண்டாம் தரத்திற்கு தள்ளிவிட்டிருப்பது நாம் படைப்பின் அழகை மொத்தமாக கொச்சைப்படுத்தி இருப்பதைத் தான் சுட்டிக்காட்டுகிறது. கடுமையான கலாச்சார மற்றும் சமய அணுகுமுறைகளே இதில் முக்கிய குற்றவாளிகள்.

அனைத்தையும் ஆள வேண்டும். மற்றவர்களைவிட சிறப்பாக இருக்க வேண்டும் என்னும் அற்பத்தனம் தான் ஆண்மை மேலானதென்ற மனப்பாங்கிற்கு காரணம். உடல் சார்ந்த விடயங்கள், பொருட்களே உயர்ந்ததென்ற எண்ணம்தான் பெண் தன்மையின் படுகொலைக்கு ஆணி வேராகிவிட்டது. நல்லவேளை, தேவை இருந்ததால், நாம் பெண்களைக் கொல்லவில்லை.

மதம், நவீன அறிவியல், கார்ப்பரேட் கலாச்சாரம் ஆகிய இவற்றிற்கு ஒரு ஒற்றுமை உண்டு. பெண் தன்மையின் பேரழிவிற்கு மிக முனைப்புடன் செயற்பட்டுக் கொண்டிருப்பதுதான் அந்த ஒற்றுமை!



பெண்கள் சற்றே உயர்மட்டங்களில் செயல்புரிய தொழில்நுட்பம் உதவினாலும், அது ஆண் தன்மையின் களமாகவே உள்ளது துரதிஷ்டமானதே. வாழ்வதற்கு பொருள் தன்மையையும் தாண்டி ஏதோ ஒன்று இருக்கிறது. இதை அங்கீகரிக்கும் போது, பெண் தன்மை இந்த சமூகத்தில் தனக்கான இடத்தை அடையும்.

என்னால் இதைப்பற்றி முடிவில்லாமல் பேசிக் கொண்டே இருக்க முடியும். இந்த பாவ ஸ்பந்தனா நிகழ்ச்சி கூட ஆண்களுக்கு தனியாக, பெண்களுக்கு தனியாக நடத்தப்படுவதே சிறப்பாக இருக்கும். தற்சமயம் நடைமுறை சிக்கலினால், சில இடங்களில் மட்டும் இருபாலரும் இணைந்து செய்யும் பாவ ஸ்பந்தனா நிகழ்ச்சிகள், நடைபெற்று வருகின்றன. இருப்பினும் இவற்றை தனியாக நடத்துவதன் மூலமே உச்சபட்ச பலன்களைப்பெற முடியும்.

இதனை நீங்கள் சரியாக புரிந்து கொள்ள வேண்டுமென்றால், சமய நிகழ்ச்சியில் பெண் தன்மைக்கோ ஆண் தன்மைக்கோ இடமே கிடையாது. ஆனால், பாவ ஸ்பந்தனா நிகழ்ச்சி, ஒரு குறிப் பிட்ட திசை நோக்கி ஒருவரை செம்மைப்படுத்த அற்புத வாய்ப்பு!

உலகத்திற்கும் எனக்கும் செய்திருக்கும் செயல்களுக்காக, அந்த முழு மதியின் படைப்புக்களுக்கு நான் தலை வணங்குகிறேன்!

(தொடரும்)

சத்குரு ஜக்கி வாசுதேவ்

# பிரியங்கா நளினியை மிரட்டினார்..?

**வேலூர் சிறையில் தம்மைச் சந்தித்த காங்கரஸ் தலைவர் சோனியா காந்தியின் மகள் பிரியங்கா மிரட்டலுடன் கேள்விகளைக் கேட்டதாகவும தாம் சில பதில்களை சொன்னதாகவும் ராஜீவ் காந்தி வழக்கில் ஆயுள்தண்டனை அனுபவித்து வரும் நளினி தெரிவிக்கிறார். இது தொடர்பாக ஜூனியர் விகடனுக்கு அவர் அளித்த செவ்வி வருமாறு...**

### வாக்குமூலங்கள் திருத்தப்பட்டனவா?

**கேள்வி:** *பேரறிவாளனின் வாக்கு மூலம் முழுமையானது அல்ல. அதை நான் சரியாகப் பதிவு செய்யவில்லை என்று சி.பி.ஐ. அதிகாரி தியாகராஜன் கூறியுள்ளார்; உங்களிடமும் தியாகராஜன் தான், வாக்கு மூலம் பெற்றாரா?*



### நிர்வாணமாக்கப்படுவாய் என மிரட்டல்

**பதில்:** தியாகராஜன் என்னிடம் வாக்குமூலம் வாங்கிய திகதி 1991 ஆம் ஆண்டு, ஆகஸ்ட் மாதம், 8 ஆம் திகதி. அன்று வெளியில் பலத்த காற்றும் மழையுமாக இருந்தது. அன்று முழுவதும் நான் சித்திரவதையின் வேதனை தாங்காமல் இரத்த வாந்தி எடுத்துககொண்டிருந்தேன்.

அப்போது மூன்று மாத கர்ப்பிணி நான். இரவு 8 மணிக்கு என்னை மருத்துவப் பரிசோதனைக்கு அழைத்துச் சென்றனர். அரைமணிநேரம் பரிசோதனை நடைபெற்றது. பின்பு என்னை ஒரு அறைக்கு அழைத்துப் போனார்கள். அங்கு சி.பி.ஐ. அதிகாரி தியாகராஜன் சில காகிதங்களுடன் அமர்ந்திருந்தார். அவற்றில் என்னைக் கையெழுத்துப் போடச் சொன்னார். நான் வெற்றுக்காகிதத்தில் கையெழுத்துப் போட மறுத்தேன். இப்போது நீ கையெழுத்துப் போடவில்லை என்றால், நிர்வாணமாக்கப்படுவாய்; நீ எப்போது கையெழுத்துப் போட சம்மதிக்கிறாயோ அதுவரை நீ நிர்வாணமாகத்தான் இருப்பாய் என்றார்.

இதையடுத்து வேறு வழியே இல்லாமல் தான், நான் கையெழுத்துப் போட்டேன். அதன் பிறகு, அந்தக் காகிதத்தில் அவர்களாக நிரப்பிக் கொண்டதுதான், இன்று உலகத்தின் பார்வைக்கு என்னுடைய ஒப்புதல் வாக்குமூலமாகக் காட்டப்படுகிறது. இதை அடிப்படையாக வைத்துத்தான் எனக்குத் தூக்குத் தண்டனையும் விதிக்கப்பட்டது. இப்படித்தான் தியாகராஜன் ஒப்புதல் வாக்குமூலம் வாங்கினார். இது எதுவும் வெளியில் தெரிந்துவிடக் கூடாது என்பதற்காகத் தான் இந்த வழக்கு விசாரணை முழுவதும் தடா சட்டத்தின் கீழ் நடத்தப்பட்டது.

### சத்தியமாகத் தவறு செய்யவில்லை

**கேள்வி:** *ராஜீவ் காந்தி படுகொலை தொடர்பாக நீங்கள் எந்தத் தவறுமே செய்யவில்லையா? இந்தப் படுகொலை பற்றி உங்களுக்கு எதுவுமே தெரியாதா?*

**பதில்:** சத்தியமாகத் தெரியாது. எனக்கு மட்டுமல்ல என்கணவருக்கும் தெரியாது. தெரிந்திருந்தால், காதலித்துத் திருமணம் செய்த என்னை, அதுவும் நான் கர்ப்பிணியாக இருந்த நிலையில் அவர்களுடன் அனுப்பி இருப்பாரா? அது போல், இப்போது இந்த வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டிருப்பவர்களுக்கும் ஆயுள் தண்டனை கைதிகளாக இருக்கும் யாருக்கும் அந்தச் சம்பவம் பற்றி எதுவும் தெரியாது. நாங்கள் அனைவரும் இந்த வழக்கில் சாட்சிகளாக இருக்க வேண்டியவர்கள். ஆனால், குற்றவாளிகளாக மாற்றப்பட்டு, இன்று தண்டனைக் கைதிகளாக இருக்கின்றோம். அந்தச் சம்பவம் பற்றி தெரிந்தவர்கள் யாரும் இப்போது இல்லை. அவர்கள் இறந்துவிட்டனர். குண்டு வெடிப்பில் ராஜீவ் காந்தி இறந்து பல மணி நேரம் கழித்துத் தான் எனக்கே விவரம் தெரியவந்தது.

### வயர்லெஸ் ஆதாரம்...?

**கேள்வி:** *சி.பி.ஐ. அதிகாரி தியாகராஜன், நளினிக்கு இதுபற்றி தெரியும் என்று வயர்லெஸ் ஆதாரம் ஒன்றைச் சொல்கிறாரே?*

**பதில்:** வயர்லெஸ் பேச்சு சங்கேத வார்த்தைகளால் ஆனது. அந்த சங்கேத வார்த்தைகளை சி.பி.ஐ. உடைத்துப் பார்த்தனர். அதில், பேசிய குரல் சொன்ன விடயம் என்னவென்றால், *ராஜீவ் காந்தி கொலை பற்றிய விடயம் எங்கள் மூன்று பேருக்கு மட்டும்தான் தெரியும். வேறுயாருக்கும் தெரியாது* என்றுதான் வருகிறது. அது சிவராஜன், சுபா, தனு ஆகிய மூவரைத்தான் குறிக்கிறது; என்னை அல்ல. அந்த வயர்லெஸ் தகவலில் ஆபிஸர்... பெண் நம்பிக்கையானவர் என்று என்னைப்பற்றி வருகிறது; ஆனால், நளினிக்குத் தெரியும் என்று எந்த இடத்தலும் அந்தக் குரல் குறிப்பிடவில்லை. ஆனால், தியாக ராஜன் ஏன் இப்படித் திரித்துக் கூறினார் என்பது எனக்குத் தெரியவில்லை.

-ஜூனியர் விகடன்- (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பணத்திற்காகவும் பதவிக்காகவும் அரசியல்வாதிகள் செயற்படுகின்றனர்

**பிரதி அமைச்சர் சரத்குமார தெரிவிப்பு**

(கொழும்பு)

பெரும்பான்மையான அரசியல்வாதிகள் பணத்தை, முன்னிலைப்படுத்தியவர்கள் என மீன்பிடித்துறை பிரதி அமைச்சர் சரத்குமார வீர்ரட்ன தெரிவித்துள்ளார்.

அண்மைக் காலமாக உள்ளூராட்சி மன்றங்களின் வரவு செலவுத் திட்ட தோல்வி தொடர்பில் நீர்கொழும்பில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்று உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

பணத்தின் பின் ஓடும் அரசியல்வாதிகளே அதிகளவில் இன்று அரசாங்கத்திலுள்ளனர.

பணத்திற்காகவும், பதவிக்காகவும் அரசியலை விற்பனை செய்கின்றவர்களின் எண்ணிக்கை உயர்வடைந்துள்ளது.

இவ்வாறான அரசியல்வாதிகளினால் கட்சிக்கோ, நாட்டுக்கோ நன்மை ஏற்படாது என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

## வலுவான அரசியல் கொள்கை அரசியல்வாதிகளிடமில்லை

தற்போதைய அரசியல்வாதிகள் புரோய்லர் கோழிகளுக்கு நிகரானவர்கள் என சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ருவான்வல்ல பிரதேசத்தில நடைபெற்ற கூட்டமொன்றில் பங்கேற்று உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

புரோய்லர் கோழிகள் சுவையிலும் தரத்திலும் குறைந்தவை எனவும், அதே போன்றே இப்போதைய அரசியல்வாதிகள் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வலுவான அரசியல் கொளகைகள்,கோட்பாடுகளை கொண்டவர்கள் நாட்டுக்கு தேவைப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சியின் பின்னர் தற்போது உலகம் காலனித்துவ ஆட்சி முறைமையை பின்பற்றி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

## தேர்தலில் போட்டியிட பொதுவான கூட்டமைப்பு

(கொழும்பு)

பொதுவான ஓர் கூட்டமைப்பை அமைத்து அதன் ஊடாக தேர்தலில் போட்டியிடுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி கவனம் செலுத்தி வருவதாக அக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் இது குறித்து கவனம் செலுத்தப்பட உள்ளது. எதிர்வரும் பொது அல்லது மாகாணசபைத் தேர்தலில் சில கட்சிகளுடன் இணைந்து போட்டியிடுவது தொடர்பிலான யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

தேர்தலில் தனித்து போட்டியிடுவதா அல்லது கூட்டணியாக போட்டியிடுவதா என்பது குறித்து இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இறுதி தேர்தல் வியூகம் பற்றி தீர்மானிக்கவில்லை என அவர் குறிபபிட்டுள்ளார். (அ-2)

# அரசின் பேச்சுக்கான அழைப்பில் வெளிப்படைத்தன்மை இல்லை

## செல்வம் எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

**சர்வதேச அழுத்தங்களின் காரணமாகவே ஜனாதிபதி கூட்டமைப்பிற்கு அழைப்பு விடுத்துள்ளார். அரசாங்கத்தின் செயற்பாடுகளில் வெளிப்படைத்தன்மையில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வட மாகாண சபைக்கு அதிகாரங்களை வழங்கும் வரை அரசாங்கத்தை நம்பத் தயாரில்லை எனவும் அவர் கூறினார்.

இதுவரை காலமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கருத்துக்களையோ வடமாகாண பிரச்சினைகள் தொடர்பிலோ எவ்வித அக்கறையும் காட்டாத அரசாங்கம் இப்போது தமிழ்த்தேசியக கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுடன பேசத் தயாராகியுள்ளதென்றால் அதற்கு சர்வதேச அழுத்தங்களே காரணமாகும்.

இலங்கையில் தமிழர்களுக்கு நடைபெற்ற,இப்போதும இடம்பெற்று வரும் அநீதிகள் தொடர்பில் இன்று சர்வதேச நாடுகள் அறிந்து கொண்டுள்ளன.

நாம் அரசாங்கத்திடம் தனி நாட்டுக் கோரிக்கையையோ, தனிப்பட்ட விசேட உரிமைகளையோ கோரவில்லை. எமது மக்களுக்கான உரிமைகளையும், வட மாகாணத்திற்கான சுதந்திரத்தையுமே கோரி நிற்கின்றோம்.

எனினும் இவ்வளவு காலமும் விளங்கிக் கொள்ளாத எமக்கு நிவாரணம் வழங்காத அரசாங்கம் இப்போது பேச்சு வார்த்தைக்கு அழைப்பதன் நோக்கம் என்ன? சர்வதேசத்தின் அழுத்தமே இதற்குக் காரணம்.

ஜனாதிபதியின் பேச்சிலோ, அரசாங்கத்தின் செயற்பாட்டிலோ எந்தவொரு வெளிப்படையான தன்மையுமில்லை. ஜனாதிபதியின் பேச்சினை நம்பி தமிழ் மக்களை மேலும் காயப்படுத்த நாம் தயாராகவுமில்லை.

மேலும், வட மாகாண சபையினை ஆரம்பித்து நான்கு மாத காலமாகின்றது. எனினும், இன்று வரையில் வட மாகாண சபை தொடர்பிலான பிரச்சினைகளை ஜனாதிபதி தீர்க்கவில்லை.

வட மாகாண தமிழ் மக்களின் வாழ்க்கை இன்றும் இராணுவ அதிகாரத்தின் கீழேயே காணப்படுகின்றது. அனைத்து மக்களாலும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்ட முதலமைச்சரை விடவும் எவரும் ஆதரிக்காத ஆளுநருக்கே அதிக அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.


வட மாகாணத்தில் கோவில்கள், பாடசாலைகள் மற்றும் வீடுகள் உடைக்கப்படுகின்றன. தமிழ் மக்களின் காணிகளை இராணுவத்தினர் அபகரித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

இவை எதையும் இன்று வரையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச கவனத்திற் கொள்ளவில்லை.வட மாகாண சபை இப்போது கேள்விக்குறியானதொரு நிலையில் உள்ளது.

ஜனாதிபதி எம்முடன் பேச்சுவார்த்தைக்கு தயாராக முன்னர் வட மாகாணத்தின் பிரதான பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும். வெகு விரைவில் ஆளுநரையும், இராணுவத்தையும் வெளியேற்றி வடக்கில் சிவில் ஆட்சியினை அமைக்க வேண்டும்.

வடக்கு மாகாண தமிழ் மக்களுக்கான உரிமைகளை வழங்கி, சுதந்திரமானதொரு வாழ்க்கையினை ஏற்படுத்தி வட மாகாண சபைக்கான அதிகாரங்களை வழங்கும் வரையில் நாம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அரசாங்கத்தினை நம்பப் போவதில்லை.

அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தையிலும் எவ்வித நம்பிக்கையுமில்லை என்றார். (அ-2)



அலியான்ஸ் காப்புறுதி நிறுவனத்தினரால் பொதுக் காப்புறுதிக்குரிய கொடுப்பனவாக ஒரு இலட்சத்து 52 ஆயிரத்து 521 ரூபாவை நடராஜா சத்திஜேந்திரனுக்கு நிறுவனத்தின் பிராந்திய முகாமையாளர் கே.சிறிராம் வழங்குவதையும் அருகில் உதவி முகாமையாளர் வி.சர்மிலன் நிற்பதையும் படத்தில் காணலாம்.

(படம்:- புன்னாலைக்கட்டுவன் செய்தியாளர்)

## விபத்துச் சம்பவத்தால் அங்கவீனம் அடைவது அதிகரித்துள்ளது

நாட்டில் 30 வருட யுத்தத்தினால்வலது குறைந்தவர்களைப் பார்க்கினும் கூடுதலானோர் வாகன விபத்துக்களால் அங்கவீனர்களாவதாக கண்டி வைத்தியசாலையின் அங்க முறிவு சத்திர சிகிச்சை நிபுணரான டாக்டர் காமினி எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

ஒரு நாளில் பல்வேறு வயது மட்டத்தினருள் ஒன்பது பேர் வரை மரணிப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

இலங்கையில் வருடாந்தம் வாகன விபத்துக்களில் 2 ஆயிரத்து 500 பேர் வரை மரணிக்கின்றனர். 10 ஆயிரம பேர்வரை அங்கவீனமாகின்றனர்

யுத்தத்தில் வருடாந்தம் 4 ஆயிரம் பேர் அங்கவீனர்களாகினர். வாகன விபத்துக்களால் அங்கவீனமானோர் இதனை விடக் கூடுதல் என்றும் அவர் தெரிவித்துள்ளார். யுத்தம், டெங்கு ஆகியவற்றால் ஏற்பட்ட சேதத்தையும் தாண்டி வாகன விபத்துக்கள் முதலிடம் வகிக்கின்றன.

வயதுகுறைந்தோர்வியத்தில் அரசாங்கம் 15 முதல் 20 மில்லியன் ரூபாவைச் செலவிடுகிறது.15 வயதுக்கும் 55 வயதுக்கும் இடைப்பட்டோரே இத்தகைய விபத்துக்களில் பலியாகின்றனர்.

ஒட்டு மொத்தமாகப் பார்க்கும போது மரணமாகுவோரின் எண்ணிக்கை 75 வீதமாகும என்றும் அவர் தெரிவித்தார். கண்டி மாவட்ட இணைப்புக் குழுக்கூட்டத்தில்இவ்விபரங்களை வெளியிட்ட டாக்டர் ஏக்கநாயக்க வீடியோ காட்சி கள் சகிதம் விபத்துக்கள் தொடர்பாக விபரித்தார். (அ-2)

## இலங்கை தொழிற்சந்தையில் இந்தியர்களின் ஊடறுப்பு

(கொழும்பு)

இலங்கையின் தொழிற் சந்தையில் இந்தியர்களின் ஊடறுப்பு அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இலங்கையின் வயல்களில் இந்தியர்கள் கடமையாற்றி வருவதாகவும், ஆளணிப் பற்றாக் குறை காரணமாக இவ்வாறு இந்தியர்கள் இலங்கையில் கடமையாற்றி வருவதாகவும் குறிப்பிடப்படுகிறது.

அறுவடை நடவடிக்கைகளில் தங்களது உழைப்பை வழங்கி இந்தியர்கள் நாடு திரும்புவதாகத் தெரிவிக்கப்படுகிறது, இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் அதிகளவான இந்தியர்கள் விவசாய நிலங்களில் கடமையாற்றி வருவதாகக் குறிப்பிடப்படுகிறது, சுற்றுலா விசாகளின் மூலம் இவர்கள் சட்ட விரோதமான முறையில் நாட்டுக்குள் பிரவேசிப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

## சாரதாதேவியின் ஜெயந்தி விழா

(யாழ்ப்பாணம்)

அன்னை ஸ்ரீ சாரதா தேவியின் 161 ஆவது ஜெயந்தி விழா இன்று செவ்வாய்க் கிழமை மாலை 4 மணிக்கு இல,17, மருதனார்மடம் வீதி, உரும்பிராய் சந்தி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இராமகிருஷ்ண மிஷன் நலன்புரி நிலையத்தில் நடைபெறும்.

இதன்போது அறநெறி பாடசாலை மாணவர்களின் உரை, பேச்சு என்பன இடம் பெறும். (அ-2)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மண்டேலாவின் வழியை பின்பற்றுவதே இலங்கைக்கு உரிய தீர்வைத்தரும்

## தென்னாபிரிக்க உயர்ஸ்தானிகர் தெரிவிப்பு

(கொழும்பு)

**இலங்கையில் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் நல்லிணக்க முயற்சிகள் பாராட்டப்பட வேண்டியவை. எனினும் அதற்காக இலங்கையின் நல்லிணக்கம் தொடர்பில் வித்தை காட்டும் பதில்களை எம்மால் வழங்க முடியாது என்று தென்னாபிரிக்கா தெரிவித்துள்ளது.**

நல்லிணக்க நடவடிக்கைகள் தொடர்பில் இலங்கையின் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பணிகள் சிறந்தவை.

எனினும் இன்னும் உண்மை மற்றும் நல்லிணக்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என இந்தியா மற்றும் இலங்கைக்கான தென்னாபிரிக்காவின் உயர்ஸ்தானிகர் ஜியோப் டொய்ட்ஜ் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் ஆங்கில பத்திரிகை ஒன்றுக்கு செவ்வியளித்த அவர்,

தென்னாபிரிக்காவின் தலைவர் நெல்சன் மண்டேலாவின் வழியை பின்பற்றுவதே இலங்கைக்கு உரிய தீர்வை பெற்றுத்தரும் என்று தெரிவித்துள்ளார்.

நெல்சன் மண்டேலேவின் செயற்பாடுகள் இல்லையெனில் தென்னாபிரிக்காவில் நல்லிணக்கத்தை எதிர்ப்பார்த்திருக்க முடியாது. எதிரியுடன் பேசுவதற்கான வாய்ப்புக்களை உருவாக்கிகொண்டதன் மூலமே பிரச்சினைக்கு தீர்வைக்காண முடிந்தது. அதனை ஒரு போதும் மாற்றமுடியாது என்றும் ஜியோப் குறிப்பிட்டு ள்ளார்.

தென்னாபிரிக்காவில் இன்று தேவையானது சமாதானமே என்று குறிப்பிட்டார்.

எனவே, இலங்கையிலும் இன்று அதுவே தேவையாக உள்ளது. மன்னிப்பு என்ற விடயமே எதற்கும் தீர்வை தரும்.

போர்க்குற்றங்கள் மற்றும ஏனைய குற்றங்களுக்காக சர்வதேசத்தின் விசாரணைகளுக்கோ அல்லது ஏனைய சட்ட அம்சங்களுக்கோ செல்ல தேவையில்லை.

தென்னாபிரிக்காவில் உள்ளக ரீதியில் அமைக்கப்பட்ட உண்மையை கண்டறியும் விசாரணைகளின் போது இந்த அனைத்து விடயங்களுக்கும் தீர்வுகள் காணப்பட்டன.

எல்லா பிரச்சினைகளுக்கும் உள்ளூரில் உள்ள சட்டங்களின் அடிப்படையில் தீர்வுகள் காணப்பட்டன. இன்று தென்னாபிரிக்கா சமாதானமாக இருக்கிறது என்று ஜியோப் தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்காவில் ஆட்சி மாற்றங்களுக்காக பல சுற்றுப் பேச்சுக்கள் இடம் பெற்றன. அதில் பல சுற்றுக்கள் தோல்வியடைந்தன.

எனினும் தொடர்ந்தும் அயராது மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளின் அடிப்படையிலேயே தென்னாபிரிக்காவில் தீர்வுகள் காணப்பட்டன. மண்டேலேவும் சிறையில் இருந்து விடுதலை செய்யப்பட்டார். இந்த விடயங்களை இலங்கையால் ஏன் நடைமுறைப்படுத்த முடியாது என்று ஜியோப் கேள்வி எழுப்பினார்.

இலங்கையை பொறுத்தவரையில் நடுநிலையாளர்களை அல்லது சமாதானம், நல்லிணக்கம் தொடர்பாக பேசுபவர்களை குறி வைத்து விமர்சனம் செய்வது, கட்டுரை எழுதுவது போன்ற அம்சங்கள் நிறுத்தப்பட வேண்டும்.

அவையே சமாதான முன்னெடுப்புக்களுக்கு பாதமாக அமைந்து விடுகின்றன. உண்மை மற்றும் நல்லிணகத்தை கண்டறியும் முன்னர் இலங்கையில் வரலாற்றை திரும்பி பார்க்க வேண்டும். இதன்போது உண்மையை உணர்ந்து கொள்ள முடியும்.

இலங்கையை பொறுத்த வரை உண்மை மற்றும் நல்லிணக்கம் தொடர்பான விடயங்களை உரிய முறையில் செயற்படுத்த வேண்டும். இதன்போது குறைகள் காணப்படுமாயின் சர்வதேச விமர்சனங்களையும் அழுத்தங்களையும் தவிர்க்க முடியாது.

இலங்கையை பொறுத்தவரை சில விடயங்கள் தற்போது உரிய முறையில் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன.

எனவே, எதுவும் பிழையாக நடக்கிறது என்று கூறுவதற்கு தமக்கு தகுதியில்லை என்றும் தென்னாபிரிக்க உயர்ஸ்தானிகர் ஜியோப் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் உண்மை மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான உதவி கோரப்பட்டுள்ளது. இதன அடிப்படையில் தென்னாபிரிக்கா உலக தமிழர்பேரவை, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மற்றும் இலங்கை அரசாங்கத்துடன் தொடர்புகளை கொண்டிருக்கிறது.

இதன் ஒரு கட்டம் எதிர்வரும் ஜனவரி மாதத்தில் இடம்பெறும் என்றும் ஜியோப் எதிர்வுகூறியுள்ளார். (அ-2)

# மக்களின் பலம் இருக்கும்வரை எமது பணிதொடரும்-மாவை எம்.பி.

(கொழும்பு)

நாட்டின் பல பாகங்களிலும் பிரதேச சபைகளின் வரவு செலவுத்திட்டங்கள் தோல்வியடைந்து வருவதனை அண்மைக் காலமாக அவதானிக்கக் கூடியதாக உள்ளதாக த.தே. கூட்டமைப்பின் செயலாளர் நாயகம் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

அம்பாறை மாவட்டத்திற்கு திடீர் விஜயமொன்றை மேற்கொண்டு நேற்று முன்தினம் நாவிதன்வெளி பிரதேசத்திற்கு வருகைதந்து பிரதேசசபை தொடர்பாகவும் கட்சியின் எதிர்கால திட்டங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடினார்.

இக் கூட்டத்தில் தொடர்ந்து உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடமாகாண சபையின் ஒரு பிரதேசத்திற்கான வரவு செலவுத்திட்டம் தற்போது எமது கட்சியின் செயற்பாட்டினால் வெற்றி காணப்பட்ட நிலையில் ஏனை பிரதேச சபைகளின் வரவு செலவுத் திட்டங்களும் வெற்றியடைய வைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம்.

எதிர்வரும் காலங்களில் பிரதேச சபைகளின் வரவு செலவுத் திட்டத்தையும் வெற்றியடைய வைப்பதற்கான நடவடிக்கைகளை கட்சி ஆதரவாளர்களுடன் இணைந்து மேற்கொண்டு வருகின்றோம்.

எமது கட்சி இந்த நாட்டில் ஒரு ஜனநாயகம் உடைய கட்சி. திடீரென எந்த நடவடிக்கைகளையும் தன்னிச்சையாக எடுக்க முன்வராது என்பதனை அனைவரும் புரிந்து நடக்கவேண்டிய தேவைப்பாடு உண்டு.

அரசாங்கத்தினால் திணிக்கப்பட்ட அனைத்து தேர்தல்களிலும் எமது மக்கள் எம்முடன் இருந்து எமது கட்சிக்காகவும், தமிழ்த் தேசியத்திற்காகவும் ஜனநாயகமான முறையில் தமக்குள்ள வாக்குரிமையைப் பயன்படுத்தி எம் மினத்தின் பலத்தை உலகறியச் செய்திருக்கின்றார்கள்.

இதனைப் பொறுத்துக் கொள்ள முடியாத அரசாங்கம் எமது கட்சி உறுப்பினர்களை தம்பக்கம் இணைப்பதில் குறியாக இருந்து செயற்பட்டார்கள்.

எமது இனம் அடக்குமுறைகளுக்குள் இருந்து வாழும் சமூகம். இதற்காக இழந்த இழப்புக்கள் ஏராளம் என்றே கூறமுடியும். வடமாகாண சபையை பொறுத்தவரையில் எமது மக்கள் முழுக்க முழுக்க இராணுவ அடக்குமுறைகளுக்குள் இருந்து கொண்டே தமிழ்த் தேசியத்தை கட்டிக்காத்து அதிகளவான உறுப்பினர்களை தெரிவு செய்து வடமாகாண சபையையும் கைப்பற்றி இருக்கின்றார்கள் என்றால் அது மக்களின் முழுப்பலத்தின் வெளிப்பாடே என்றுதான் கூறமுடியும் என்றார். (அ-2)

# விருது வழங்கி கௌரவிப்பு



(யாழ்ப்பாணம்)

வட்டு. மேற்கு வட்டுக்கோட்டையைச் சேர்ந்த கவிஞர் வல்லிபுரம் யோகானந்த சிவம் அண்மையில் அரசினால் கலா பூஷணம் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். (அ-2)



அகில இன நல்லுறவு ஒன்றியத்தினால் சமூக சேவையாளர்களை கௌர விக்கும் வகையில் வழங்கப்படும் சாம ஸ்ரீ தேச கீர்த்தி விருது யாழ். மாவட்டத்தின் சுதுமலை வடக்கைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை தவசீலன் என்பவருக்கு வழங்க ப்பட்டுள்ளது.

கடந்த 23 ஆம் திகதி திருகோணமலை சென்.மேரிஸ் கல்லூரியில் நடைபெற்ற இந்நிகழ்வில் கிழக்கு மாகாண முதலமைச்சர் அல்-ஹாஜ் நஜீப் ஏ.மஜீத் இவருக்கான விருதை வழங்கினார். (அ-2)



வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனமும் மானிப்பாய் பரிஷ் லியோக் கழகமும் இணைந்து நடத்திய பார்த்தீனியம் ஒழிப்பு நடவடிக்கையின் போது...

# சவாரி விலங்கியல் பூங்கா அம்பாந்தோட்டையில் அமையும்

(அம்பாந்தோட்டை)

அம்பாந்தோட்டை மாவட்டத்தின் ரிதீகம பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டு வரும் இலங்கையின் முதலாவது சவாரி விலங்கியல் பூங்காவின் முதற்கட்ட நிர்மாணப் பணிகள் பூர்த்தியாகியுள்ளன.

இதனடிப்படையில் ஆபிரிக்க சிங்கங்களுக்கான வலயத்தின் நிர்மாணப் பணிகள் பெருமளவில் நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன், அடுத்த வருட ஆரம்பத்தில் பொதுமக்கள் பார்வையிடுவதற்காக திறக்கப்படவுள்ளதாக இலங்கை தேசிய விலங்கியல் பூங்கா பணிப்பாளர் அனுர டி சில்வா தெரிவித்தார்.

சுமார் 500 ஏக்கரில் இந்த சவாரி விலங்கியல் பூங்கா நிர்மாணிக்கப்பட்டு வருவதோடு இதற்காக ஆயிரத்து 600 மில்லியன் ரூபா செலவிடப்பட்டு வருகிறது.


இந்த விலங்கியல் பூங்காவில் ஆபிரிக்க, ஆசிய, அவுஸ்திரேலிய சிங்கங்கள் மற்றும் சிறிய விலங்குகளுக்காக வலயங்கள் பிரிக்கப்பட்டுள்ளன.

இந்தச் சவாரி விலங்கியல் பூங்காவில் சிங்கங்கள், புலிகள், சிறுத்தை இனங்கள், வேட்டை நாய்கள் உட்பட ஆசிய மற்றும் ஆபிரிக்க நாடுகளைச் சேர்ந்த விலங்குகளை காணமுடியும் எனவும் அவர் கூறினார்.

அத்துடன் ஒரு விலங்கியல் வைத்தியசாலை மற்றும் அதிகாரிகளுக்கான இரண்டு வாசஸ்தலங்களும் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவுக்கு எதிராக கத்தியை நீட்டிக்கொண்டு தீர்வுக்கு முயல்வது ஆபத்தானது!



ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடருக்கு இன்னமும் நான்கு மாதங்கள் கூட இல்லாத நிலையிலும், அதனை மையப்படுத்திய நகர்வுகள் அனைத்துத் தரப்புகளிலும் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்ற சூழலிலும் போர்க்குற்ற விசாரணை குறித்த விவாதங்கள் உச்சம் பெற்று வருவது இயல்பே.

கடந்த காலங்களிலும் இது போன்ற சூழல் அவதானிக் கப்பட்டதே. என்றாலும், இப்போது சர்வதேச போர்க்குற்ற விசாரணை என்பதற்கு வலுவான வாதங்களை முன்வைப்பதற்கான வாய்ப்புகள் அதிகரித்துள்ளன.

போர் முடிவுக்கு வந்து நான்கரை ஆண்டுகள் முழுதாக முடிந்துள்ள நிலையில் போர்க்குற்றங்கள் தொடர்பான குற்றச்சாட்டுகளை விசாரிக்க அரசாங்கம் இதுவரை காத்திரமான சுதந்திரமான எந்த முயற்சிகளையும் மேற்கொள்ளாத நிலையே நீடிக்கிறது.

இது ஒன்றே, இனியும் பொறுப்பதற்கில்லை, சர்வதேச விசாரணை ஒன்றே வழி என்ற முடிவுக்கு சர்வதேச சமூகம் வரவேண்டிய நிலைக்கு முக்கிய காரணமாக உள்ளது.

இந்த நிலையில் ஜேர்மனி யின் ப்ரிமென் நகரில் அண்மையில் கூடிய நிரந்தர மக்கள் தீர்ப்பாயத்தில் நடத்தப்பட்ட விசாரணையில், இறுதிக் கட்டப்போரில் இலங்கை அரசாங்கம் இனப்படு கொலைகளை செய்ததாகவும் இதற்கு அமெரிக்கா, இந்தியா உள்ளிட்ட பல நாடுகள் உடந்தையாக இருந்ததாகவும் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கத்தை போர்க் குற்ற விசாரணை நீதிமன்றத்துக்கு இழுக்கப் பல தரப்பினதும் பல்வேறு விதமான முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரையும், போரின் போது நிகழ்த்தப்பட்ட படுகொலைகள் உள்ளிட்ட மனித உரிமை மீறல்களையும் ஒன்றிணைக்கும் முயற்சிகளும் முன்னெடுக்கப்பட்டு வருவதை அவதானிக்கலாம்.

போரின்போது நிகழ்த்தப்பட்ட மீறல்களுக்கு அரசாங்கத்தைப் பொறுப்புக் கூற வைக்கும் முயற்சிகள் எந்தளவுக்கு வெற்றி பெறும் என்பதை அது எந்தக் கண்ணோட்டத்துடன் முன்னெடுக்கப் போகிறது என்பதைப் பொறுத்தே அமையும்.

ஏனென்றால், இது ஒன்றும் உலகின் தனித்து ஒதுக்கப்பட்டுள்ள பிரச்சினை அல்ல.

உலகின் முக்கியமான அதிகார சக்திகள் எல்லாம் தொடர்புபட்டுள்ள ஒரு விவகாரம்.

தமிழர்தரப்பு இந்த விவகாரத்தில் நடந்து கொள்ளும் முறைகளில் எங்கேனும் ஒரு சிறிய தவறு நிகழ்ந்தாலும் கூட ஒட்டுமொத்த பொறுப்புக் கூறல் முயற்சிகளையும் அதல பாதாளத்துக்குள் தள்ளிவிடும். அண்மையில் வடக்கு மாகாண முதல்வர் விக்னேஸ்வரன் ஒரு விடயத்தைக் குறிப்பிட்டிருந்தார்.

யதார்த்தத்துக்கு ஏற்ப இலட்சியங்களை வகுத்துச் செயற்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தியிருந்தார். அது இந்த விடயத்தில் முற்றிலும் பொருந்தத்தக்கதொரு விடயமாகும்.

போரின்போது நிகழ்ந்த, மனித உரிமை மீறல்கள்களுக்கு நேரடிக் காரணமானவர்களை நோக்கி சுண்டு விரல் நீட்டப்படப்போகிறதா அல்லது மறைமுகமாக ஒத்துழைப்பு வழங்கியவர்களை நோக்கியும் குற்றச்சாட்டு நீளப்போகிறதா என்பதை பொறுத்தே இதன் சாத்தியப்பாடு அமையப் போகிறது.

அண்மைக் காலத்தில் இந்தியாவும் இனப்படுகொலையில் கூட்டுக் குற்றவாளி என்று வலியுறுதத்தப் படும் போக்கு தமிழ்நாட்டில் அதிகரித்துள்ளது.

தேர்தல் காலத்தில் காங்கிரஸ் கட்சியை பழவாங்கும் நோக்கில், உள்ளூர் அரசியல் சக்திகள் மேற்கொள்ளும் இந்த முயற்சிகளை புலம்பெயர் தமிழர்களில் ஒரு பகுதியினர் கைதட்டி வரவேற்பதைக் காண முடிகிறது.

இங்கு காங்கிரசைத் தோற்கடிப்பது என்பது வேறு விடயம். இந்தியாவைக் குற்றவாளியாக நிறுத்துவதென்பது வேறுவிடயம்.

ஆனால், இந்த இரண்டையும் போட்டுக் குழப்பிக் கொண்டு மேற்கொள்ளப்படும் முயற்சிகள் ஜெனீவாவில் தமிழர் தரப்புக்கு பாதிப்புகளைத் தரக்கூடியது என்பதை பலரும் நினைவில் கொள்ளவில்லை.

மன்னாரில் நெல்சன் மண்டேலாவின் நினைவு நிகழ்வில் தமிழரசுக் கட்சியின் இளைஞரணி பிரமுகர் ஒருவர் உரையாற்றியபோது இந்தியாவும் போர்க்குற்றங்களுக்குப் பொறுப்புக் கூறவேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார்.

அதனை தமிழ் இணைய ஊடகங்கள் பலவும் முக்கிய செய்தியாக வெளியிட்டிருந்தன.

ஆனால், அது எந்தளவுக்கு போர்க்குற்ற விசாரணையைப் பல வீனப்படுத்தும் என்பதையிட்டு பெரிதாக யாரும் சிந்தித்ததாகத் தெரியவில்லை.

விடுதலைப்புலிகளுக்கு எதிரான போரை முன்னிலைப்படுத்தி அதனை நடத்திய இலங்கை அரசாங்கத்தையும் அதற்கு உடந்தையாக இருந்த நாடுகள், நபர்களையும் சர்வதேச அளவில் குற்றவாளிகளாக்க தமிழர் தரப்பு எத்தகைய முயற்சிகளை மேற்கொண்டாலும் அது பலிக்கப்போவதில்லை.

ஏனென்றால், புலிகளுக்கு எதிரான போருக்கான நியாயப்பாடுகளை உலகம் இன்னமும் உண்மையானதாகவே ஏற்றுக்கொள்கிறது.

அது தவறாக முன்னெடுக்கப் பட்ட போர் என்ற கருத்து உலகின் எந்தவொரு நாட்டிடமும் எற்படவில்லை. அதனால் தான், த.வி. புலிகள் இயக்கத்தின் இராணுவ வல்லாண்மை முற்றாகவே அழிக்கப்பட்டு போர் முடிவுக்கு வந்து நான்கரை ஆண்டுகளுக்குப் பின்னரும் அந்த இயக்கத்தின் மீது தடைவிதித்துள்ள 32 நாடுகளில் ஒன்றுகூட அதை நீக்க முனையவில்லை.

அத்துடன் போரின்போது நடந்த மீறல்களுக்குப் பொறுப்புக் கூற வேண்டும் என்ற அரசாங்கத்தை வலியுறுத்தும், அரசியல் தீர்வுக்கு வலியுறுத்தும் அமெரிக்கா, இந்தியா, போன்ற நாடுகள் கூட ஏதோ ஒரு வகையில் இந்தப் போருக்கு ஆதரவு அளித்துள்ளன.

அமெரிக்கா கொடுத்த தகவல்களின் மூலம்தான் த.வி.புலிகளின் ஆயுதக்கப்பல்கள் மூழ்கடிக்கப் பட்டன. இந்தியா கொடுத்த ஆயுத தளபாடங்கள் மற்றும் போர்க்கப்பல்கள் தான், த.வி.புலிகளுக்கு எதிரான போர் தீவிரம் பெறக் காரணமாயின.

எனவே, விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரை நடத்திய, அதற்கு ஆதரவளித்த அல்லது உடந்தையாக இருந்த நாடுகளையெல்லாம், சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டும் என்று எதிர்பார்ப்பது இன்றைய நிலையில் மிகையானது.

அத்தகைய எதிர்பார்ப்பு ஒரு போதும் நிறைவேறப் போவதில்லை.

அத்தகையதொரு முயற்சியில் எவரேனும் இறங்கினால், அதனை ஒரு நாடும் ஆதரிக்கப் போவதுமில்லை. ஆனால், அரசாங்கமோ மிகத் தந்திரமாக இந்தப் போர்க் குற்ற விவகாரத்துக்குள் இந்தியாவையும் இழுத்து வரும் முயற்சியில் இறங்கியுள்ளது.

அதாவது, இந்தியப் படைகளும் தமிழர்களைப் படுகொலை செய்துள்ளதான கருத்தகளையும், ஆதாரங்களையும் அரசாங்கம் மறைமுகமாகவும் வெளப்படையாகவும் முன்வைக்கத் தொடங்கியுள்ளது. இது ஜெனீவாவில் அமெரிக்காவின் முயற்சிகளுக்கு ஆதரவளித்து வரும் இந்தியாவை அதிலிருந்து விலக வைப்பதற்கான ஒரு நகர்வு என்பதே உண்மை.

இத்தகைய கட்டத்தில் புலிகளுக்கு எதிரான போரை மையப்படுத்தி, அதில் சம்பந்தப்பட்ட தரப்புகளை சர்வதேச விசாரணைக்கு இழுப்பதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சிகள் ஒருபோதும் வெற்றி பெறப் போவதில்லை. அதே வேளை, போரின் போது நிகழ்ந்த மீறல்கள், குற்றங்களை விசாரிப்பதற்கு வலியுறுத்தும் முயற்சிகளையும் அது பலவீனப்படுத்தி பின்வாங்க வைத்துவிடும். போரின் இறுதிக்கட்டத்தில் நிகழ்ந்த மீறல்களுக்கு பொறுப்புக் கூறவைக்கும் முயற்சிகள் தான், சர்வதேச அளவில் வலுவுடன் முன்னெடுக்கப் படுகின்றன.

அதை பலவீனப்படுத்த அரசாங்கம் தன்னாலான முயற்சிகளை மேற்கொண்டுவருகிறது. அத்தகையதொரு முயற்சிதான் இந்தியாவும் பொறுப்புக்கூற வேண்டும் என்ற கருத்தாகும்.

பொறுப்புக் கூறல் விவகாரத்தில் மட்டுமன்றி, இனப்பிரச்சினைக்கான அரசியல்தீர்வு உள்ளிட்ட எல்லா விடயங்களிலுமே, இந்தியா முக்கியமானதொரு பாத்திரத்தை வகிக்கிறது.

இந்தியாவுக்கு எதிராக, கத்தியை நீட்டிக் கொண்டு ஒரு போதும் இலங்கையில் நிலையான அமைதியை உருவாக்கவோ, தமிழருக்கான ஒரு தீர்வைப் பெற்றுவிடவோ முடியாது. ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் இந்த விடயத்தில் முழுமையான கருத்து ஒருமைப்பாடு இருப்தாகத் தெரியவில்லை.

யதார்த்தத்தையும், பூகோள அரசியல் சூழலையும் புரிந்து கொள்ளாமல், எந்தத் தரப்பு எத்தகைய வலுவான முயற்சிகளை மேற்கொண்டாலும் அது பயனற்றுப் போகும்.

குறிப்பாக விடுதலைப்புலிகளையே அதற்கு உதாரணமாக கொள்ளலாம். விடுதலைப்புலிகள் கூட, கடைசியில் ஒரு கட்டத்தில் இந்தியாவின் தயவுக்காக, அதன் ஆதரவுக்காக ஏங்கினார்கள் என்பது வெளிப்படை. அதுபோல தான் அமெரிக்கா விடயத்திலும்.

சர்வதேச சக்திகளின் ஆதரவுடன்தான், தமிழர்கள் இனி தமக்கான எந்தத் தீர்வையும் வென்றெடுக்க முடியும் என்ற சூழல் ஏற்பட்டுவிட்ட நிலையில், முடிந்தளவுக்கு வெளியுலகில் நண்பர்களை சம்பாதித்துக் கொள்வதே புத்திசாலித்தனமான அணுகுமுறையாக இருக்கும்.

-சுபத்ரா-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரோக்கியத்தில் தின சரியையின் பங்கு

ஆரோக்கியம் எனும் போது உடல் மட்டுமின்றி மனமும் கருத்திற் கொள்ளப்படுகிறது. நாம் ஆரோக்கியமாக வாழ வேண்டுமாயின் தினசரியைகளை சரியான முறையில் கடைப்பிடித்தல் இன்றியமையாதது.

சித்த மருத்துவத்தில் தின சரியைக்கு மிக முக்கிய இடம் கொடுக்கப்பட்டுள்ளதை பல நூல்கள் சான்று பகிர்கின்றன. அதாவது தினசரியை எனும் போது தினமும் நமது பழக்கவழக்கங்கள், செயல்கள் என்பவற்றினைக் குறிக்கின்றது. இதனையே தனிநபர் சுகாதாரம் எனக் கூறலாம். இதில் ஒவ்வொரு தனிநபருமே தமது சுகாதாரத்தினை மேம்படுத்துவதில் தீவிர கவனம் செலுத்த வேண்டும். இத்தின சரியைகளில் முக்கிய சிலவற்றினைப் பற்றி கவனிப்போமாகில்

1. தோல்:- இதனைப் பேணுவதற்காகவே எமது முன்னோர் தினமும் நீராவி/குளித்து, தோய்த்து உலர்ந்த ஆடை அணிந்து கோயிலுக்குச் செல்ல வேண்டும் என்று கூறினார்கள். அதாவது கடவுளின் மூலமாக சுகாதாரத்தினை நிலைநிறுத்தியுள்ளார்கள். குளித்தல்/ நீராடுவதற்காக பேபி சோப் (Baby soap) பயன்படுத்துதல் சிறந்தது. இதனை விட மஞ்சளை பயற்றம்மா அல்லது கடலை மாவுடன் கலந்து பயன்படுத்துவதனாலும் கிருமித்தொற்று, தோல் வியாதிகளில் இருந்து விடுபடமுடியும். அத்துடன் தோல் வியாதி உள்ளவர்கள் (Baby soap) மாத்திரமே பயன்படுத்த வேண்டும். புளியமிலை அவித்த நீரினாலும் கழுவுவதனால் சிறந்த பலன் கிடைக்கும்.

உடைகளை தோய்த்து நேரடிச் சூரிய ஒ ளியில் நன்கு உலர்த்துவதனால் கிருமிகள் கொல்லப்படுகிறது. ஏனையவர்களின் உடுப்புகளை அணிவதைத் தவிர்க்கவும். இதனால் ஏனையவர்களில் காணப்படும் தோல் சம்பந்தமான வியாதிகள் பரவுவதைத் தடுக்கலாம்.

2. கைகள்

கைகளைச் சாப்பிடுவதற்கு முன்பின் , சமைப்பதற்கு முன், மலசல கூடம் சென்ற பின், உணவுகளைக்கையாள முன் என பல்வேறுபட்ட தடவைகள் கட்டாயமாக கழுவல் வேண்டும். இதற்குக் கட்டாயமாக சோப் பயன்படுத்துதல் வேண்டும். கைகளைக் கழுவும்போது சோப்பினை உள்ளங் கைகளில் பூசி நன்கு தேய்த்து பின் புறங் கைகள், விரல் இடைவெளிகள் என்பற்றினையும் நன்கு உரசி (Scrup) கழுவுதல் வேண்டும். கை நகங்களை வாரத்தில் ஒரு தடவையாவது வெட்டுதல் இன்றியமையாதது. அவ்வாறு நகம் காணப்படுமிடத்து நாம் சரியான முறையில்கைகழுவமுடியாது.

நகங்களினுள் காணப்படும் கிருமிகள் எமது உணவு, நீர் என்பவற்றுடன் உடலை அடைந்து வயிற்றோட்டம், பூச்சி என்பன ஏற்பட வாய்ப்பதிகமாகும். சரியான முறையில் கை கழுவுவதற்காக 10-15 செக்கன்கள் போதுமானது. தற்போது இதன் முக்கியத்துவம் அறியப்பட்டுகை கழுவுதல் தினம் (Oct-15) கொண்டாடப்படுகிறது.

3. கால்கள்:-

எம்மில் பலரும் கையிற்கு கொடுக்கப்படும் முக்கியத்துவமானது காலிற்கு வழங்கப்படுவதில்லை. ஆனால் காலிற்கும் அதேயளவு பராமரிப்பு கொடுக்கப்பட வேண்டும். கால் நகங்களும் வாரத்திற்கு ஒருமுறை வெட்டப்படல் வேண்டும்.

காலணிகளை அணிவதனால் கிருமித் தொற்றிலிருந்து விடுபடமுடியும். தினமும் இரவு படுக்கைக்குச் செல்லு முன்னர் இளம் சூடான நீரில்/ புளியமிலை அவித்து இளஞ்சூடான நீரில் சிறிதளவு கறியுப்புச் சேர்த்துக் கழுவுதல் சிறந்தது. இதனால்கால் உளைவு, பித்த வெடிப்பு, கால் விறைப்பு, குதிக்கால் நோ, கிருமித் தொற்று இவற்றிலிருந்து விடுபடமுடியும்.

4. வாய்

கட்டாயமாக இரு தடவைகள் பல்துலக்குதல் வேண்டும். அதாவது காலை, இரவு

**Health Care மருத்துவ உலகம்**
**உங்கள் நலம் உங்கள் கைகளில்**

சாப்பிட்டபின் படுக்கைக்குச் செல்லும்போதும் பல்துலக்குவதுடன் ஒவ்வொரு முறை சாப்பிட்ட பின்னரும் நன்கு வாய் கொப்பளிக்க வேண்டும். பற்தூரிகை அல்லது வேம்பு, ஆல் போன்றவற்றின் குச்சிகளால் தீட்டுதல் வேண்டும்.

தீட்டும் போது மேலிருந்து கீழாகத் தீட்டப்படவேண்டும். அதை விடுத்து கைகளினால் தீட்டுமிடத்து பல் ஈறுகளினுள் கிருமிகள் காணப்பட்டு வாய் துர்நாற்றம், பல் வியாதிகள், முரசு வியாதிகள் என்பன ஏற்பட வாய்ப்பதிகமாகும். பல் தூரிகைகள் வாங்கும்போது அவற்றின் தன்மை கவனத்தில் எடுக்கப்படவேண்டும். அதாவது பல் தூரிகைகளில் கடினமானது (Hard), இடைநிலையானது (Medium), மென்மையானது (Soft) குறிப்பிடப்பட்டிருக்கும்.

பொதுவாக வளர்ந்தவர்கள் Medium பயன்படுத்துதல் சிறந்தது. எனினும் பற்களில் காவி, படிவுகள் காணப்படுமிடத்து Hard பயன்படுத்தலாம். சிறியவர்களும் முரசு கரைதல், பல் கூசுதல் உள்ளவர்களும் Soft பயன்படுத்துதல் சிறந்தது.

பற்தூரிகை ஒன்றினை 3-4 மாதங்களுக்கு ஒரு முறை மாற்றுதல் வேண்டும். இதற்காக தினமும் 3-4 நிமிடங்களை ஒதுக்கி வாய்ச் சுகாதாரத்தை மேம்படுத்த முடியும்.

5. தலை

எமது பிரதேசம் வெப்பமான பிரதேசமாகையால் தினமும் சிறிதளவு எண்ணெய் தேய்த்து தலையினை மர்த்தனம் (Massage) செய்து விடவும்.

இதனால் எமது உடம்பு குளிர்மை அடைவது மட்டுமன்றி தலைமயிர் உதிர்தல், தலையிடி, கண் எரிவு போன்றவற்றிலிருந்து விடுபடமுடியும். அத்துடன் வாரத்தில் 1-2 தடவைகள் தலை கழுவுதல் வேண்டும். தலைமுழுகுவதற்காக சீயாக்காய், இலந்தை இலை, கற்றாழைச் சாறு, செவ்வரத்தம் இலை போன்றவற்றைப் பயன்படுத்துதல் சிறந்தது. இளவயதில் . நரை உள்ளவர்கள் மருதோன்றி இலையுடன் கடுக்காய் தோல், தான்றிக்காய், முழுநெல்லிக்காய் என்பவற்றைச் சேர்த்து அரைத்து தேசிப்புளி சேர்த்து தலைமுழுகிவர நிவாரணம் கிடைக்கும்.


தியானம்- யோகா

உடலானது நல்லநிலையில் பேணப்பட்டாலும் மனமானது பாதிக்கப்படுமிடத்து பாரிய நோய்களை ஏற்படுத்திவிடும். அதாவது நித்திரையின்மை, கவலை, மனக் குழப்பம் என்பவற்றைத் தவிர்ப்பதில் தியானம் மிக முக்கிய பங்கு வகிக்கின்றது. எனவே தினமும் 20-30 நிமிடங்களை இதற்காக ஒதுக்கி மனதினை ஒரு வழிப்படுத்துதல் வேண்டும். இதற்காக கூட்டுப்பிரார்த்தனையில் ஈடுபடல், திருமுறை ஓதுல், தேவாரம், கவசம் என்பன படித்தல் சிறந்த வழிகளாகும்.

இதேபோலவே யோகாசனமும் எமது மனத்தைச் சமநிலைப்படுத்தும் அதே நேரம் உடல் உறுப்புக்களையும் நல்ல நிலையில் பேண உதவுகிறது. எனினும் யோகாசனத்தை ஒரு சிறந்த குருவிடம் பயின்று அதன் வழி செய்தல் சிறந்தது.

மேற்கூறப்பட்ட பழக்க வழக்கங்களை /தினசரியைகளையாவது எமது வாழ்வில் கைக்கொண்டு ஆரோக்கியமாக வாழ முயற்சிப்போமாக.

நன்றி:- அருள்ஒளி



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சமூகவியல் பேராசிரியரும் முன்னாள் துணை வேந்தரு மான என். சண்முகலிங்கன் எழுதிய அறிவின் சமூகவியல் சிந்தனைகள் என்ற நூல் வெளியீட்டு விழா அண்மையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் நூலின் முதற்பிரதியை நூலாசிரியர் என். சண்முகலிங்கன் வழங்க ஹரிகணன் பிறிண்டேர்ஸ் உரிமையாளர் சிவஞான சுந்தரம் ராஜ்குமார் பெற்றுக் கொள்வதையும் வெளியீட்டுரையை இராஜேஸ்கண்ணன் நிகழ்த்துவதையும் படங்களில் காணலாம்.

# பௌத்த தலைவர்களின் ஏகமனதான கோரிக்கையை ஏற்கத் தயார்

## சஜித் எம்.பி. தெரிவிப்பு

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவச் சபையில் இணைந்து கொள்ளுமாறு பௌத்த தலைவர்கள் ஏகமனதான கோரிக்கையை முன்வைத்தால் அதனை தான் ஏற்க தயார் என நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

சிறிகொத்தாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் 55 ஆவது வருடாந்த மாநாட்டில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

தலைமைத்துவச் சபையை தான் ஒருபோதும் நிராகரிக்கவில்லை என்றும் அவர் கூறினார்.

பௌத்த மதத் த்லைவர்களுடன் ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கையின் நிபந்தனைகளை மீறி அதில இணைந்து கொள்ள முடியாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

சஜித் பிரேமதாச மற்றும் தலதா அத்துகோரள ஆகியோர் தலைமைத்துவச் சபையை தொடர்ந்தும் புறக்கணித்து வந்தால் அவர்களுக்கு பதிலாக விஜேதாச ராஜபக்ஷ மற்றும் சுவாமிநாதன் ஆகியோர் அவர்களுக்கு பதிலாக நியமிக்கப்பட வேண்டும் என பௌத்த பிக்குமார் சிலர் நேற்று முன்தினம் ரணில் விக்ரமசிங்கவிடம் வலியுறுத்தியுள்ளனர். (அ-2)

# ஈரான் கடற்படையின் மீது கல்வீச்சு தாக்குதல்

கொழும்பு துறைமுகத்தில் ஈரான் கடற்படையினர் இருவர் மீது கல்வீச்சு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு துறைமுகத்தின் நான்காவது படலைக்கு முன்பாகவுள்ள மணிக்கூட்டுகோபுரத்திற்கு அருகிலே நேற்று முன்தினம் இத்தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அத்துடன் இத்தாக்குதல் சம்பவத்தில் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் ஒருவரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் காயமடைந்த ஈரானியர் ஒருவர் கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இத்தாக்குதல் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை,கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் ஈரானின் இரண்டு நீர்மூழ்கி கப்பல்கள் கொழும்பு துறைமுகத்தில் நங்கூரமிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (அ-2)

# பிரதமராவாரா கோத்தபாய?

தற்போதைய பிரதமரான டி.எம்.ஜயரத்னவை அந்த பதவியில் இருந்து நீக்குவது தொடர்பில் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வரும் அதேவேளை கோத்தபாயவை பிரதமராக நியமிக்கத் திட்டமிட்டுள்ளதாக அரசாங்கத்திற்குள் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவித்தன.

ஹெரோயின் அடங்கிய கொள்கலனை சுங்கத்தின் பிடியில் இருந்து விடுவிக்க பிரதமரின் இணைப்புச் செயலாளர் கடிதம் ஒன்றை அனுப்பிய சம்பவத்தை அடிப்படையாக கொண்டு தற்போதைய பிரதமரான டி.எம்.ஜயரத்னவை அந்த பதவியில் இருந்து நீக்குவது தொடர்பில் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனையடுத்து பிரதமர் பதவியை ராஜபக்ச ஒருவருக்கு வழங்குவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இதற்காக தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக கமலா ரணதுங்கவை இராஜினாமா செய்ய வைத்து ராஜபக்ஷ ஒருவரை நாடாளுமன்ற உறுப்பினராக நியமித்து பிரதமர் பதவியை அவருக்கு வழங்க திட்டமிடப்பட்டுள்ளதாக பேசப்படுகிறது.

கோத்தபாய ராஜபக்ஷவை பிரதமராக்கும் முயற்சியிலேயே அரசாங்கம் ஈடுபட்டுள்ளதாக தெரியவருகிறது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்டோ விபத்து; சாரதி காயம்

(கனகபுரம்)

வட்டக்கச்சி பகுதியில் உழவியந்திரத்தின் சில்லு கழன்று வந்து முச்சக்கரவண்டியுடன் மோதியதில் முச்சக்கரவண்டி சாரதி படுகாய மடைந்த சாரதி படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, நேற்று அதிகாலை 5 மணியளவில் வட்டக்கச்சியிலிருந்து கிளிநொச்சி நோக்கி மண்ணேற்றிக் கொண்டு வந்த உழவியந்திரத்தின் பின் சில்லு கழன்று வந்து முச்சக்கர வண்டியுடன் மோதியுள்ளது.

இதனால் முச்சக்கரவண்டியின் கண்ணாடி உடைந்து சேதமாகியதோடு சாரதி படுகாய மடைந்துள்ளார். அதில் பயணித்தவர்கள் தெய்வாதீனமாக காயமின்றி தப்பியுள்ளனர். அத்தோடு உழவியந்திரம் தடம்புரண்டு வீழ் ந்துள்ளது.

படுகாயமடைந்த சாரதி கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (அ-9-259)

# கொக்கிளாய் முகத்துவாரத்தில் நிரந்தர சிங்கள குடியேற்றம்

## வீடுகள் அமைப்பதற்கும் நடவடிக்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கொக்கிளாய் முகத்துவாரத்தில் அத்துமீறி குடியேறிய சிங்கள மக்களுக்கு நிரந்தர வீடு கட்டிக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதனால் கொக்கிளாயில் சொந்த நிலமுள்ள தமிழ் மக்கள் செய்வதறியாதுள்ளனர்.

இத்திட்டமிட்ட சிங்கள குடியேற்றத்தால் தமது சொந்த நிலங்கள் பறிபோய் விடக் கூடிய நிலை காணப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

1972 ஆம் ஆண்டு காலப் பகுதியில் கொக்கிளாய் முகத்துவார கடற்பரப்பில் மீன் பிடித் தொழில் செய்யும் நோக்கில் சிங்களவர்கள் இப்பகுதியில் தற்காலிகமாக குடியேறி மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டனர்.

காலம்கடந்து செல்லச் செல்ல தற்காலிக குடியேற்றங்கள் நிரந்தர குடியேற்றங்களாக மாறி வந்ததோடு இப்பகுதியில் இருந்த சிங்கள மக்களின் எண்ணிக்கையும் படிப்படியாக அதிகரித்துள்ளது.

தொழில் செய்வதற்கென வந்தவர்கள் இப்பகுதியில் நிரந்தரமாக குடியேறி தற்போது அதிகளவானோர் அங்கு வாழ்கின்றனர்.

இத் தற்காலிக குடியேற்றத்திற்கு அரசாங்கம் நிரந்தர வீடுகளை வழங்கி நிரந்தர குடியேற்றமாக்கவும் திட்டமிட்டு வருகின்றது.

அத்துடன் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் உள்ளடங்குகின்ற கொக்கிளாய் முகத்துவாரத்தை வெலிஓயா பிரதேச செயலர் பிரிவிற்குள் இணைப்பதற்கான நடவடிக்கையும் எடுக்கப்படுகின்றது.

இதனால் முல்லைத்தீவில் பெரும் சிங்கள கிராமம் ஒன்று உருவாவதற்கான வாய்ப்புக்களும் உண்டு எனவும் அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைவிட வடக்கையும் கிழக்கையும் பிரிக்கின்ற கொக்கிளாய் முதல் வவுனியா வரையிலான எல்லைக்காடுகள் சிங்கள குடியேற்றங்களுக்காக அழிக்கப்பட்டு வருகின்றன.

கொக்கிளாயில் சிங்களவர்கள் ஆக்கிரமித்துள்ள காணிக்கு சொந்தமான தமிழர் ஒருவருக்கு வலி.வடக்கில் இராணுவம் ஆக்கிரமித்துள்ள இடத்திலும் காணி உள்ளது.

அவருக்கு இரு இடங்களிலும் காணி யிருந்தும் அதனை உரிமை கொள்ள முடியாத அவலநிலை காணப்படுவதாகவும் சுட்டிக் காட்டப்படுகின்றது. (அ-4)

# ஆழிப்பேரலை நினைவு தினம்

(குருமன்காடு)

வவுனியா பூந்தோட்டம் நரசிங்கர் ஆலய பரிபாலன சபையினரால் 2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட ஆழிப்பேரலையால் உயிர் நீத்தவர்களுக்கான அஞ்சலி செலுத்தும் நிகழ்வு நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9.27 மணிக்கு பூந்தோட்டம் சிறுவர் பூங்காவில் அமைக்கப்பட்ட ஆழிப்பேரலை நினைவு தூபிக்கு முன்னால் நடைபெறவுள்ளது.

இவ் அஞ்சலி நிகழ்வு ஆலய பரிபாலன சபைதலைவர் த.ப்ரதலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது. (அ-9-250)

# சமுர்த்தி வங்கிகளின் கட்டடத் திறப்பு விழா

(சிவநகர்)

கிளிநொச்சி மாவட்டத்தில் சமுர்த்தித் திட்ட நடைமுறைப்படுத்தலில் மற்றுமொரு முன்னேற்பாடாக கரைச்சி பிரதேச செயலகப் பிரிவில் 2 சமுர்த்தி வங்கிகளின் புதிய கட்டட திறப்பு விழா எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

இதனடிப்படையில் காலை 9 மணிக்கு கிளிநொச்சி நகரப் பிரதேசத்திலும் காலை 10 மணிக்கு ஸ்கந்தபுரத்திலும் இச்சமுர்த்தி வங்கிக் கட்டடங்கள் திறந்து வைக்கப்படவுள்ளன.

பிரதேச செயலர் கோபாலப்பிள்ளை நாகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வுகளுக்கு முதன்மை விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார், சிறப்பு விருந்தினராக மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-9-254)

# வலம்புரி செய்தியையடுத்து வைத்தியர் நியமனம்

(பூநகரி)

பூநகரி அரசினர் வைத்தியசாலைக்கு வலம்புரிச் செய்தியையடுத்து நிரந்தர வைத்தியர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இப்பிரதேசத்தில் இரண்டு வருடங்களாக நிரந்தர வைத்தியர் இன்மையால் நோயாளர்கள் கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணத்திலுள்ள வைத்தியசாலைகளிலே சிகிச்சை பெற்று வந்தனர்.

அதுமட்டுமன்றி நோயாளர்கள் உயிராபத்துமிக்க நோய்களின் போது மிக அந்தரங்களை சந்தித்து வந்தனர்.

இந்நிலையில் வைத்தியர்கள் இல்லையெனவும் நிரந்தர வைத்தியர் ஒருவரை நியமிப்பதுடன் அவசியத்தை வலியுறுத்தியும் இப்பத்திரிகை செய்தியினூடாக வலியுறுத்தப்பட்டு வந்தது.

இதனடிப்படையில் பூநகரி பிரதேசத்தை பிறப்பிடமாகக் கொண்ட பஞ்சாட்சரம் கோகிலன் என்ற வைத்தியர், பூநகரி வைத்திய சாலைக்கு நிரந்தரமாக நியமிக்கப்பட்டுள்ளார்.

தற்போது இவ்வைத்தியசாலையில் முதன் முறையாக வாரத்தில் சகல வேலை நாட்களிலும் சிகிச்சை இடம்பெற்று வருகின்றது. (அ-9-84)

வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு:
021 321 0815,
021 567 1532




# பாம்புக்கடிக்கு இலக்கான மூவர் வைத்தியசாலையில்

(குருமன்காடு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் பாம்புக்கடிக்கு இலக்கான 3 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

இதன்படி, முல்லைத்தீவு, மல்லாவிப் பகுதியில் பெண்கள் இருவரும் ஒட்டுசுட்டான் பகுதியில் விவசாயி ஒருவருமாக மூவர் கடந்த சனிக்கிழமை மாலை பாம்புக் கடிக்கு இலக்காகியுள்ளனர்.

மல்லாவிப் பகுதியில் பாம்புக் கடிக்கு இலக்கான பெண்கள் இருவரும் உடனடியாக மல்லாவி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இதேவேளை, ஒட்டுசுட்டான் பகுதியில் பாம்புக் கடிக்கு இலக்கான விவசாயி கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார். (அ-9-250)

# கடற்றொழில் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு இன்று

(கண்டாவளை)

கரைச்சி வடக்கு கடற்றொழிலாளர் சங்க சமாசமும் தர்மபுரம் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கமும் இணைந்து நடத்தும் கடற்றொழில் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு இன்று பிற்பகல் 3 மணிக்கு தர்மபுரம் நெசவு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வு கரைச்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத் தலைவர் கு. அருமைராசா தலைமையில் இடம்பெறவுள்ளது.

இதில் முதன்மை விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி யு.என்.எச்.சி.ஆர். நிறுவனத்தின் தலைமை அலுவலர் மரின் கச்டொம் கச், கண்டாவளை பிரதேச செயலர் த.முகுந்தன், கிளிநொச்சி சேவா லங்கா திட்ட முகாமையாளர் கே. முகுந்தன். கௌரவ விருந்தினர்களாக கிளிநொச்சி மாவட்ட செயலக உதவித் திட்ட பணிப்பாளர் அ.கேதீஸ்வரன், கிளி.கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் சி.தவராசா, கிளி. மாவட்ட கடற்றொழில் நீரியல் வள உதவிப் பணிப்பாளர் இ.ரவீந்திரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ-9-263)

# துன்பத்தை அனுபவித்தாலும் துவண்டு போகவில்லை

## கிளி.மாவட்டத்தில் வர்த்தகப் பிரிவில் முதலிடம் பெற்ற மாணவி


யுத்தத்தால் பத்தாம் தரத்தை கற்க முடியாமல் போனாலும் அடுத்தாண்டு பதினொராம் தரத்தில் இரண்டு தரங்களின் பாட நெறிகளையும் ஒன்றாகக் கற்ற மாணவி பிரதா தெய்வேந்திரம்பிள்ளை மாவட்ட ரீதியாக வர்த்தகப் பிரிவில் முதலாமிடத்தைப் பெற்றுள்ளார்.

இம்மாணவி இராமநாதபுரம் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்றுள்ளார்.

அத்தோடு சிறுவயதில் தாயாரை இழந்த இம்மாணவி சிறிய தாயுடன் வளர்ந்து வந்த நிலையில் வன்னியில்இடம்பெற்ற யுத்தத்தால் பல இடப்பெயர்வுகளையும் சந்தித்தார்.

இவர் கிளிநொச்சி மாவட்டத்தில் கல்வி பயின்று மாவட்ட ரீதியாக வர்த்தகப் பிரிவில் முதலிடத்தைப் பெற்றுக்கொண்டதனூடாக எத்தனை துன்பங்கள் எம்மைத் துளைத்தெடுத்தாலும் நாம் கல்வியில் சளைத்தவர்கள் அல்ல என்பதை வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளார்.

இவர் புள்ளிவிபரவியல் மற்றும் கணக்கீடு ஆகிய பாடங்களில் ஏ தர சித்தியும் பொருளியல் பாடத்தில் பி தரச் சித்தியும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-9-23)



கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச்சங்கத்தினரால் நடாத்தப்பட்ட திருக்குறள் விழாவும் பரிசில் வழங்கும் நிகழ்வும் அண்மையில் இடம் பெற்றது. இதன் போது முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா உட்பட விருந்தினர்கள் வரவேற்கப்படுவதை படத்தில் காணலாம். (படம்:-சிவநகர் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ஜிண்டால் வேட்பாளர் களத்தில்



அமெரிக்காவில் 2016 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள அமெரிக்க தேர்தலில் அமெரிக்க வாழ் இந்தியர் பா.வி.ஜிண்டால் போட்டியிடுவார்.

அமெரிக்காவில் தற்போது ஜனநாயக கட்சியை சேர்ந்த பராக் ஒபாமா 2 ஆவது முறையாக ஜனாதிபதி பதவி வகிக்கிறார். அவரது பதவிக்காலம் எதிர்வரும் 2016 ஆம் ஆண்டில் நிறைவடைகிறது.


அதை தொடர்ந்து நடைபெறும் ஜனாதிபதி தேர்தலில் தற்போதைய எதிர்க்கட்சியான குடியரசு கட்சி வேட்பாளராக பாபி ஜிண்டால் போட்டியிடுவார் என தெரிகிறது.

இவர் அமெரிக்க வாழ் இந்தியர் ஆவார். தற்போது லூசியானா மாகாண ஆளுநராக உள்ளார். இப்பதவியை இரண்டாவது முறையாக தொடர்ந்து வகிக்கிறார்.

அமெரிக்க சட்டப்படி 2 தடவைக்கு மேல் இனி அவர் ஆளுநர் பதவிக்கு போட்டியிட முடியாது.

எனவே, அடுத்த கட்டமாக இவர் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட போவதாக குடியரசு கட்சியை சேர்ந்த செனட்டர் டேவிட் விட்டர் தெரிவித்துள்ளார்.

பாபி ஜிண்டாலின் ஆளுநர் பதவி காலம் வருகிற 2015 ஆம் ஆண்டில் முடிகிறது. அவரை தொடர்ந்து இப்பதவிக்கு டேவிட் விட்டர் போட்டியிடுவார் என தெரிகிறது. (2)



கிறிஸ்துமஸ் பண்டிகையொட்டி உரோமில் உள்ள ஒரு குழந்தைகள் மருத்துவமனைக்கு சென்ற போப் பிரான்சிஸ் அங்கு குடியிருந்த மக்களை சந்தித்து வாழ்த்து தெரிவித்ததைப் படத்தில் காணலாம்.

# தாய்லாந்து அரசுக்கெதிராக மீண்டும் போராட்டம் ஆரம்பம்



தாய்லாந்தில் அரசுக்கு எதிரான போராட்டம் நேற்று முன்தினம் மீண்டும் தொடங்கியது.

தாய்லாந்தில் ஊழல் உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுக்களின் பேரில் அரசுக்கு எதிராக கடந்த ஒரு மாதமாக எதிர்க்கட்சிகள் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தன.

இந்நிலையில், அந்நாட்டு மன்னரின் 86ஆவது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு போராட்டத்தை எதிர்க்கட்சிகள் ஒத்தி வைத்தன.

மன்னர் பூமிபோல் அதுல்யதேஜ், மக்கள் போராட்டத்தைக் கைவிட்டு அமைதியான முறையில் அரசுடன் தீர்வு காண வேண்டும் என வலியுறுத்தினார்.

இதையடுத்து எதிர்வரும் பெப்ரவரி மாதம் 2ஆம் திகதி தேர்தலை நடத்த அரசு முயற்சி மேற்கொண்டுள்ளது.


மேலும், தேசிய சீரமைப்புக்கான திட்டத்தை கடந்த சனிக்கிழமை அறிவித்ததுடன் அனைத்து கட்சிகளும் ஒத்துழைக்கும்படி பிரதமர் வேண்டுகோள் விடுத்தார்.

ஆனால், அரசின் முடிவுக்கு எதிர்ப்பு தெரிவித்த எதிர்க்கட்சிகள் தேர்தலை புறக்கணிக்கப் போவதாக அறிவித்தன.

ஜனநாயகக் கட்சி காலவரையறையற்ற போராட்டத்துக்கு அழைப்பு விடுத்ததன் பேரில், தலைநகர் பாங்காக்கில் ஆயிரக்கணக்கானோர் நேற்றையதினமே திரண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இது குறித்து போராட்டக் குழுத் தலைவர் தாங்க்ஸ்பான் கூறுகையில், இங்கு நடைபெறும் பேரணி அரசுக்கும், பிரதமருக்கும் நெருக்கடியை ஏற்படுத்தும் என்றார். (2)

# நேபாளத்திடமிருந்து மின்சாரம்; இந்தியா பெறுவதற்கு தயார்




நீர் மின்சாரம் தயாரிப்பதற்கான வள ஆதாரங்களைக் கொண்டுள்ள நேபாளத்திடமிருந்து மின்சாரம் வாங்குவதற்கு இந்தியா தயாராக இருப்பதாக மத்திய மரபுசாரா எரிசக்தித்துறை அமைச்சர் பரூக் அப்துல்லா தெரிவித்துள்ளார்.

நேபாளத் தலைநகர் காத்மாண்டுவில் அந் நாட்டில் இந்திய முதலீடுகளைக் கவர்வதற்காக நடைபெறும் வர்த்தகக் கண் காட்சி வெள்ளிக்கிழமை ஆரம்பமானது. இதில் கலந்து கொண்டு அவர் பேசுகையில்,

""இந்தியாவுக்கு மின்சாரத்தை விற்பனை செய்வதன்மூலம்இந்தியாவுடனான வர்த்தகப் பற்றாக்குறையை (ஏற்றுமதியைவிட இறக்குமதி அதிகமாக இருப்பது) சீர்செய்ய முடியும்.

இதனால் இரு நாடுகளும் பலனடைய முடியும்"" என்று தெரிவித்தார். (2)

# பிரேசிலில் பேருந்து விபத்து; 14 பேர் பலி, 20 பேர் காயம்!



பிரேசிலில் இடம் பெற்ற பேருந்து விபத்தில் 14 பேர் பலியாகினர். 20 பேர் காயமடைந்துள்ளனர்.

பிரேசிலின் சவோ பாவ்லோ நகர தேசிய நெடுஞ்சாலையில் இந்த விபத்தில் நேர்ந்துள்ளது.

விபத்து இடம்பெற்ற போது, குறித்த பேருந்தில் 50 பேர் வரையில் பயணித்துள்ளனர்.

சம்பவத்தின் போது காயமடைந்த 20 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பிரேசிலின் தென் பகுதியான குரிடிபா நகரில் இருந்து, ரியோடி ஜெனிரோவிற்கு சென்ற பேருந்தே இவ்வாறு வபத்துக்குள்ளானதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (2)

# தெற்கு சூடானில் வன்முறைகளை நிறுத்துங்கள்- பான் கீ மூன் கோரிக்கை

(லண்டன்)

தெற்கு சூடானில் பொது மக்களுக்கு எதிரான வன்முறைகளை நிறுத்துமாறு ஐக்கிய நாடுகளின் தலைமைச் செயலர் பான் கீ மூன் கோரிக்கை விடுத்துள்ளார்.

தெற்கு சூடான் ஜனாதிபதி சால்வா கீர் ஆதரவு படையினருக்கும், எதிர்ப்புக் குழுவினருக்கும் இடையே சண்டை நடைபெற்று வருகிறது.

இதனால் அங்கு விரும்ப தகாத பல வன்முறை சம்பவங்கள் நிகழ்கின்றன. கடந்த வாரத்தில் நடந்த வன்முறை சம்பவத்தில் மட்டும் 60 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொது மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறி இடம் பெயர்ந்துள்ளதாக கூறப்படுகிறது.

இந்நிலையில் பொது மக்களுக்கு எதிரான இந்த வன்முறைகளை நிறுத்துமாறு ஐக்கிய



நாடுகளின் தலைமைச் செயலர் பான் கீ மூன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறுகையில், வன்முறை சம்பவங்களால் அங்கு நிலைமை மிகவும் மோசமடைந்து வருவது குறித்து தான் கவலையடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தெற்கு சூடானில் நடைபெற்று வரும் சண்டை காரணமாக அங்குள்ள ஐ.நா. ஊழியர்கள் மற்றும் அமெரிக்கர்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டு வருகின்றனர்.

தலைநகர் ஜோங்லி பகுதியில் பணியாற்றி வந்த ஐ.நா. ஊழியர்கள் மற்றும் அமெரிக்கர்கள் பாதுகாப்பு கருதி வெளியேற்றப்பட்டுள்ளனர்.

தெற்கு சூடானில் கடந்த 15ஆம் திகதி முதல் நடைபெற்று வரும் சண்டையால் அங்கு 500இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். மேலும் அப்பகுதியில் நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர கூடுதல் படைகளை அனுப்ப அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா உத்தரவு பிறப்பித்துள்ளார். (2)

# பிரி. நாடாளுமன்றில் விவாதம்

பிரித்தானியாவில் அதிகரித்து வரும் வளர்ப்பு நாய் திருட்டை தடுக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என அந்நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பிரித்தானியா உள்ளிட்ட மேற்கத்திய நாடுகளில் வாழும் மக்கள் நாய், பூனை, கோழி, கிளி போன்றவற்றை செல்ல பிராணிகளாக வளர்த்து வருகின்றனர். இதற்காக அரசும் பல்வேறு சலுகைகளை செய்து தருகின்றது.

இந்நிலையில் வளர்ப்பு நாடுகளை திருடும் சம்பவங்கள் அதிகரித்து வருவதாக புகார்கள் எழுந்தன.

இதனை தொடர்ந்து அந்நாட்டின் நாடாளுமன்றத்தில் சுற்றுச்சூழல், உணவு மற்றும் உள்ளூர் விவகாரங்கள் துறை தொடர்பான விவாதம் நடைபெற்றது. இதில் விலங்குகள் மேம்பாடு குறித்து பேசப்பட்டது. (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைது செய்யப்பட்ட மீனவர்களை விடுவிக்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்

## பா.ம.க. நிறுவுநர் ராமதாஸ் வலியுறுத்து



**இலங்கை சிறையில் வாடும் மீனவர்களை மீட்க தமிழக அரசு நடவடிக்கையெடுக்க வேண்டும். அவர்களின் படகுகளை மீட்கவும் தமிழக அரசு நடவடிக்கையெடுக்க வேண்டும் தமிழக முதல்வர் ஜெயலலிதா டில்லி சென்று பிரதமர் மன்மோகன்சிங்கை சந்தித்து தமிழக மீனவர்கள் பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு காணும்படி வலியுறுத்த வேண்டும் என பா.ம.க நிறுவுனர் டாக்டர் ராமதாஸ் கோரிக்கை விடுத்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

இலங்கை சிறையில் வாடும் 210 மீனவர்களையும், அவர்களின் படகுகளையும் விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி நாகப்பட்டினம் மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்கள், அவர்களின் குடும்பத்தினர் என மூவாயிரத்திற்கும் மேற்பட்டோர் நாகப்பட்டினத்தில் கடந்த சனிக்கிழமை முதல் சாகும் வரை உண்ணாநிலை மேற்கொண டுள்ளனர்.

அவர்களில் 15 இற்கும் மேற்பட்ட பெண்கள் மயங்கி விழுந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நாகபட்டினத்தில் உள்ள ஆயிரத்துக்கும் அதிகமான வணிகர்கள் ஒருநாள் கடையடைப்பு நடத்துவதுடன் மீனவர்களுக்கு ஆதரவாக உண்ணாவிரதப் போராட்டத்திலும் ஈடுபட்டுள்ளனர்.

மீனவர்கள் இவ்வளவு தீவிரமாக போராடிவரும் போதிலும் இது வரை அரசுத் தரப்பிலிருந்து எவரும் அவர்களைச் சந்தித்து குறைகளை கேட்கவில்லை. மீன்வளத்துறை அமைச்சர் ஜெயபால் நாகையை சேர்ந்தவர் தான். அவர் நாகப்பட்டினத்தில் தான் இருக்கிறார் என்ற போதிலும் மீனவர்களைச் சந்தித்து குறைகளை கேட்க முயற்சி செய்யவில்லை.

நடப்பாண்டில் மட்டும் 600 இற்கும் மேற்பட்ட தமிழக மீனவர்களை இலங்கைப்படையினர் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்ட மீனவர்களை 3 மாதங்களுக்கும் மேலாக சிறையில் அடைத்து வைப்பதுடன், அவர்களின் படகுகளையும் நாட்டுடைமையாக்கி விடுவதால் அவர்கள் வாழ்வாதாரங்களை இழந்து தவிக்கின்றனர்.

அவர்களுக்கு அரசு சார்பில் எந்த உதவியும் வழங்கப்படவில்லை.

இலங்கைக் கடற்படை செய்யும் அட்டூழியத்தால் ஒரு சமுதாயமே சொல்ல முடியாத அளவுக்கு பாதிப்புக்குள்ளாகியுள்ள நிலையில் அதைப்பற்றி மத்திய மாநில அரசுகள் கவலைப்படாமல் இருப்பது கண்டிக்கத்தக்கதாகும்.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் அனைவரையும் உடனடியாக விடுதலை செய்யவும் அவர்களின் படகுகளை மீட்கவும் தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இது தொடர்பாக தமிழகத்திலிருந்து எழுப்பப்படும் குரல்களை மத்திய அரசு கண்டு கொள்ளவில்லை என்பதால், அனைத்துக் கட்சி பிரதிநிதிகள் அடங்கிய குழுவுடன் முதலமைச்சர் ஜெயலலிதா டில்லி சென்று, பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித்து தமிழக மீனவர்கள் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணும்படி வலியுறுத்த வேணடும் என அவர் அதில் குறிப்பிட்டுள்ளார். (2)

## டில்லியில் ஆம் ஆத்மி கட்சி ஆட்சி அமைக்கும்

### கேஜ்ரிவால் அறிவிப்பு



(புதுடில்லி)

ஆம் ஆத்மி கட்சி டில்லியில் ஆட்சி அமைக்கும் என்று அதன் தலைவர் அரவிந்த் கேஜ்ரிவால் நேற்று அறிவித்துள்ளார்.

காங்கிரஸ் கட்சியின் ஆதரவுடன் ஆம் ஆத்மி கட்சி டில்லியில் ஆட்சிப் பொறுப்பை ஏற்கவுள்ளது. டில்லியின் முதல்வராக அரவிந்த் கேஜ்ரிவால் பதவியேற்றுக் கொள்ளவிருக்கிறார். நாளை மறுதினம் வியாழக்கிழமை ஆம் ஆத்மி கட்சி பொறுப்பேற்றுக் கொள்ளும். டில்லியில் குறித்த கட்சி பொறுப்பேற்றுக் கொள்ள ஏராளமான பொதுமக்கள் ஆதரவு அளித்ததாலேயே ஆட்சி அமைக்கும் முடிவை எடுத்ததாகவும் அரவிந்த்கேஜ்ரிவால் அறிவித்துள்ளார்.

டில்லியில் ஆட்சி அமைப்பது குறித்து துணைநிலை ஆளுநரை சந்தித்து உரிமை கோரவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து, டில்லியில் ஜந்தர் மந்திரில் ஆம் ஆத்மி கட்சி பொறுப்பேற்கும் நிகழ்ச்சியை நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. (2)

## ஜிஎஸ்எல்வி-டி5 ரொக்கெட் விண்ணில் ஏவுவதற்கு ஏற்பாடு



(பெங்களூர்)

ஜிஎஸ்எல்வி-டி5 ரொக்கெட் ஜனவரிமாத முதல்வாரத்தில் விண்ணில் ஏவப்படவுள்ளதாக இஸ்ரோ கூறியுள்ளது.

ஜிசாட்-14 தொலைத்தொடர்பு செயற்கைக்கோளை ஜிஎஸ்எல்வி-டி5 ரொக்கெட் மூலம் கடந்த ஓகஸ்ட் மாதம் 19ஆம் திகதி விண்ணில் ஏவ கவுண்டவுன் தொடங்கப்பட்டது. ஸ்ரீஹரிகோட்டா சதீஷ்தவான ஏவுதளத்தில் இதற்கான ஆய்தப்பணிகள் நடைபெற்றன. ஆனால் கடைசி நேரத்தில், எரிபொருள் கசிவு கண்டு பிடிக்கப்பட்டு ரொக்கெட் ஏவுவது நிறுத்தப்பட்டது. கோளாறு சரி செய்யும் பணிகள் முடிவடைந்துள்ள நிலையில் இஸ்ரோவின் ஆய்வு குழு எதிர் வரும் 27ஆம் திகதி ஆலோசனை கூட்டத்திற்கு ஏற்பாடு செய்துள்ளது.

அன்றையதினம் ரொக்கெட்டை மீண்டும் ஏவ நாள் குறிக்கப்படும். ஜனவரி 5ஆம் திகதி ரொக்கெட்டை ஏவ திட்டமிட்டுள்ளோம் என்று இஸ்ரோ செய்தித்தொடர்பாளர் தேவிபிரசாத் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

மேலும் அவர் கூறுகையில் அடுத்தவாரம் ரொக்கெட்டுக்குள் செயற்கைக்கோளை பொருத்தும் பணி நடைபெறும். கடந்த முறை பயன்படுத்தப்பட்ட எரிபொருள் டாங்க் அகற்றப்பட்டு முற்றிலும் புதிய டாங்க் அமைக்கப்பட்டுள்ளது என்றார். (2)

## தேவயானிக்கு ஐ.நா. தூதுவருக்கான அட்டை

(நியூயோர்க்)

தேவயானிக்கு ஐ.நா. தூதருக்கான அடையாள அட்டை வழங்கப்பட்டது. கூடுதல் பாதுகாப்பு கிடைக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. அமெரிக்காவில், நியூயோர்க் இந்திய தூதரகத்தில் துணைத் தூதராக பணியாற்றி வந்த தேவயானி கடந்த 12ஆம் திகதி விசா மோசடி உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களின்பேரில் கைது செய்யப்பட்டார். இதனையடுத்து இந்தியாவில் பெரும்கொந்தளிப்பு ஏற்பட்டது.

இந்தச் சம்பவத்தால் இந்தியா அமெரிக்கா இடையே தூதரக அளவில் மோதல் உருவாகி உள்ளது.

'வியன்னா உடன்படிக்கையின்படி, தூதரகப்பணியிலுள்ள தேவயானிக்கு விலக்குரிமை உள்ளிட்ட சலுகைகளை தர முடியாது 'என அமெரிக்கா அறிவித்தது.

இதையடுத்து அவரை ஐ.நா. தூதரகத்தில் ஆலோசகராக நியமித்து, இந்தியா கடந்த சில தினங்களுக்கு முன் அறிவிப்பு வெளியிட்டது.

இதன்மூலம் அவருக்கு விலக்குரிமை உள்ளிட்ட சிறப்பு சலுகைகள் கிடைக்கும் என எதிர்பார்ப்பு உருவானது.

தற்போது தேவயானிக்கு ஐ.நா. தூதருக்கான அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் கூடுதல் பாதுகாப்பு கிடைக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. (2)

### இளையராஜா வைத்தியசாலையில் அனுமதி

இசையமைப்பாளர் இளையராஜா உடல்நல குறைவு காரணமாக சென்னையிலுள்ள தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வழக்கம்போல நேற்றுக் காலை பிரசாத் ஸ்டூடியோவிற்கு வந்த இளையராஜா புதிய படத்திற்கான பாடல் இசையமைப்பில் ஈடுபட்டிருந்தார். அதன் பின்னர் டிசம்பர் 28ஆம் திகதி நடைபெறவுள்ள விழாவிற்காக பாடல் கம்போசிங்கில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்.

அப்போது அவருக்கு லேசான நெஞ்சு வலி ஏற்பட்டது. இதனையடுத்து அவர் தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அவருக்கு வைத்தியர்கள் சிகிச்சை அளித்து வருகின்றனர். (2)

### ஈழத்தமிழர்களுக்காக குரல்கொடுக்கும் தி.மு.க

இலங்கை தமிழர்களுக்காக குரல் கொடுத்தது தி.மு.க தான் என முன்னாள் அமைச்சர் இந்திர குமாரி தெரிவிதுள்ளார். அலங்கா நல்லூரில தி.மு.க. சார்பில் பொதுக்குழு தீர்மான விளக்க பொதுக் கூட்டம் இடம பெற்றது.

இதில் கலந்துகொண்டு முன்னாள் அமைச்சர் இந்திர குமாரி உரையாற்றுகையில்

இலங்கை தமிழர்களுக்காக அதிகமாக குரல்கொடுத்தது தி.மு.க. தான் கலைஞர் யாரை சுட்டி காட்டுகிறாரோ அவர்தான் பாரத பிரதமராக வர முடியும். தி.மு.க.வின் தொண்டர்கள் எப்போதும் சுறுசுறுப்புடனும், விழிப புணர்வுடன் செயல்படுவார்கள். தோல்வியை கண்டு தளராத கட்சி தி.மு.க.தான்.

வருகின்ற நாடாளுமன்ற தேர்தலில் தலைவர் காட்டும் வழியில் உழைத்து தி.மு.க.வை வெற்றிபெற செய்ய வேண்டும். அதற்காக இப்பொழுதே தொண்டர்கள் வரும் தேர்தலுக்காக பணியாற்ற தொடங்க வேண்டும் என்றார். (2)

பாரதச் செய்தி

## நடிகர் குமரிமுத்து மரணம்



பழம்பெரும் நகைச்சுவை நடிகர் குமரிமுத்து நேற்று முன்தினம் மரண மடைந்துள்ளார்.

45 வருடங்களுக்கு மேலாக தமிழ்திரையுலகில் நடித்துள்ள குமரிமுத்து 500இற்கும் மேற்பட்ட திரைப்படங்களில் நடித்துள்ளார். வித்தியாசமான சிரிப்பினால் மக்களை சிரிப்பூட்டி பிரபல்யமானவர்.

ஆரம்ப காலத்தில் மேடை நாடகங்களில் நடித்து வந்த இவர் 1960 ஆம் ஆண்டுகளிலிருந்து சினிமாவில் நடிக்க ஆரம்பித்து 4 தலைமுறை நடிகர்களுடன் நடித்துள்ளார். எம்.ஜி.ஆர், சிவாஜி, ரஜனி, கமல், அஜித், விஜய் என பல முன்னணி நடிகர்களின் படங்களிலும் நகைச்சுவை கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நரி தன் கனவில் கூட, கோழிகளை எண்ணிக் கொண்டே இருக்கும்.

~ வாலஸ்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## நரிகள் கூட்டிய ஒற்றுமை மாநாடு முயல்களுக்கு அழைப்பு

ஒரு காட்டில் வாழ்ந்த நரிக்கூட்டம் பசியால் வாடின. அந்தக் காட்டில் வாழ்ந்த முயல்கள் புத்தி சாலித்தனமாக நரிகளிடம் இருந்து அந்நியப்பட்டிருந்ததே நரிகளின் பசிக்கொடுமைக்கு காரணம்.

ஒரு நாள் நரிக்கூட்டத் தலைவர் தன் பரிவாரங்களை கூட்டி அன்பர்களே! நாங்கள் முயல்களை துரத்திப் பிடித்து உண்பது எனிச் சாத்தியம் அற்றது. ஆகையால் நாங்கள் முயல்களை அழைத்து ஒரு ஒற்றுமை மாநாடு நடத்துவோம். அந்த மாநாட்டில் முயல்களுடன் நட்புணர்வு புரிவது போலக் காட்டி ஆளுக்கு ஒன்று அமுக்கிக் கொள்வோம் என்றது.

தலைவரின் கருத்துரையை ஏற்றுக் கொண்ட நரிகள் மாநாடு கூட்ட முயல்களுக்கு அழைப்பு விடுத்த கதை நீங்கள் அறியாததல்ல.

நரிப்புத்தி என்பதற்குள் தந்திரம் என்பது உள்ளடங்கும். நரிகள் எப்போதும் தந்திரபுத்திச் சிந்தனை கொண்டவை. இந்த தந்திரம் நரிகளுக்கு மட்டுமல்ல; சில மனிதர்களுக்கும் இருக்கவே செய்கின்றது.

அவன் ஒரு நரி என்று நாம் சொல்வது தந்திர புத்தி கொண்டவர்களையே ஆகும். சில மனிதர்களிடம் இருக்கக் கூடிய நரிப்புத்தியை நாம் இனங்காணாது விட்டால் நிலைமை படுமோசமாகி விடும். சில வேளைகளில் நரிப்புத்தி நரிக்கே ஆபத்தாகி விடுவதும் உண்டு.

இந்த நாட்டில் ஜனாதிபதியாக இருந்த காலஞ்சென்ற ஜே.ஆர்.ஜெயவர்த்தனவை நரிப்புத்தி கொண்டவர் என்று சொல்வார்கள். 1978-ல் அவர் கொண்டு வந்த நிறைவேற்று அதிகாரம் இந்த நாட்டில் தமிழ் மக்களை ஓரங்கட்டுவதனை மட்டும் நோக்கமாக கொண்டதல்ல.

மாறாக தான் சார்ந்த ஐக்கிய தேசியக் கட்சியை இந்த நாட்டின் ஆட்சி பீடத்தில் நிலையாக இருத்தி விடுவதும் அவரின் நோக்கமாகும்.

இரு தடவைகள் ஜனாதிபதியாக இருந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தவின் பதவிக் கையளிப்பு ஆர்.பிரேமதாசவிடமாக இருந்தது.

எனினும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிப் பீடம் ஒரு குறிப்பிட்ட காலத்துடன் நின்றுபோக சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சியைக் கைப் பற்றியது.

இப்போது மூன்றாவது தடவையாகவும் ஜனாதிபதியாக இருப்பது பற்றிய தீர்மானங்களும் அரங்கேறி வருகின்றன.

ஜே.ஆர்.ஜெயவர்த்தன கொண்டு வந்த நிறைவேற்று அதிகாரம் கைமாறி அவரின் நரிப் புத்திக்கு உச்சம் தலையடி கொடுத்துள்ளது.

இவ்வாறாக நரிப்புத்திகள் தோற்றுப்போன இடங்கள் இருந்தாலும் இலங்கையின் ஆட்சி பீடத்தின் நரிப்புத்திக்கு தமிழ் மக்கள் தோற்றுப் போனதான சம்பவங்களே முழுவதுமாக இருப்பது வேதனைக்குரியது.

ஆம், தமிழ் மக்களுக்கு சாதகமான சூழ்நிலை உருவாகும்போது ஆட்சியாளர்கள் தங்கள் நரித் தந்திரத்தை பிரயோகிக்க அப்பாவித் தமிழ் அரசியல் தலைமைகள் அதனை நம்பி ஏமாந்து போகின்ற வரலாறுகள் இன்றுவரை தொடரவே செய்கின்றன.

அதன் ஒரு கட்டமே தமிழ் தேசிய கூட்டமைப்பு எங்களுடன் இணைந்து இனப்பிரச்சினைக்கு தீர் காண வேண்டும் என விடுக்கப்படும் அழைப்பாகும்.

இந்த அழைப்பை தமிழ் தேசியக் கூட்டமைப்பு நம்பி ஏற்றுக் கொள்ளுமாயின் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்க கூடியதான சர்வ தேச ஆதரவை நாம் இழப்பது உறுதியாகி விடும்.

எனவே, நரிகள் தங்களின் ஆபத்து வேளையில் விடுத்த அழைப்பை முயற்கூட்டத் தலைவர் ஏற்றால் எல்லாமே போச்சு.

# சேவைக்கால அடிப்படையில் நியமனம் வழங்கப்படும்

## யாழ்.மாநகர முதல்வர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபையில் பணியாற்றிய சுகாதார தொண்டர்கள் உட்பட தற்காலிக ஊழியர்களுக்கு சேவைக் கால அடிப்படையில் கல்வித் தகைமையின் இறுக்கம் தளர்த்தப்பட்டு நிரந்தர ஊழியர்களாக உள்வாங்கப் படுவார்கள் என மாநகரசபையின் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்துள்ளார்.

யாழ்.மாநகரசபையில் 150 பணியாளர்கள் வெற்றிடங்களை நிரப்புவதற்காக நேற்று திங்கட்கிழமை நேர் முகத்தேர்வு நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இதற்காக பத்திரிகைகளில் மாநகரசபையினால் வெளியிடப்பட்ட விளம்பரங்களில் கல்விப் பொதுத்தராதரப் பரீட்சையில் சித்திபெற்றவர்கள் உள்வாங்கப்படுவார்கள் எனவும் அறிவுறுத்தப்பட்டிருந்தது.

இந்நிலையில் ஏற்கெனவே யாழ். மாநகர சபையில் நிரந்தர நியமனம் கோரி போராட்டம் நடத்திய மாநகர சபையின் தற்காலிக சுகாதாரத் தொண்டர்கள் தாங்களுக்கு இல்லாமல் வெளிநபருக்கு நியமனங்கள் வழங்கப்படவுள்ளதாக கருதி நேற்றுக் காலை போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இருந்தும் மாகாண ஆளுநரின் அதிகாரத்தின் மூலம் பொதுச் சேவை ஆணைக்குழுவினால் எதிர்பார்த்த கல்வித் தைமையினை விட குறைந்த கல்வித்தகைமை உடையவர்களையும் உள்வாங்குவதாக தீர்மானித்திருந்தோம்.

ஆகவே இது தொடர்பாக அறிந்திராத சுகாதாரத் தொண்டர்கள் போராட்டத்தில் ஈடுபட முனைந்தனர். எனினும் அவர்களுக்கு சேவைக்கால அடிப்படையில் நியமனம் வழங்கப்படும் எனவும் முதல்வரால் இதன்போது விளக்கமளிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து இந்தப் போராட்டம் கைவிடப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (அ-6)

## நாட்டை நேசிக்காதவர்களே இன்று ஜனாதிபதியின் ஆலோசகர்கள்

### ராமஞ்ஞைய பீடாதிபதி தெரிவிப்பு

நாட்டை நேசிப்பவர்கள் அன்று ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்கியதாகவும் இன்று ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்குபவர்கள் நாட்டை நேசிப்பவர்கள் அல்ல என்பது தெளிவானது என ராமஞ்ஞைய பௌத்த பீடத்தின் அனுநாயக்கர் கிராம்பே ஆனந்ததேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

மக்களும், பௌத்த மத தலைவர்களும் கசினோவை எதிர்க்கின்றனர் என்றால், யுத்தம் தொடர்பில் ஜனாதிபதி தீர்மானத்தை எடுத்தது போன்று கசினோ தொடர்பிலும் எடுக்க வேண்டும்.

ஜனாதிபதிக்கு தவறான ஆலோசனைகளை வழங்குவது தவறு. இதனை அரசியல் காரணத்திற்காக கூறவில்லை. நாடு அழிந்து போக இடமளிக்க முடியாது.

இதனால் கசினோ தொடர்பில் ஜனாதிபதி உடனடியாக தீர்மானம் ஒன்றை எடுக்க வேண்டும். கசினோவுக்கு பெரும் எதிர்ப்பு இருப்பது இரகசியமான விடயமல்ல. பொதுமக்களின் பிரதிநிதிகள் இதற்கு பொறுப்புக் கூற வேண்டும்.

மக்கள் பிரதிநிதிகள் கசினோவை நிறுத்துமாறு அழுத்தமாக குரல் கொடுத்தால் நிச்சயம் அது நிறுத்தப்படும் என்றார். (அ-2)

## நத்தார் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

இராமநாதன் வீதி யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள சத்தியசாயி சேவா நிலையத்தில் நாளை புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கொடியேற்றம் மற்றும் மெழுகுவர்த்தி ஏற்றல் நிகழ்வுகளுடன் நத்தார் நிகழ்வுகள் ஆரம்பமாகவுள்ளன.

தொடர்ந்து பாலவிகாஷ் மாணவர்களின் கலை நிகழ்வுகள், நத்தார் பாப்பா வருகை, கிறிஸ்தவ பஜனைப் பாடல்கள் கிறிஸ்தவ கீதங்கள் மற்றும் விசேட சொற்பொழிவு என்பன இடம் பெறவுள்ளன.

நத்தார் தின விசேட சொற்பொழிவை கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி அருட் தந்தை மைக்கல் சௌந்தரநாயகம் நிகழ்த்துவார். (அ-2)

## 89 ஆவது பிறந்ததினம்

கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் 89ஆவது பிறந்த தினம் எதிர்வரும் ஜனவரி மாதம் 7ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தில் இந்நிலையத் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறும்

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக அகில இலங்கை இந்துமாமன்ற சைவ சமய விவகாரக்குழுத் தலைவர் கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம் தம்பதிகள் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறை பேராசிரியர்செ.கிருஷ்ணராஜா,யாழ். போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர் த.பேரானந்தராஜா,யாழ். கல்வி வலயக் கல்விப்பணிப்பாளர் செல்லத்துரை உதயகுமார் ஆகியோர் கலந்து கொள் ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் பிறந்த தின அறக்கொடை வழங்கல் , சிவத்தமிழ் விருது வழங்கல்-2014 ஆகியவை இடம் பெறும். (2)

## மன்னார் பிரதேச சபையின் 510 ஏக்கர் காணி அபகரிப்பு

மன்னார் பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் உள்ள மூன்று கிராமங்களை உள்ளடக்கிய 510 ஏக்கர் காணி தனிநபர் ஒருவரால் அபகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், இந்த காணி கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஒருவருக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதாக, மன்னார் பிரதேச சபையின் உப தலைவர் அந்தோனி சகாயம் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் வடமாகாண அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்களின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் பிரதேச சபை பிரிவுக்குட்பட்ட ஓலைத்தொடுவாய் கிராம சேவகர் பிரிவின், உவரி, தாழங்காடு, கருப்பன் குடியிருப்பு ஆகிய மூன்று கிராமங்களையும் உள்ளடக்கி, புதுக்குடியிருப்பு கிராமத்தைச் சேர்ந்த தனி நபர் ஒருவர், 510 ஏக்கர் காணியை அபகரித்து, போலி ஆவணங்களை தயாரித்து கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஒருவருக்கு விற்பனை செய்துள்ளார்.

இந் நிலையில் குறித்த காணியில் தமது காணிகளும் உள்ளடங்குவதாக உரிமை கோரி, சுமார் 20 இற்கும் மேற்பட்டவர்கள் மன்னார் பிரதேச சபைக்கு வந்து முறையிட்டுள்ளனர்.

இந் நிலையில் காணியை சட்ட விரோதமாக விற்பனை செய்த புதுக்குடியிருப்பைச் சேர்ந்த குறித்த நபரையும், அதனை விலைக்கு வாங்கிய கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவரையும் அழைத்து பேச்சு வார்த்தையினை மேற்கொண்டோம்.

இதனைத்தொடர்ந்து கடந்த 16-ம் திகதி பாதிக்கப்பட்டவர்கள் மன்னார் பிரதேச சபைக்கு அழைக்கப்பட்டு, சட்டத்தரணி ஊடாக ஆலோசனைகள் பெற்றுக்கொள்ளப்பட்டது.

இதன்போது ஓய்வு பெற்ற வடமாகாண காணி ஆணையாளர் கே.குருநாதன் முன்னிலையில் பல விளக்கங்கள் முன்வைக்கப்பட்டன.

மன்னார் பிரதேச சபை, சம்பந்தப்பட்ட காணி தொடர்பாக மேலதிக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

விற்பனை செய்யப்பட்ட குறித்த 510 ஏக்கர் காணியில் அந்தநபர் வேலைத் திட்டங்களை மேற்கொள்ள மன்னார் பிரதேச சபை தடை விதித்துள்ளது என்றார். (எ-2)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத் துளிகள்

### ஒரு நிமிடம் கூட ஓயாதீர்கள்



❖ எப்போதும் விரிந்து மலர்ந்து கொண்டே இருப்பது தான் வாழ்க்கை. யாருக்கும் பயனில்லாமல் சுருங்கி விடுவது தான் மரணம்.

❖ தோல்வியின் மூலம் நாம் புத்திசாலிகள் ஆகிறோம். அதனால், எத்தனை முறை தோற்றாலும் குறிக்கோளை அடைவதற்கான முயற்சியை கைவிட்டுவிடாதீர்கள்.

❖ ஒரு நிமிடம் கூட ஓயாமல், ஏதாவது ஒரு பணியைச் செய்து கொண்டே இருங்கள். அது தவறோ சரியோ, எதுவாக இருந்தாலும் பொருட்படுத்தவேண்டாம்.

❖ நமது அகவாழ்க்கை சிறந்ததாகவும், தூய்மையானதாகவும் இருந்தால் மட்டுமே நாம் காணும் உலகமும் சிறப்பும் தூய்மையும் கொண்டதாக இருக்கும்.

❖ சண்டையிடுவதோ, குறைசொல்வதோ தேவையில்லை. நிலைமையைச் சீர்படுத்தி அமைக்க அவை சிறிதும் உதவப்போவதில்லை.

❖ நாம் எண்ணும் ஒவ்வொரு எண்ணமும், நாம் செய்யும் ஒவ்வொரு செயலும் குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு சூட்சும தன்மையை அடைந்து நம்மிடமே வந்து விடும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அமைச்சுக்கிடையிலான பூப்பந்தாட்டம்; உள்ளூராட்சி அணி சம்பியன்


Winners


Runners up

வடமாகாண அமைச்சு அணிகளுக்கிடையிலான பூப்பந்தாட்டப் போட்டிகளில் உள்ளூராட்சி அணி சம்பியனாகியது.

வடமாகாண அமைச்சுகளின் அணிகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் தற்போது யாழ்.மாவட்டத்தில் நடைபெற்று வருகின்றன.

உள்ளகப் போட்டிகள், மைதானப் போட்டிகள் ஆகியவற்றினை உள்ளடக்கிய மேற்படி சுற்றுப் போட்டியில் பூப்பந்தாட்டப் போட்டிகள் கடந்த வியாழக்கிழமை மணிக்கூட்டு வீதி யிலுள்ள பூப்பந்தாட்ட மைதானத்தில் இடம் பெற்றன.

• ஆண்களுக்கான பூப்பந்து இறுதிப் போட்டியில் கல்வி அமைச்சு அணியும் உள்ளூராட்சி அணியும் மோதின. இதில் உள்ளூராட்சி அணி 3:0 என்னும் நேர் செற் கணக்கில் வெற்றி பெற்றது.

ஆட்டத்தின் ஆரம்பம் முதலே செல்வாக்குச் செலுத்திய உள்ளூராட்சி அணி 21:11, 21:17, 21:7, 21:13, 21:2, 21:17 என்னும் புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியனாகியது.

பெண்களுக்கான இறுதிப் போட்டியில் ஆளுநர் செயலக கொத்தனி அணியும் உள்ளூராட்சி அணியும் மோதின. இதில் உள்ளூராட்சி அணி 3:2 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது. (க-23)

## உடுவில் கிங் ஸ்ரார் இறுதிப் போட்டிக்கு தெரிவு

உரும்பிராய் புனித மைக்கல் விளையாட்டுக் கழகம் நடத்திய கிரிக்கெட் போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் உடுவில் கிங் ஸ்ரார் அணி வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளது.

உரும்பிராய் புனித மைக்கல் விளையாட்டுக்கழகம் நடத்தும் அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையிலான 5 பேர் 6 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் போட்டியை உரும்பிராய் இந்துக் கல்லூரியின் மைதானத்தில் நடத்தியது.

யாழ்.மாவட்டத்திலிருந்து 26 அணிகள் பங்குபற்றிய இப்போட்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் கொட்டடி இளங்கதிர் அணியை எதிர்த்து உடுவில் கிங் ஸ்ரார் அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கொட்டடி இளங்கதிர் அணி 5 ஓவர்களில் 4 விக்கெட் இழப்புக்கு 37 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய உடுவில் கிங் ஸ்ரார் அணி 4.4 ஓவர்களில் 3 விக்கெட் இழப்புக்கு தனது வெற்றி இலக்கை அடைந்து இறுதிப் போட்டிக்கு தெரிவாகியது. (க)

## தாச்சி சுற்றுப் போட்டி; காளியம்பாள் வி.க.வெற்றி

வலி.தெற்கு பிரதேச இளைஞர் கழக சம்மேளனம், யாழ்.மாவட்ட தாச்சி சங்கத்தின் அனுசரணையுடன் நடத்தும் இளைஞர் வெற்றிக் கிண்ண தாச்சி சுற்றுப் போட்டியின் காலிறுதிப் போட்டிகள் உடுவில் உதய சூரியன் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

அண்மையில் இடம்பெற்ற காலிறுதிப் போட்டியில் சண்டிலிப்பாய் உதய சூரியன் விளையாட்டுக் கழக அணியும் தாவடி காளியம்பாள் அணியும் மோதின.

ஆரம்பம் முதலே போட்டியை தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்த தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழக அணி முதல் அரைப்பாதியின் போது 5:1 என்னும் புள்ளிகள் அடிப்படையில் முன்னிலையிலிருந்தது.

இரண்டாவது அரைப்பகுதியில் மேலும் 3 புள்ளிகளை தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழக அணி பெற பதிலுக்கு 2 புள்ளியையே சண்டிலிப்பாய் உதயசூரியன் விளையாட்டுக் கழக அணி பெற்றது.

இதனால் போட்டி நிறைவில் 8:3 என்னும் புள்ளிகளின் அடிப்படையில் தாவடி காளியம்பாள் விளையாட்டுக்கழக அணி வெற்றிபெற்று அரையிறுதிக்கு தகுதி பெற்றது. (க-23)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

## ஆளுநர் வெற்றிக்கிண்ண சதுரங்க சுற்றுப் போட்டி


வடமாகாண ஆளுநர் சதுரங்கக் கிண்ணம் - 2014 தொடர்பான கலந்துரையாடல் வடமாகாண ஆளுநரின் செயலாளர் அலுவலகத்தில் அண்மையில் இடம்பெற்றபோது... (படங்கள்:என்.குமார்)

வடமாகாண ஆளுநர் செயலகத்தினால் வடமாகாண ஆளுநர்கிண்ண சதுரங்க மாபெரும் சுற்றுப் போட்டி யொன்றினை நடத்துவதற்கு வடமாகாண ஆளுநர் செயலகம் தீர்மானித்துள்ளது. வடமாகாண விளையாட்டுத் துறையை மேம்படுத்தும் செயற்றிட்டத்தின் ஒரு அங்கமாக வட மாகாண ஆளுநர் அலுவலகம் இதனை செயற்படுத்த எண்ணியுள்ளது.

இச்சுற்றுப்போட்டியில் வடமாகாணத்தை சார்ந்த அனைத்து பாடசாலை மாணவர்களுக்கான 6, 8, 10, 12, 14, 16, 18 வயதுக் குட்பட்ட மற்றும் 18 வயதுக்கு மேற்பட்ட திறந்த சுற்றுப்போட்டிகள்) ஆண்கள், பெண்களுக்கான தனித்தனிப் போட்டிகள் நடைபெறும்.

இச் சதுரங்க சுற்றுப் போட்டிகள் எதிர்வரும் மாதம் 16 ஆம் திகதி தொடக்கம் 21 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இப் போட்டியானது கோட்டம், வலயம், மாவட்டம், மாகாணம் என நடைபெறும். கோட்ட மட்ட போட்டிகள் 16 ஆம் திகதி தொடக்கம் 28 ஆம் திகதி வரையும் அதில் தெரிவு செய்யப் பட்ட போட்டியாளர்களுக்கு 30 ஆம் திகதி தொடக்கம் 09.02.2014 வரை வலய மட்டப் போட்டிகளும் 10.02.2014 தொடக்கம் 14.02.2014 வரை மாவட்ட மட்ட போட்டிகளும் நடைபெறும். இறுதியாக மாவட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட போட்டியாளர்களுக்கு மாசி மாதம் 19, 20, 21 ஆகிய திகதிகளில் யாழ்ப்பாணத்தில் இறுதிச் சுற்றுப்போட்டி நடைபெறும்.

ஆர்வமுள்ள வடமாகாண சதுரங்க வீரர்கள் இச் சதுரங்க சுற்றுப் போட்டிக்கு தமது அதிபர் ஊடாக பதிவுகளை மேற்கொள்ளலாம். திறந்த சுற்றுப் போட்டியாளர்கள் கீழுள்ள படிவத்தை பிரதி செய்து தபால் மூலமாகவோ, நேரடியாகவோ, மின்னஞ்சல் மூலமாகவோ (npgovernortrophy@gmail.com) அனுப்பி வைக்கவும். இம் மாபெரும் சுற்றுப் போட்டிக்கு அதிகளவான சதுரங்க போட்டியாளர்கள் பங்குபற்றுவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இப்போட்டி தொடர்பான மேலதிக விபரத்திற்கு 021 222 0660 என்னும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (க)

## ஆசிய ஜேர்மன் விளையாட்டுத்துறை ஏற்பாட்டில் தேசிய ரீதியிலான மேசைப்பந்தாட்ட முடிவுகள்


Winners

ஆசிய ஜேர்மன் விளையாட்டுத் துறை பரிமாற்றுத் திட்டத்தின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட அகில இலங்கை ரீதியிலான மேசைப்பந்தாட்டப் போட்டிகள கடந்த சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் யாழ்.மத்திய கல்லூரியில் இடம் பெற்றன.

சனிக்கிழமை பெண்களுக்கான போட்டியும். ஞாயிற்றுக்கிழமை ஆண்களுக்கான 08. 10. 12. 15. 18. 21 மற்றும் திறந்த பிரிவினரிற்கான ஒற்றையர் ஆட்டங்கள் இடம்பெற்றன.

இப் போட்டிகளின் சிறந்த வீரராக 21 வயதுப் பிரிவு மற்றும் திறந்த பிரிவிலும் சம்பியனாகிய இசிப்பத்தான கல்லூரி மாணவனான தரிந்து ஹெஷான் பெரேரா தெரிவானார்.

இந் நிகழ்வின் பிரதம விருந்தினராக மத்திய கல்லூரி அதிபர் எழில்வேந்தன கலந்து கொண்டார்.

இந் நிகழ்வின் விருந்தினர்களாக யாழ்.மாவட்ட மேசைப் பந்தாட்ட சங்கத்தின தலைவரும் யாழ். மத்திய கல்லூரி விளையாட்டுத்துறை பொறுப்பாசிரியருமான மோகன் தேசிய மேசைப்பந்தாட்ட சங்கத்தின் முன்னாள் செயலாளர் சந்தன பெரேரா ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஒவ்வொரு வருடமும் இடம்பெற்று வரும் போட்டிகள் இம் முறையே முதன் முறையாக யாழ்ப்பாணத்தில் இடம்பெறுகின்றது.

இப் போட்டிகளை யாழ். மற்றும் வவுனியா மாவட்ட மேசைப்பந்தாட்ட சங்கம் ஏற்பாடு செய்துள்ளதாக யாழ். மாவட்ட மேசைப்பந்தாட்ட சங்கத் தலைவர் மோகன் தெரிவித்தார்.

பிரிவு ரீதியான முடிவுகள்

8 வயதுப் பிரிவு


பேர்க்சன் கல்லூரி தேனுக சென னிரு. கண்டி தர்மராஜ கல்லூரி மாணவன் மாலித்த பண்டாரவை 08:11. 11:09. 08:11 என்னும் புள்ளிகள் அடிப்படையில் 2:1 என்னும் செற்களில வென்று 8 வயதுப் பிரிவில் சம்பியனாகினார்.

10 வயதுப் பிரிவு

கம்பொல மேசைப்பந்தாட்ட சங்கத்தின் வீரன் கவிஷ்க பண்டார கேகாலை சென் மேரிஸ் கல்லூரி மாணவன் ஜெனடித் பண்டாரவை 11:06. 06:11. 06:11 என்னும் புள்ளிகள் அடிப்படையில் 2:1 என்னும் செற்களில் வென்று 10 வயதுப் பிரிவில் சம்பியனாகினார்.

12 வயதுப் பிரிவு

கம்பொல மேசைப்பந்தாட்ட சங்கத்தின் வீரன் புவனேக அளுத்கே பண்டாரவளை சென் தோமஸ் கல்லூரி மாணவன் அடீப பஸ்நாயக்காவை 11:07. 09:11. 11:03 என்னும் புள்ளிகள் அடிப்படையில் 2:1 என்னும் செற்களில் வென்று 12 வயதுப் பிரிவில் சம்பியனாகினார்.


18 வயதுப் பிரிவில் வெற்றிக் கிண்ணத்தை பெற்ற மாணவன்

15 வயதுப் பிரிவு

கண்டி சென் அன்ரனீஸ் கல்லூரி மாணவன் திமொதி ஷெகான் கம்பொல மேசைப்பந்தாட்ட சங்கத்தின் வீரன் டினேத் புவனேகவை 11:7. 11:08 என்னும் புள்ளிகள் அடிப்படையில் 2:0 என்னும் நேர் செற்களில் வென்று 15 வயதுப் பிரிவில் சம்பியனாகினார்.

18 வயதுப் பிரிவு

யாழ்.மத்திய கல்லூரி வீரன் மோகன ஆகாஷ் யாழ்.இந்துக் கல்லூரி வீரன் வெ.நிஷோதனை 11:07. 06:11. 11:08 என்னும் புள்ளிகள் அடிப்படையில் 2:1 என்னும் செற்களில் வென்று 18 வயதுப் பிரிவில் சம்பியனாகினார்.


Runners up

21 வயதுப் பிரிவு

கொழும்பு இசிப்பத்தான கல்லூரி மாணவன் தரிந்து ஹெஷான் பெரேரா யாழ்.மத்திய கல்லூரி மாணவன் மோகன் ஆகாஷை 11:9. 11:6 என்னும் புள்ளிகள அடிப்படையில் 2:0 என்னும் நேர் செற்களில் வென்று 21 வயதுப் பிரிவில் சம்பியனாகினார்.

திறந்த பிரிவு

கொழும்பு இசிப்பத்தான கல்லூரி மாணவன் தரிந்து ஹெஷான் பெரேரா. கம்பொல மேசைப்பந்தாட்ட சங்கத்தின வீரன் கயான் புஷ்பகுமாரவை 11:13. 13:11. 14:12 என்னும் புள்ளிகள் அடிப்படையில் 2:1 என்னும் செற்களில் வென்று திறந்த பிரிவில் சம்பியனாகினார்.

**Veterans Men's Singles**

யாழ்.மத்திய கல்லூரி ஆசிரியர் ஜே.மோஹறன். பண்டாரவளை விளையாட்டுக் கழக வீரன் எம்.கண்ணனை 11:13. 13:11. 14:12 என்னும் புள்ளிகள் அடிப்படையில் 2:1 என்னும் செற்களில் வென்று திறந்த பிரிவில் சம்பியனாகினார். (க-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையை வென்றது பாகிஸ்தான்

ஐக்கிய அரபு இராச்சியத்திற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணிக்கும், பாகிஸ்தான் அணிக்குமிடையிலான 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரின் 3ஆவது போட்டியில் பாகிஸ்தான் அணி வெற்றிபெற்றுள்ளது.

ஷார்ஜா கிரிக்கெட் மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.




இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 50 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 326 ஓட்டங்களைக் குவித்தது.

முதலாவது விக்கெட்டை 2 ஓட்டங்களுக்கே இழந்த அவ்வணி சார்பாக 2-வது விக்கெட்டுக்காக 27.5 ஓவர்களில் 162 ஓட்டங்கள் குவிக்கப்பட்டன. அதன் பின்னரும் அதிரடி ஆட்டம் தொடர அவ்வணி சிறப்பான நிலையை அடைந்தது.

துடுப்பாட்டத்தில் பாகிஸ்தான் அணி சார்பாக மொஹமட் ஹபீஸ் 136 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 140 ஓட்டங்களையும், அஹமட் ஷெஷாத் 89 பந்துகளில் 81 ஓட்டங்களையும், மிஸ்பா உல் ஹக் 26 பந்துகளில் 40 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இலங்கை அணி சார்பாக திஸர பெரேரா 2 விக்கெட்டுக்களையும், நுவான் குலசேகர, லசித் மலிங்க இருவரும் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

327 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 44.4 ஓவர்களில் 213 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 113 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

17 ஓட்டங்களைப் பெற்றிருந்த போதே முதலாவது, இரண்டாவது வக்கெட்டுக்களை இழந்த இலங்கை அணி, தொடர்ச்சியாக விக்கெட்டுக்களை இழந்து தடுமாறி, இணைப்பாட்டங்களைப்புரியத்தவறியிருந்தது.




துடுப்பாட்டத்தில் இலங்கை அணி சார்பாக திலகரட்ணடில்ஷான் 62 ப்ந்துகளில் 59 ஓட்டங்களையும், அஞ்சலோ மத்தியூஸ் 51 பந்துகளில் 44 ஓட்டங்களையும், டினேஷ் சந்திமால் 53 பந்துகளில் 36 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பாகிஸ்தான் அணி சார்பாக உமர் குல் 3 விக்கெட்டுக்களையும், யூனைட் கான், சயீட் அஜ்மல், மொஹமட் ஹபீஸ் மூவரும் தலா 2 விக்கெட்டுக்களையும், ஷகிட் அப்ரிடி ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக பாகிஸ்தான் அணியின் மொஹமட் ஹபீஸ் தெரிவானார்.

இப்போட்டியின் முடிவில், 5 போட்டிகள் கொண்ட இத்தொடரில் பாகிஸ்தான் அணி 2-1 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## கொழும்பு பேராயர்...

திருச்சபை குரல்கொடுத்து வருகிறது. மெல்கம் ரஞ்சித் போன்றவர்களும் இதற்காகவே குரல் கொடுத்து வருகின்றனர்.

இந்த விஷக் கிருமிகள் நாட்டில் இருக்கும் வரை ஒரு போதும் நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல முடியாது. நாட்டில் 70 வீதத்திற்கும் மேல் சிங்கள பௌத்தர்கள் உள்ளனர்.

7 வீதத்திற்கும் குறைவான கத்தோலிக்கர்களை கொண்ட இவர்களுக்கு எப்படி இப்படியான அழுத்தங்களை கொடுக்க முடிந்துள்ளது.

நாட்டை ஆட்சி செய்த ஆங்கிலேயர் எமக்கு சுதந்திரத்தை வழங்கும் போது, துஷமான நாடாளுமன்ற முறையையும், பிரித்து வேறுபடுத்தும் அரசியல் கட்சி முறைமையையும்விட்டுச்சென்றனர்.

இதன் காரணமாவே 70 வீதமான பௌத்த சிங்களவர்கள் பிரித்து வேறாக்கப்பட்டுள்ளனர். இந்த பிரித்து வேறுபடுத்தும் முறை காரணமாக தமிழ் இனவாதிகளுக்கு சந்தர்ப்பம் ஏற்படுத்தி கொடுக்கப்பட்டுள்ளது என்றார். (எ-11)

## திருமலை...

அவர்களை தேடும் உறவுகளுக்கு நீதியைப் பெற்றுத் தருமாறும், இலங்கையில் உள்ள மனித உரிமை செயற்பாட்டாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறும் அதில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

திருமலைத் தாக்குதலில் காணாமற் போனோரின் உறவுகள், காணாமல் போனோரைத் தேடியறியும் குழுவின் பிரதிநிதிகள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள், மனித உரிமை ஆரவலர்கள் எனப்பலர் காயமடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-11)

## பொலிஸார்...

டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் போராட்டத்தில் ஈடுபட்டவர்களை நேற்று மாலை பொலிஸார் மேற்கண்டவாறு அச்சுறுத்தியுள்ளனர் எனவும் தொடர்ந்து போராட்டத்தை முன்னெடுப்பதா? போராட்டத்தை கைவிடுவதா? என்ற ஒரு முடிவிற்கு வர முடியாத திரிசங்கு நிலையில் குடும்ப நல உத்தியோகத்தர்கள் உள்ளனர். (எ-6)

## தனியார் பேருந்து...

வவுனியா மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் நடைமுறைப்படுத்தவோ அல்லது மாற்று நடவடிக்கை செய்வதற்கோ ஏற்பாடு செய்யவில்லை.

வவுனியாவில் இருந்து பரந்தன் ஊடாக பயணத்தினை மேற்கொள்ளும் மக்களின் நலனைக் கருத்தில் கொண்டும், குறுந்தூர சேவையில் ஈடுபடும் உரிமையாளர்களின் நலனைக் கருத்திற் கொண்டும் கடந்த 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமையில் இருந்து வவுனியாவிலிருந்து பரந்தன் ஊடாக சேவையில் ஈடுபடும் பேருந்துக்கள் தமது சேவைகளை மாங்குளம் அல்லது நெடுங்கேணி ஊடாக மேற்கொள்ள வேண்டும்.

இதனை மீறி இப்பேருந்துக்கள் பரந்தன் ஊடாக சேவையில் ஈடுபட்டால் ஏனைய 4 மாவட்டத்தில் இருந்து பரந்தன் ஊடாக சேவையினை மேற்கொள்ளும் பேருந்துக்கள் அனைத்தும் சேவைப் புறக்கணிப்பில் ஈடுபடுவதாக முடிவெடுக்கப்பட்டது.

இம்முடிவினை வடமாகாண ஆளுநர், வடமாகாண போக்குவரத்து அமைச்சர், பிரதிப் பொலிஸ்மா அதிபர், தனியார் போக்குவரத்து அமைச்சர், கொழும்பு தேசிய போக்குவரத்து ஆணைக்குழு உட்பட 5 மாவட்டங்களின் அரசாங்க அதிபர்களுக்கும் தெரியப்படுத்தப்பட்டது.

ஆனால் இதுவரைக்கும் இவ்விடயம் தொடர்பாக எந்த ஒரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. இதனால் பெரும் பாதிப்புக்கள் தொடர்ச்சியாக ஏற்பட்டுள்ளது.

இதனால் மீளவும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களுக்கு இடையில் சேவையில் ஈடுபடும் உரிமையாளர்களுக்கான கலந்துரையாடல் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இச் சந்திப்பில் உரிமையாளர்களால் வவுனியா மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கமோ அரசாங்க அதிபரோ எமக்கு எதுவித மாற்று நடவடிக்கையும் மேற்கொள்ளததனால் எதிர்வரும் 27 ஆம் வெள்ளிக் கிழமை முழுநேர சேவை புறக்கணிப்பில் ஈடுபடுவ தாக தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றார். (எ-11)

## வைத்தியசாலைத் தொண்...

இந்நிலையில் நேற்று மாலை யாழ்.போதனா வைத்தியசாலைக்கு வருகைதந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா போராட்டத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்த தொண்டர்களுடன் கலந்துரையாடினார் இதன்போது கண்ணீர்மல்க தொண்டர்கள் தமது நிலையை வெளிப்படுத்தினர்.

இதனையடுத்து வைத்தியசாலைப்பணிப்பாளர் உட்பட நிர்வாகத்தினருடன் கலந்துரையாடிய பின்பு வைத்தியசாலையில் குறித்த தொண்டர்களை வைத்தியசாலை ஊழியர்களாக பணிக்கு அமர்த்துவது எனவும் இன்னும் இரண்டு அல்லது 3 வருடங்களில் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் 2 சிதரசித்தியுடன் ஆறுபாடங்களுக்கு பெறு பேறுகள் எடுத்துகொடுக்கப்பட வேண்டும் எனவும் தொண்டர்களிடம் அமைச்சர் தெரிவித்தார்.

அத்தோடு எதிர்வரும் 2 ஆம் திகதி பின்பு தான் வைத்தியசாலையில் பணிக்கு அமர்த்துவது குறித்து உறுதிப்படுத்த முடியும் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை அண்மையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் நடத்தப்பட்ட நேர்முகத்தேர்வில் தெரிவு செய்யப்பட்ட தற்காலிக தொண்டர்கள் 168 பேருக்கு நாளை மறுதினம் வியாழக்கிழமை நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார். (எ-6)

## கூட்டமைப்பு எம்.பிக்கள்...

தமிழ்க் கூட்டமைப்பை நெருக்கடிக்குள் தள்ளக்கூடும் எனவும் மகிந்த ராஜபக்ஷ எச்சரித்துள்ளார்.

குறிப்பாக மாவிலாறு விவகாரத்தில் இறுதியில் நடந்தது என்ன என்பது நினைவிருக்கிறதுதானே, இதுபோன்ற நிலைமை இரணைமடு குள விவகாரத்தில் இடம்பெறாது பார்த்துக் கொள்ளுங்கள் என மகிந்த ராஜபக்ஷ மறைமுக எச்சரிக்கை விடுத்ததாகவும் தெரிய வருகிறது.

அத்துடன், அண்மையில் சிறிதரன் எம்.பி. நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, இவ்வாறான பிரிவினைவாதம் பேசும் தரப்பினரை கட்சியில் முன்னிலைப்படுத்துவது நல்லதல்ல எனவும் கூறியுள்ளார்.

எவ்வாறாயினும், தமிழ்க் கூட்டமைப்பிற்குள் பிளவை ஏற்படுத்தும் அல்லது பிரித்தாளும் சூழ்ச்சியாகவே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்த விஷமத்தனமான கருத்துக்களை சம்பந்தன் தலையில் போட்டதாக கூட்டமைப்பின் அந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தெற்கில் பிரதான கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி, ஸ்ரீலங்கா முஸ்லிம் கட்சிகளைப் பிளவுபடுத்திய மகிந்த ராஜபக்ஷ தரப்பினர், மலையகத்தில் ஆறுமுகன் தொண்டமானின் வாக்கு வங்கியை சிதைக்கும் முயற்சியிலும் தற்போது தீவிரமாக ஈடுபட்டுள்ளமையும், மிக நீண்டகாலமாக தமிழ்க் கூட்டமைப்பிற்குள் பிளவை ஏற்படுத்த முயற்சித்து வருகின்றமையும் அனைவரும் அறிந்ததே. (எ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவை
D.C.M | யாழ் நகர்
எமது கல்வி நிலையத்திற்கு பெண் லிகிதர்கள் தேவைப்படுகின்றனர் A/L படித்த கணனி அறிவுள்ள வர்கள் விரும்பத் தக்கது. ஆர்வ முடை யவர்கள் 27.12.2013 அன்று காலை 10 மணிக்கு சுயவிபரக் கோவை யுடன் நேரில் சமுகம் தரவும்.
(C-5975)
D.C.M கல்வி நிலையம்
(வேம்படி மகளிர் கல்லூரி அருகாமை)

A/L பெறுபேற்றின் பின்னர்
★ பல்கலைக்கழக அனுமதி கிடைக்காதே என்ற கவலையா?
★ கிடைத்தாலும், உள்நாட்டில் பட்டக்கல்வியை நிறைவுசெய்ய நீண்டகாலம் பிடிக்குமே என்ற கவலையா?
★ வெளிநாட்டில் கற்பதானால் அதிக பணம் செலவாகுமே என்று அஞ்சுகிறீர்களா?
கவலையை விடுங்கள்
50% புலமைப்பரிசில்
& வங்கிக் கடன் வசதிகளுடன்
UK, Australia, New Zealand, Switzerland, Canada, America, Malaysia & Thailand
★ விரும்பிய நாட்டில் விரைவாக பட்டக்கல்வி
★ 50,000 ரூபா வருமானத்துடனான தொழில்பயிற்சியை நிறைவு செய்து
வேலைவாய்ப்புக்கள் பெறும் வரையில் வழிகாட்டுகிறது
சிகரம் கல்வி-தொழில் வழிகாட்டி
Medicine - Engineering – Business Studies – Hotel Management – LAW and Many More Courses
Call/SMS Name & Address to: 077 36 16 798
மேலதிக விபரங்களுக்கு
www.sikaram.lk
கல்விக்கும் தொழிலுக்கும் என்றே ஒரு இணையம்
இல.153, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
(C-5973)

## தனிநாட்டுக்கான...

களின் வாக்குகளையும் மலையகத்தின் அடிப்படைவாதிகளின் வாக்குகளையும் கொழும்பு அடிப்படை வாதிகளின் வாக்குகளையும் பெற்று சிங்களவர்களை பிளவு படுத்தி மீண்டும் ஆட்சியை பிடிக்கலாம் என ஐக்கிய தேசியக் கட்சி கனவு காண்கின்றது. எனினும் அந்தகனவு ஈடேற போவதில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்கெனவே வடக்கில் சிங்களவர்களின் உரிமைகளை மீறி வருகிறது. வடக்கில் தனியான அரசியல் நிர்வாகம் ஒன்றை ஏற்படுத்தும் பின்னணியை கட்டியெழுப்பி வருகின்றது.

1971ஆம் ஆண்டு 20 ஆயிரம் சிங்களவர்கள் வாழ்ந்து வந்தனர். இன்று அந்த மககளை அங்கு மீள் குடியேற விக்னேஸ்வரன் அனுமதிப்பதில்லை. அவர் கொழும்பு பம்பலப்பிட்டியில் வசித்து வருகிறார்.

ஆனால் சிங்களவர்களுக்கு வடக்கு தடைசெய்யப்பட்டுள்ளது. சிங்களவர்களுக்கு மத சுதந்திரம் இல்லை. விரும்பிய இடத்தில் குடியேறும் தேசிய சுதந்திரமில்லை. நாட்டை பிளவுப்படுத்துவதற்கு எதிராகவும் நாட்டை காப்பதற்கும், போதைப் பொருள் விற்பனைக்கு எதிராகவும் ஜாதிக ஹெல உறுய தொடர்ந்தும் போராடும் என்றார். (எ-11)

பொருளியற் கல்லூரி
நாவலர் றோட், யாழ்ப்பாணம். { இரு இடத்திலும் } கே.கே.எஸ்.றோட் இணுவில்.
➢ யாழ்.மாவட்டத்தில் உயர் நல்ல பெறுபேறுகளைப் பெற்ற எம் மாணவர்களை வாழ்த்தி இதுபோல் நீங்களும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றிட ஆரம்பமாகின்றது.
A/L DAY CLASS
கலை, வர்த்தகப்பிரிவு
வாரத்தில் 7 நாட்களும் ➢ ஆரம்பம் :- 27.12.2013
வெள்ளி - 7.30 AM
➢ நீங்கள் நன்கு அறிந்த எமது வழமையான ஆசிரிய குழுவினால்.
➢ உங்கள் அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும்.
Note :- எமது மற்ற நிறுவனமான. BARATHY சித்தன்கேணியிலும் A/L DAY CLASS ஆரம்பமாகின்றது.
(C-5975)

A/L DAYCLASS
கலை, வர்த்தகம்
ஆரம்பம் 30.12.2013
காலை 9 மணிக்கு
(C-5975)
D.C.M | யாழ் நகர்

ஜனவரி 5 காலை 9 மணிக்கு
A/L 2016
கலை, வர்த்தக, தொழில்நுட்ப பிரிவுகள்
(C-5975)
D.C.M | யாழ் நகர்

## மீனவர்களுக்கு...

நாடு அரசாங்கம் இப்போது கடுமையான நிலைப்பாட்டைஎடுத்து இலங்கை மீனவர்களுக்கு எதிராக குற்றப்பத்திரிகையை தயாரித்துள்ளது.

தற்போது புழல் மத்திய சிறையிலுள்ள இந்த மீனவர்கள் நீர்கொழும்பு, புத்தளம் மற்றும் களுத்துறை ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்கள். இவர்கள் ஜனவரி 3 ஆம் திகதிவரையிலும்தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் கன்னியாகுமரி கடலுக்கு அப்பால் கடலில் கரையோர காவற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

தூத்துக்குடி மீன்பிடித்துறைமுக உதவிப் பணிப்பாளர், இலங்கை மீனவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட ரோலர்கள் நல்ல நிலையில் இருப்பதாக உறுதி செய்துள்ளார். (எ-11)

கணினி திருத்தம்
உங்கள் கணனிகள் பழுதடைந்துவிட்டனவா?
உடன் உங்கள் வீடுகளுக்கே வந்து திருத்தி தருகிறோம். லப்டெப் / டெஸ்க்டொப்
அழையுங்கள் : 0779086737
GUNAA BEST PC Computer Repair 52, Hospital Road, Jaffna.



## கண்ணீர் அஞ்சலி

அமரர் சண்முகநாதன் கமலாதேவி

எமது நிறுவன இயக்குநரும் வரலாற்று ஆசிரியருமான RS. சந்திரன் அவர்களின் அன்புத்தாயாரின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நியூட்டன் அக்கடமி தாவடி. | றோயல் அக்கடமி யாழ்ப்பாணம், நல்லூர். | பிரிவால் துயருறும் ஆசிரியர்கள், மாணவர்கள்

(5141)

## மரண அறிவித்தல்

### திருமதி கமலாதேவி சண்முகநாதன்
### (அம்மாப்பிள்ளை)



வீமன்காமம் தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும் சுழிபுரம் பத்திரகாளி கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலாதேவி சண்முகநாதன் அவர்கள் 20.12.2013 அன்று சிவபதடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லப்பா-செல்லம்மா தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற இராமலிங்கம்-வள்ளியம்மை தம்பதியினரின் பாசமிகு மருமகளும் சண்முகநாதன் (சின்னராசா) அவர்களின் பிரியமிகு மனைவியும் உதயகுமாரன் (பிரான்ஸ்), சிவகுமாரன் (இலண்டன்), ஜெயக்குமார் (ஆசிரியர் யா/வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம்), இந்திரகுமார் (உரிமையாளர் அம்பாள் தளபாட நிலையம், சுழிபுரம்), சந்திரகுமார் (ஆசிரியர் யாழ்.இந்துக்கல்லூரி), சுரேஷ்குமார் (தொழில்நுட்ப உத்தியோகத்தர் UN-HABITAT, புதுக்குடியிருப்பு), ஞானகுமார் (ஆசிரியர்-கண்/இராஜவலை இந்து தேசிய கல்லூரி, திகன) ஆகியோரின் அன்புத் தாயாரும்,

செல்வரத்தினம், கமலேஸ்வரி, மகேஸ்வரி (கனடா), முத்துலிங்கம், லோகேஸ்வரி, பத்மநாதன், ருக்மணி, செல்வராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் அமரர் பேரின்பநாயகம், செல்வரத்தினம், தங்கராசா, யோகமலர், பரராஜசிங்கம், அமரர் இராஜேஸ்வரி, யோகநாதன், அமரர் சிவகுமாரன், சிவகுரு, விஸ்வலிங்கம், செல்லப்பா, பறுவதம் மற்றும் அமரர்கள் அப்புத்துரை, தவமணி, அன்னம்மா ஆகியோரின் அன்பு மைத்துனியும், தர்சினி (பிரான்ஸ்), கௌசல்யா (இலண்டன்), சிவகௌரி (ஆசிரியை யா/கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம்), பங்கயற்செல்வி, இந்துமதி, உமாகௌரி (அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம், துணுக்காய்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், மிதுனா (பிரான்ஸ்), வர்ணிகா (பிரான்ஸ்), அஸ்வினி (பிரான்ஸ்), ஹர்சனா (இலண்டன்), மோகிலன் (இலண்டன்), மகிழ்ஜன் (இலண்டன்) சகானா, பூர்விகா, பாவனா, தர்சனன், தினுஜா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (24.12.2013) செவ்வாய்க்கிழமை மதியம் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

ஞானதீபம்
பத்திரகாளி கோவிலடி, சுழிபுரம்.

தகவல் :
குடும்பத்தினர்

(5140)

நத்தார், புதுவருட பண்டிகையை முன்னிட்டு
மாபெரும் சிறப்புத் தள்ளுபடி


அனைத்து விதமான அலுவலகங்கள் மற்றும் வீடுகளுக்குத் தேவையான மர, இரும்பு, அலுமினிய, பிளாஸ்ரிக் தளபாடங்களை எங்குமில்லாதவாறு வியக்கத்தக்க விலைக்கழிவில் பெற்றுக்கொள்ளலாம்.


இச்சிறப்புத் தள்ளுபடி இம்மாதம் இறுதிவரை மட்டுமே.
230, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(ஆனைப்பந்திச் சந்திக்கும் இலுப்பையடிச் சந்திக்கும் இடையில்.)
தொ.பே : 0773583879, 0778314201
(C-5971)

Free Web Network Hardware Multimedia
Type Free <NAME>& send to 772 395 895
OL-AL-ICT
(C-5970)
க.பொ.த உயர்தரத்தில் A சித்தியைப்பெற்றுள்ளீர்களா, பின்வரும் கற்கைநெறிகளிற்கு 100% வரை புலமைப்பரிசில்கள்
CIMA-UK, BIT-University of Colombo
COMPUTER ENGINEERING USA
க.பொ.த உயர்தரத்தில் சித்தியடையவில்லையா? கவலையை விடுங்கள். வேலைவாய்ப்பு அதிகமுள்ள கொழும்பு பல்கலைக்கழக தகவல் தொழில்நுட்ப டிகிறி, அமெரிக்க கணினிப்பொறியியலாளர் கற்கை நெறிகள் உங்களை உயர்ந்த நிலைக்கு உயர்த்தும்.
புலமைப்பரிசிலிற்கு <NAME> <Course><AL Result> என்பவற்றை type செய்து 772395895க்கு sms செய்யவும்.மேலதிக விபரங்கள் யாழ் பல்கலைக்கழகத்திற்கு அண்மையில் உள்ள MCS வளாகத்தில்

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.12.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org